TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

# இலங்கையில் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை உத்தேச சட்டவாக்கம் மற்றும் கொள்கைச் சட்டகம் பற்றிய பகுப்பாய்வு

நவம்பர் 2019

**ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெ'னல் ஸ்ரீலங்கா (TISL) அமைப்பானது சுயேட்சையானதும் இலாப நோக்கமற்றதும் பக்கச்சார்பற்றதுமான அரசசார்பற்ற நிறுவனமாகும். ,இலங்கையில் அரசாங்கம், அரசியல், வர்த்தகம், சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சகல பிரஜைகளினதும் அன்றாட வாழ்க்கை ஊழல் அற்றதாக உருவாக்குவதற்கான தூரநோக்குடன் செயற்பட்டு வருகின்றது. இவ் அமைப்பானது பேர்லினை அடிப்படையாகக் கொண்ட ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெ'னல் அமைப்பின் இலங்கையில் முழுமையாக தேசிய ரீதியில் அங்கீகாரம் பெற்ற ஒரு அமைப்பாக விளங்குகிறது.**

**www.tisrilanka.org**

ஆசிரியர் - மகேரி ஹேரத்

வடிவமைப்பு - ஹரித்த தஹநாயக்க

இவ் அறிக்கையில் அடங்கியுள்ள தகவல்கள் அனைத்தும் துல்லியமாக சரிபாக்கப்பட்டுள்ளதுடன் இதிலடங்கியுள்ள அனைத்த தகவல்களும் நவம்பர் 2019 வரை சரியானவை என நம்பப்படுன்றது. எவ்வாறாயினும் இவ்வறிக்கையிலுள்ள தகவல்களை வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்துவதனால் ஏற்படும் விளைவுகளை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்ந'னல் ஒருபோதும் பொறுப்பேற்காது என்பதனையும் திட்டவட்டமாக அறியத்தருகின்றது.

ISBN: 978-955-1281-95-3

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்ந'னல் ஸ்ரீலங்கா
5/1 எலி பேங்க் வீதிஇ
கொழும்புஇ
இலங்கை.

தொலைபேசி இல : +94 0114369781
தொலைநகல் : +94 011 2 501 707

tisl@tisrilanka.org
www.tisrilanka.org

facebook.com/tisrilanka
twitter.com/tisrilanka

# இலங்கையில் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை உத்தேச சட்டவாக்கம் மற்றும் கொள்கைச் சட்டகம் பற்றிய பகுப்பாய்வு

நவம்பர் 2019

# சுருக்கக் குறியீடுகள்

| | |
|---|---|
| APG | பணம் தூய்தாக்கல் பற்றிய ஆசிய பசுபிக் குழு |
| CIABOC | இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரணை செய்வதற்கான ஆணைக்குழு |
| CISLAC | சிவில் சமூகச் சட்டவாக்க ஆதரித்து வாதாடல் மையம் |
| CSOs | சிவில் சமூக நிறுவனங்கள் |
| FCID | நிதிக் குற்றங்கள் விசாரணைப் பிரிவு |
| FIU | நிதிப் புலனாய்வுப் பிரிவு |
| GFAR | சொத்து மீட்புக்கான உலகளாவிய மன்று |
| MOU | புரிந்துணர்வு உடன்படிக்கை |
| PEP | அரசியல் தொடர்புடைய நபர் |
| RTI | தகவலறியும் உரிமை |
| SDGs | நீடுறுதிமிக்க அபிவிருத்தி இலக்குகள் |
| START | அரச சொத்துக்களை மீட்பது பற்றிய விசேட ஜனாதிபதி செயலணி |
| TISL | இலங்கை டிரான்ஸ்பேரன்சி இண்டர்நேஷனல் |
| UNCAC | ஊழலுக்கெதிரான ஐநா சமவாயம் |
| UWO | விளக்கப்படாத செல்வக் கட்டளை |

# உள்ளடக்கங்கள்


| | |
|---|---|
| பூரண தொகுப்பு | 01 |
| 1. அறிமுகம் | 02 |
| 2. இலங்கையில் தற்போது அமுலில உள்ள சட்டங்களும் அவற்றின் பலவீனங்களும். | 03 |
| 3. இலங்கையில் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை உத்தேச சட்டவாக்கம் மற்றும் கொள்கைச் சட்டகத்தின் பின்புலம் (கொள்கை) | 04 |
| 4. சட்டவாக்கச் சட்டகத்தில் உள்ள பிரதான ஏற்பாடுகளின் பகுப்பாய்வு | 07 |
| 5. முடிவு | 18 |

| | |
|---|---|
| இணைப்பு 1 - இலங்கையின் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் உத்தேச சட்டத்தின் கொள்கை மற்றும் சட்டவாக்கச் சட்டகம் | 19 |
| இணைப்பு 2 - ஊழல் சம்பவங்களில் கைப்பற்றப்பட்ட திருடப்பட்ட சொத்துக்களின் உடைமையகற்றல் மற்றும் மாற்றலுக்கான புதுயுசு கோட்பாடுகள் | 29 |
| இணைப்பு 3 - சொத்து மீட்புத் தொடர்பான ருஜேஸயுஊ அத்தியாயம் - அத்தியாயம் 5 | 31 |

# பூரண தொகுப்பு

இலங்கையில் குற்றச் செயல்களினால் பெறப்பட்டவை உத்தேச சட்டவாக்கம் மற்றும் கொள்கைச் சட்டகம் பற்றிய இச்சுருக்கமான பகுப்பாய்வு, இவ்வாறான குற்றச்யெல்களினால் பெறப்பட்டவை பற்றிய சட்டத்தில் ஒருங்கிணைக்கப்படவேண்டிய திருடப்பட்ட சொத்துக்கள் மற்றும் பிரதான மூலகங்களின் மீட்புப் பற்றிய ஒரு பூரணமான சட்டத்திற்கான தேவையினைக் கோடிட்டுக் காட்டுகின்றது. சட்டத்தின் தவறான பயன்பாட்டுக்கு இட்டுச் செல்லக்கூடிய குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு மனித உரிமைகள் கரிசனைகள் போதிய அளவிற்குப் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்காக, சட்டத்தினை இயற்றுவதற்கு முன்னர் பரந்த பங்கீடுபாட்டாளர் கலந்துரையாடலின் முக்கியத்துவத்தினையும் இது கருத்திற்கொள்கின்றது.

திருடப்பட்ட சொத்துக்களை மீட்டல் தொடர்பாக இலங்கையில் தற்போது உள்ள சட்டங்களை இந்தப் பகுப்பாய்வுமிகு சுருக்க விளக்கம் பகுத்தாராய நாடுகின்றது என்பதுடன் அவ்வாறான குற்றச்செயல்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்களைச் செயற்திறனுடன் மீட்பதில் காணப்படும் குறைபாடுகளையும் கோடிட்டுக் காட்டுகின்றது. உள்நாட்டில் இடம்பெறும் சம்பவங்களில் இக்கொள்ளையிடப்பட்ட சொத்துக்களை முடக்கிவைத்தல், பறிமுதல் செய்தல் மற்றும் கைப்பற்றுதல் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு பல சட்டங்கள் இருக்கின்ற போதிலும் இலங்கையில் இருந்து அகற்றப்பட்டு கடல்கடந்த மையங்களில் ஒளித்துவைக்கப்பட்டுள்ள இக்குற்றச்செயல்களினால் பெறப்பட்ட பொருட்களைச் செயற்திறனுடன் கைப்பற்றுதல், மீள ஒப்படைத்தல் மற்றும் அதனைத் தொடர்ந்து முகாமைத்துவம் செய்தல் ஆகியவற்றினை உறுதிப்படுத்தக்கூடிய பரிபூரணமான பொறிமுறை இலங்கையில் இல்லாமல் இருக்கின்றது. மீட்கப்பட்ட சொத்துக்களை இவ்வாறு மீள வழங்குதல் மற்றும் முகாமைத்துவம் செய்தலுக்கான ஒரு பொறிமுறையினை வழங்குவதற்கு உத்தேச குற்றச் செயல்களினால் பெறப்பட்ட பொருட்கள் சட்டத்தின் (கொள்கை) அண்மையில் வரையப்பட்ட கொள்கை மற்றும் சட்டவாக்கச் சட்டகம் நாடுகின்றது. குற்றச்செயல்கள் சட்டமூலத்தின் ஏதாவது எதிர்காலத் தொடர்ச்சிகளை வரைகையிலும் வாதிடுகையிலும் கருத்திற்கொள்ளப்படவேண்டிய பிரதான பரப்புக்களைக் கோடிட்டுக் காட்டி இந்தக் கொள்கை பகுப்பாய்வு செய்யப்படும்.

திருடப்பட்ட சொத்துக்களை மீட்டல் பற்றி டிரான்ஸ்பேரன்சி இண்டர்நேசனல் இலங்கை (வுஜளுடு) நடத்திய ஆய்வினை இந்த அறிக்கை உள்ளீடாகக் கொண்டு கொள்கையினை வரைவதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் வரைபுக் குழு உறுப்பினராக இருந்தமையினால் பெறப்பட்ட அனுபவங்களில் இருந்தும் நுழைபுலங்களைப் பெற்றுக்கொள்கின்றது. சம்பந்தப்பட்ட பங்கீடுபாட்டாளர்களை ஈடுபடுத்துகையில் சட்ட வரைஞர்கள் கருத்திற்கொள்ளவேண்டிய திருடப்பட்ட சொத்துக்களை மீட்டல் தொடர்பாகக் காணப்படும் சில சர்ச்சைக்குரிய பரப்புக்களைக் இந்த ஆக்கம் கவனத்திற்கொள்கின்ற அதேவேளை, கொள்கையில் முன்மொழியப்பட்டுள்ள ஏற்பாடுகளின் சாதகமான அம்சங்களை இந்த ஆக்கம் கோடிட்டுக்காட்டி அந்த ஏற்பாடுகளைப் பகுப்பாய்வு செய்கின்றது.

திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கு நாடும் ஏனைய நாடுகளில் பயன்படுத்தப்படுகின்ற பல முன்னேற்றகரமான ஏற்பாடுகளைக் கொள்கை உள்ளடக்குகின்ற அதேவேளை, இவ்வாறான கருத்தியல்கள் அதிகாரத்தில் இருப்பவர்களினால் தவறாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதற்காக போதிய பாதுகாப்புக்களுடன் இக்கருத்தியல்கள் உருவாக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்காக வரைதல் கட்டத்தின் போது பல்பங்கீடுபாட்டாளர் கலந்துரையாடலை நடத்துமாறு அறிக்கை அழைப்பு விடுக்கின்றது. இவ்வாறான கலந்தாலோசிப்புக்களின் பின்னர் தாமதமின்றிச் சட்டத்தினை இயற்றுமாறு அறிக்கை சட்டவாக்குனர்களை அழைக்கின்றது.

# 1. ஆறீமுகுழ்

குற்றச் செயல்களின் காரணத்தினால் ஒரு நாடு இழந்த சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு, உரிமையாக்கப்பட்டு, அச்சொத்துக்களின் உரிமைக்குரிய நாட்டிற்கு அவை கொண்டுவரப்பட்டு அச்சொத்துக்களின் சட்டபூர்வமான உரிமையாளர்களிடம்[1] அவை ஒப்படைக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தும் செயன்முறையே திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதாகும். இது ஒரு சிக்கலான செயன்முறையாகும் என்பதுடன் மூல நாடுகள், இடைமாற்ற நாடுகள் மற்றும் சென்று சேரவேண்டிய நாடுகள் என அடையாளம் காணப்பட்டுள்ள பல நாடுகளின் சட்ட அமுல்படுத்தல் முகவர்களின் ஒருங்கிணைக்கப்பட்ட முயற்சிகளை இச்செயன்முறை தேவைப்படுத்துகின்றது.[2] இந்தச் செயன்முறையின் அடிப்படையினை உருவாக்கும் இரண்டு பிரதான கோட்பாடுகளாவன, குற்றச் செயல்கள் எப்போதுமே தண்டிக்காமல் விடப்படலாகாது என்பதும் இக்களவாடப்பட்ட சொத்துக்களின் நன்மைகள் ஈற்றில் அவற்றின் உண்மையான உரிமையாளர்களுக்கு நட்டஈட்டினை வழங்கி அவர்களுக்கு நன்மையினையும் வழங்கவேண்டும் - குற்றச் செயல்களினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் இரண்டாம் நிலையில் பாதிக்கப்பட்டவர்கள், அதாவது: சொத்து எச்சமூகத்தில் இருந்து அகற்றப்பட்டதோ அந்தச் சமூகம்.[3]

களவாடப்பட்ட சொத்துக்களின் மீட்பினை ஆளுகை செய்யும் பரிபூரணமான சட்டகம் இலங்கையில் இல்லாமல் இருக்கின்றது.[4] உள்நாட்டிலே சொத்துக்களை முடக்கிவைப்பதற்கும் குற்றச் செயல்களினால் பெறப்பட்டவற்றினைக் கைப்பற்றி அவற்றினை மீட்பதற்கும் வெவ்வேறு சட்டங்களில் வெவ்வேறு பொறிமுறைகள் விரவிக் காணப்படுகின்ற அதேவேளை[5], களவாடப்பட்டு நாட்டிற்கு வெளியே வைத்திருக்கப்படும் சொத்துக்களைக் கைப்பற்றி மீட்பதற்கான ஒரு செயன்முறை இல்லாமல் இருக்கின்றது. மேலும் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் கைப்பற்றப்பட்டு மீட்கப்பட்ட இலங்கைச் சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கு ஒரு பொறிமுறை இல்லாமல் இருக்கின்றது. திருடப்பட்ட சொத்துக்களின் சிவில் மீட்புக்கான பரிபூரணமான செயன்முறை ஒன்றும் இலங்கையில் இல்லாமல் இருக்கின்றது.[6] வெளிநாட்டு நியாயாதிக்கங்களில் உள்ள திருடப்பட்ட சொத்துக்களை முடக்கிவைப்பதற்கு உள்ள ஒரே பொறிமுறையாக பரஸ்பர சட்ட உதவிச் சட்டகம் காணப்படுகின்றது.

---

1.Jean-Pierre Brun, Larissa Gray, Clive Scott, Kevin M. Stephenson, சொத்து மீட்புக் கைநூல் - நடைமுறைப்படுத்துனர்களுக்கான வழிகாட்டி (2011, the International Bank for Reconstruction and Development / The World Bank), பக்கம் 2

2. மேலே குறிப்பிடப்பட்டுள்ளது.

3. டாக்டர். ஜுவனிடா ஒலயா, கொடிஜோ அடிஸ்சோ மற்றும் அஞ்சா ரொத்இ Repairing social damage out of corruption cases: opportunities and challenges as illustrated in the Alcatel Case in Costa Rica, < http://14iacc.org.s3-website.eu-central-1.amazonaws.com/wp-content/uploads/SocialDamagePaper20.01.2011.pdf > பக்க இல-20 - அணுகப்பெறப்பட்டது 30th August 2019

4. சங்கீதா குணரத்ன, மஹேசி ஹேரத் மற்றும் அசோகா ஒபேசேகர CSO GFAR report on Sri Lanka < http://www.tisrilanka.org/wp-content/uploads/2017/12/Sri-Lanka-Asset-Recovery-CSO-Report-final.pdf > - அணுகப்பெறப்பட்டது ழுெ 30வா ஆகஸ்ட் யுரபரளவ 2019

5. உதாரணமாக, இலங்கை குற்றவியல் நடைமுறைக் கோவையின் பிரிவு 425 மற்றும் 431

6. திருடப்பட்ட சொத்துக்களின் சிவில் மீட்பு அல்லது குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான சொத்து மீட்பு ஆகியவை குற்றவியல் வழக்குத்தொடுப்புக்களுக்கு மேலதிகமாக குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை மீட்பதற்காக நாடுகளினால் பயன்படுத்தப்படுகின்ற ஒரு பொறிமுறையாகும். இது பொதுவாக நிரூபிப்புத் தேவைப்பாட்டிற்கான குறைந்த பொறுப்பினையே கொண்டுள்ளது (நிரூபிப்பின் நிகழ்தகவுகளின் நியமத்தின் சமனிலையின் மீது குற்றவியல் நடத்தை நிலைநாட்டப்படவேண்டும்). மேலதிக தகவல்களுக்கு அடிக்குறிப்பு 33 இனை உசாவவும்

# 2. இலுஞ்ஐகுயீல் துறுபேர்து ஆமுலுீலு ஊளுஞ்ளு சுட்டுஞ்குளும் ஆவுறுறீனு புலுவீனுஞ்குளும்.

திருடப்பட்ட சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்கும் கையகப்படுத்துவதற்கும் மீளஒப்படைப்பதற்கும் இலங்கையில் உள்நாட்டு மட்டத்தில் வெவ்வேறு சட்டங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. திருடப்பட்ட சொத்துக்களை மீட்பது பற்றிய பரிபூரணமான சட்டம் ஒன்று இலங்கையில் இல்லாமல் இருக்கின்றது.[7] 1979 ஆம் ஆண்டின் (பிரிவு. 6 (1)(ஈ)) 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் (தற்காலிக ஏற்பாடுகள்), 2006 ஆம் ஆண்டின் (பிரிவுகள் 24,25,26) 6 ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம், வங்கிச் சேவை தொடர்பான சட்டங்கள் (உதா: 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கிச் சேவைச் சட்டத்தின் பிரிவுகள் 57 மற்றும் 67), குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவை மற்றும் 1870 ஆம் ஆண்டின் சுங்கக் கட்டளைச்சட்டம் (உதா: சுங்கக் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 125) போன்ற குறிப்பிட்ட சில சட்டங்கள் சொத்துக்களைப் பறிமுதல் செய்வது தொடர்பானவையாகும். உதாரணமாக, குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவையின் பிரிவுகள் 60 மற்றும் 61 ஆகியவை, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபர் ஒருவர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரின் சொத்துக்களை நீதிமன்றம் பறிமுதல் செய்வதற்கு அனுமதி வழங்குகின்றது. பணம் தூய்தாக்கல் குற்றச்செயலினைப் பொறுத்த அளவில் சொத்துக்களை முடக்குவதற்கு 2006 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம் ஏற்பாடுகளை வழங்குகின்றது (பிரிவுகள் 6 – 12).[8]

பறிமுதல் போலவே, கையகப்படுத்துவதற்கும் என தனியான சட்டம் ஒன்று இல்லை. பணம் தூ ய்தாக்கல் குற்றத்தினைப் பொறுத்த அளவில், எச்சொத்துக்கள் தொடர்பில் பணம் தூய்தாக்கல் குற்றம் இழைக்கப்பட்டதோ அச்சொத்துக்களைப் பறிமுதல் செய்வதுடன் பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம் தொடர்புபடுகின்றது (பிரிவு 13 – 16). மேற்குறிப்பிடப்பட்டவற்றிற்கு அப்பால், குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினைக் கையகப்படுத்துவதற்கு உள்நாட்டில் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம்) பொது ஏற்பாடுகள் (உதா: பிரிவுகள் 29,426,431,433) பிரயோகிக்கப்படுகின்றன.[9]

உள்நாட்டுக் குற்றவியல் சம்பவங்களில் மீளளிப்பு எனும் விடயம் குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவையின் கீழ் கையாளப்படுகின்றது. ஆனால் ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் கீழ் அடையாளம் காணப்பட்ட விதத்தில் அது நியாயாதிக்கங்களுக்கு இடையிலான மீளளிப்பினை நேரடியாகக் கையாளுவதில்லை (UNCAC).[10] கோவையின் பிரிவுகள் 425 மற்றும் 431 ஆகியவை நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படும் சட்டரீதியான உரிமையாளரிடம் திரும்ப ஒப்படைக்கப்படுவதற்காக வழக்கு விசாரணைக்காகக் காத்திருக்கையிலும் அதன் பின்னரும் குற்றவியல் வழக்குத்தொடுப்பின் விடயப் பொருளாக இருக்கும் சொத்துத் தொடர்பானதாகும்.

தற்போது நடைமுறையில் உள்ள சட்டம் மீட்கப்பட்ட சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதற்கான பொறிமுறையுடன் தொடர்புபடுவதில்லை. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெவ்வேறு சட்டங்கள் நிறுவப்பட்டுள்ள வெவ்வேறு திட்டங்களைக் கொண்டுள்ளன.

---

7. திருடப்பட்ட செல்வம், இலங்கையில் சொத்து மீட்பிற்கான சாத்தியம், டெய்லிநியூஸ்இ
< http://www.dailynews.lk/2017/12/20/features/137783/stolen-wealth > - 26 செப்டெம்பர் 2019 இல் அணுகப்பட்டது
8. சங்கீதா குணரத்ன, மஹேசி ஹேரத் மற்றும் அசோகா ஒபேசேகர இலங்கை பற்றிய ஊஞுழு புகுயுசு அறிக்கை
< http://www.tisrilanka.org/wp-content/uploads/2017/12/Sri-Lanka-Asset-Recovery-CSO-Report-final.pdf, - 2019 ஆகஸ்ட் 30 இல் அணுகப்பட்டது. குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவையின் பிரிவு 217 இன் கீழ் நபர் ஒருவருக்கு எதிராக இயங்கும் நீதிமன்றம் அந்த நபருக்குப் பணத்தினைச் செலுத்துமாறு, அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை விநியோகிக்குமாறு கட்டளையிடலாம். இதே கோ-வையின் பிரிவு 218, பிரிவு 217 இன் கீழ் வழங்கப்படும் கட்டளையினைத் தொடர்ந்து தீர்ப்பு - இனால் பறிமுதல் செய்யப்படுவதில் இருந்-தும் விலக்களிக்கப்பட்டுள்ள பொருட்களைக் குறிப்பிடுகின்றது. தரனபஅநவெ-உசநனவைழச தீர்ப்புக் கடனாளர் (உதா: தீர்ப்புக் கடனாளரின் அல்லது அவரின் மனைவியின் மற்றும் பிள்ளைகளின் அவசியமான அணியும் ஆடைகள், கட்டில்கள் மற்றும் கட்டில் போர்வைகள் பறிமுதலு-க்கு உட்படாது).
9. சங்கீதா குணரத்ன, மஹேசி ஹேரத் மற்றும் அசோகா ஒபேசேகர - இலங்கை பற்றிய CSO GFAR அறிக்கை
<http://www.tisrilanka.org/wp-content/uploads/2017/12/Sri-Lanka-Asset-Recovery-CSO-Report-final.pdf > - 2019 ஆகஸ்ட் 30 இல் அணுகப்பட்டது.
10. சங்கீதா குணரத்ன, மஹேசி ஹேரத் மற்றும் அசோகா ஒபேசேகர - இலங்கை பற்றிய CSO GFAR அறிக்கை
<http://www.tisrilanka.org/wp-content/uploads/2017/12/Sri-Lanka-Asset-Recovery-CSO-Report-final.pdf > - 2019 ஆகஸ்ட் 30 இல் அணுகப்பட்டது.

# 3. இலுஞ்ஐகுயீல் குற்றுச்சேயுல்குளீனுர்ல் பேறுப்புட்டுஐவு ஊத்துேசு சுட்டுவுர்க்கும் முற்றும் கேர்ளுஞ்ஐகுச் சுட்டுகுத்துீனு பீனுபுலும் (கேர்ளுஞ்ஐகு)

குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை பற்றிய சட்டத்தினை வரைகையில், ஊழலுக்கு எதிரான ஐநா சமவாயத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ள காரணத்தினாலும் இக்கடப்பாட்டினை அரசியலமைப்பு ரீதியாக அங்கீகரிக்கும் விசேட நடவடிக்கையினை எடுத்துள்ள காரணத்தினாலும், சொத்துக்களைப் பறிமுதல் செய்தல், கையகப்படுத்தல், திருப்பிக் கொடுத்தல், மீளளித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் ஆகியவற்றினை உள்ளடக்கும் பரிபூரணமான பொறிமுறை உருவாக்கப்படுவதை இலங்கை உறுதிப்படுத்தவேண்டும்.[11] திருடப்பட்ட பொருட்களைத் திருப்பிக் கொடுத்தலைச் சமவாயத்தின் அடிப்படைக் கோட்பாடாக UNCAC அங்கீகரிக்கின்றது.[12] அத்துடன் சமவாயத்தின் சம்பந்தப்பட்ட உறுப்புரைகளில் அதிகமானவை கட்டாய அமுல்படுத்தலைத் தேவைப்படுத்துகின்றன.[13]

கடப்பாடுகளின் மாறுபடுகின்ற தரங்களைச் சமவாயம் அடையாளம் காண்பதுடன் அவற்றினைக் கட்டாயமான ஏற்பாடுகள் எனவும் கட்டாயமற்ற ஏற்பாடுகள் எனவும் வேறுபடுத்துகின்றது. கட்டாய ஏற்பாடுகள் திட்டவட்டமாக அல்லது சில குறிப்பிட்ட நிபந்தனைகள் பூர்த்திசெய்யப்படுகையில் சட்டமியற்றுவதற்கான கடப்பாடுகளைக் கொண்டுள்ளது.[14] கட்டாயமற்ற ஏற்பாடுகள் இரண்டு வழிகளில் குறித்துரைக்கப்படுகின்றன – “அரசு கட்டாயம் கருத்திற்கொள்ளவேண்டிய” அல்லது அரசு “ஏற்றுக்கொள்ள முயற்சி எடுக்கவேண்டிய” சட்டவாக்கங்கள் மேலும் “ஏற்று நடைமுறைப்படுத்தலாம்” எனும் அர்த்தத்திற்குச் சமமான சொற்பதத்தினைக் கொண்ட முற்றுமுழுவதும் தெரிவுக்குரிய ஏற்பாடுகள்.[15] பின்வருவன அத்தியாயம் V இன் கீழ் சொத்து மீட்புத் தொனிப்பொருள் தொடர்பாக ருஊேயுஊ இல் உள்ளடங்கியுள்ள கட்டாய ஏற்பாடுகளின் தொகுப்பாகும்:

- தனது நீதிமன்றத்தில் மற்றுமொரு நாடு சிவில் நடவடிக்கையினை முன்னெடுக்க அனுமதித்தல். இதனால் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை மற்றுமொரு நாட்டினால் நேரடியாக மீளப் பெற்றுக்கொள்ள முடியும்.
- ஊழல் மூலமாக ஏற்படுத்தப்பட்ட தீங்கிற்காக உள்நாட்டு நீதிமன்றங்கள் ஏனைய அரசுகளுக்கு நட்டஈட்டினை வழங்குவதனை இயலுமாக்கல்
- வெளிநாட்டு முடக்கல்கள், கைப்பற்றல்கள் மற்றும் பறிமுதல் கட்டளைகள் ஆகியவற்றினை அங்கீகரிப்பதற்கு உள்நாட்டு அதிகாரங்களுக்கு அனுமதியளித்தல்
- பறிமுதல் செய்யப்பட்ட சொத்தினை அதன் சட்டபூர்வமான உரிமையாளர்களிடம் கையளித்தல்.
- குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை மீளப் பெறுவதற்கு அவ்வாறான உதவியினை வேண்டும் நாடுகளுக்கு உதவி வழங்கல்.
- குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை மாற்றுவதனைத் தடுத்து எதிர்ப்பதற்கு ஏனைய நாடுகளுடன் ஒத்துழைத்து அவ்வாறு பெறப்பட்டவற்றினை மீளப்பெறல்.

ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தில் கையொப்பதாரியாக இருப்பதற்கு மேலதிகமாக, இலங்கை அரசியலமைப்பின் உறுப்புரை 156யு (1) (இ) பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

---

11. அரசியலமைப்பின் உறுப்புரை 156A (1) (c)
12. ஊழலுக்கெதிரான சமவாயம் - உறுப்புரை 51 <https://www.unodc.org/documents/brussels/UN_Convention_Against_Corruption.pdf> 2018 நவம்பர் 18 இல் அணுகப்பட்டது போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் உடன்படிக்கை விவகாரங்களுக்கான பிரிவு, ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் அமுல்படுத்தலுக்கான சட்டவாக்க வழிகாட்டி (௵ 5) 196.
13. TISL Pledge Tracker <http://www.tracker.tisrilanka.org/about/ > 2018 நவம்பர் 18 இல் அணுகப்பட்டது
14. போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் உடன்படிக்கை விவகாரங்களுக்கான பிரிவு, ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் அமுல்படுத்தலுக்கான சட்டவாக்க வழிகாட்டி (இரண்டாவது திருத்திய பதிப்புஇ 2012) பக்.4
15. போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் உடன்படிக்கை விவகாரங்களுக்கான பிரிவு, ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் அமுல்படுத்தலுக்கான சட்டவாக்க வழிகாட்டி (இரண்டாவது திருத்திய பதிப்புஇ 2012) பக்.4

“இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு ஆணைக்குழுவினை நிறுவுவதற்குப் பாராளுமன்றம் சட்டத்தினால் ஏற்பாட்டினை வழங்கலாம். அவ்வாறான சட்டங்கள் ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தினை அமுல்படுத்துவதற்கான மற்றும் இலங்கை தரப்பாக இருக்கின்ற ஊழலினைத் தடுப்பதுடன் தொடர்புடைய வேறு ஏதாவது சர்வதேச சமவாயத்தினை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.”[16]

2017 ஆம் ஆண்டிலே சொத்துக்களை மீட்டல் பற்றிய உலகளாவிய மன்றின் ஆரம்ப நிகழ்வில் இலங்கையே கவனக்குவிப்பினைப் பெற்ற நாடாக இருந்தது.(GFAR).[17] உலக அவதானத்திற்கான காரணம், பாரிய ஊழல்கள், பணம் தூய்தாக்கல் மற்றும் திருடப்பட்ட சொத்துக்களை மீட்டல் ஆகியவை தொடர்பான வழக்குத் தொடுப்புக்களை முன்னுரிமைப்படுத்துவதற்கான நோக்கத்தினைக் கோடிட்டுக்காட்டுவதற்காக இங்கிலாந்தின் லண்டன் நகரத்தில் 2016 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஊழலுக்கெதிரான உச்சிமாநாட்டில் இலங்கை வழங்கிய கடப்பாடுகளில் இருந்து உருவாகியது.[18] இலங்கையினைத் தவிர, நைஜீரியா, டுனீசியா மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளும் GFAR ஆரம்ப வைபவத்தில் கவனக் குவிப்பினைப் பெற்றுக்கொண்ட ஏனைய நாடுகளாகும்.

“சொத்துக்களை அடையாளம் கண்டு அவை எங்கேயுள்ளன என்பதைக் கண்டறியும் பொறுப்பினைக் கொண்ட விசாரணையாளர்கள் மற்றும் வழக்குத்தொடுனர்களை வலுவூட்டுவதற்கான ஒரு தளத்தினை வழங்கி அச்சொத்துக்களை மீட்டு அவற்றினைத் திரும்ப ஒப்படைப்பதில் நிதி மையங்களிடமிருந்து அவசியமான ஒத்துழைப்பினைப் பெறுவதே இந்த மன்றின் நோக்கமாக இருந்தது. GFAR இற்கான வழங்கக்கூடியவைகளுள் நான்கு கவனக்குவிப்பு நாடுகளும் சம்பவங்களில் முன்னேற்றத்தினை அடைதல், தொழில்நுட்ப அமர்வுகள் மூலம் அதிகரித்த ஆற்றல், சொத்து மீட்புச் சம்பவங்களை முன்னேற்றுவதற்கு புதுப்பிக்கப்பட்ட கடப்பாடு மற்றும் சம்பந்தப்பட்ட நியாயாதிக்கங்களின் மத்தியில் அதிகரித்த ஒத்துழைப்பு ஆகியவை உள்ளடங்குகின்றன.”[19]

இந்த மன்றிலே இலங்கைத் தூதுக் குழு சொத்து மீட்புச் சம்பவங்களை மேம்படுத்துவதற்கான மற்றும் குற்றச்செயல்களினால் பெறப்படுபவை தொடர்பான ஒரு சட்டவாக்கச் சட்டகத்தினை உருவாக்குவதற்கான அதன் கடப்பாடுகளைப் புதுப்பித்தது.[20] இந்தச் செயன்முறையில் சிவில் சமூக நிறுவனங்கள் (CSO) பிரதான பங்காளர்கள் என்பது அங்கீகரிக்கப்பட்டதுடன் இந்தச் சட்டகத்தின் வரைபில் ஓரங்கமாக இருப்பர் என்பதுவும் அங்கீகரிக்கப்பட்டது.[21]

GFAR இன் முக்கியமான பெறுபேறுகளில் ஒன்று ஊழல் சம்பவங்களில் கைப்பற்றப்பட்ட திருடப்பட்ட சொத்துக்களின் உடைமையகற்றல் மற்றும் அவற்றினை மாற்றல் ஆகியவற்றிற்கான புகுயுசு கோட்பாடுகளின் உருவாக்கம் அமைகின்றது.[22] இந்தப் பத்துக் கோட்பாடுகளும் “சொத்துக்களை மீள ஒப்படைப்பதில் சம்பந்தப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு ஆகியவற்றிற்கான அணுகுமுறைகளையும் பொறிமுறைகளையும் கையாள்வதுடன் சொத்துக்களை மீளஒப்படைப்பதற்கான வெளிப்படைத்தன்மை மற்றும் வகைப்பொறுப்பு ஆகியவற்றினை வலுப்படுத்துவதையும் சம்பந்தப்படுத்துகின்றது.[23] மீட்கப்பட்ட திருடப்பட்ட சொத்துக்களின் முகாமைத்துவத்தில் உள்ள மிகச் சிறந்த நடைமுறைகளாக இந்தக் கோட்பாடுகள் படிப்படியாக உலக அங்கீகாரத்தினைப் பெற்று வருகின்றன. உதாரணமாக, நைஜீரியாவில் சொத்து மீட்பில் பணியாற்றிவரும் முன்னணிச் சிவில் சமூக நிறுவனமான சிவில் சமூக சட்டவாக்க ஆதரித்து வாதாடல் மையம் (CISLAC) GFAR கோட்பாடுகளுக்கு எதிராக நைஜீரியாவின் சொத்து மீட்புச் செயன்முறையின் இயைபுறல் மட்டத்தினை மதிப்பீடு செய்வதற்காகத் தற்போது இந்த புகுயுசு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு கண்காணிப்புப் பொறிமுறையினை உருவாக்கியுள்ளது.

குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை பற்றிய உத்தேச சட்டவாக்க மற்றும் கொள்கைச் சட்டகத்தினை வரையும் பணியினை அரச சொத்துக்களை மீட்டல்

16. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 156 அ
17. திருடப்பட்ட சொத்துக்களை மீட்டல் முன்னெடுப்பு, சொத்து மீட்டல் பற்றிய உலகளாவிய மன்று (GFAR), < https://star.worldbank.org/about-us/global-forum-asset-recovery-gfar >
18. இங்கிலாந்தின் ஊழலுக்கெதிரான உச்சிமாநாடு 12, மே 2016, இலங்கையின் கடப்பாடுகள் <https://assets.publishing.service.gov.uk/government/uploads/system/uploads/attachment_data/file/522731/Sri_Lanka.pdf> - 2019 nrg;nlk;gu; 26 ,y; mZfg;gl;lJ
19. திருடப்பட்ட சொத்து மீட்பு முன்னெடுப்பு, சொத்து மீட்புப் பற்றிய உலகளாவிய மன்று(GFAR), < https://star.worldbank.org/about-us/global-forum-asset-recovery-gfar >
20. GFAR மாநாட்டு வீடியோக்கள்: பத்திரிகையாளர் மாநாடு, டிசம்பர் 6 14.35sec - 15.00sec <https://star.worldbank.org/content/gfar-press-conference-december-6>
21. GFAR மாநாட்டு வீடியோக்கள்: நிறைவுசெய்யும் வட்டமேசை மாநாடு, டிசம்பர் 6, 22.42sec <https://star.worldbank.org/content/gfar-closing-round-table-december-6> , GFAR khehl;L tPbNahf;fs;: gj;jpupifahsu; khehL> டிசம்பர் 6 14.35sec - 15.00sec <https://star.worldbank.org/content/gfar-press-conference-december-6>
22. சொத்து மீட்புப் பணித்துறை அறிவிப்பு பற்றிய உலகளாவிய மன்று <https://star.worldbank.org/sites/star/files/20171206_gfar_communique.pdf>
23. GFAR Communique, < https://star.worldbank.org/sites/star/files/20171206_gfar_communique.pdf> p.4

பற்றிய விசேட ஜனாதிபதி செயலணி (START) 2018 ஜனவரியில் ஆரம்பித்துள்ளது. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் (CIABOC) பிரதிநிதிகள், நிதிக் குற்றச்செயல்கள் விசாரணைப் பிரிவின் (FCID) பிரதிநிதிகள், நிதிப் புலனாய்வுப் பிரிவின் (குஜரு) பிரதிநிதிகள், வெளிவிவகார அமைச்சின் பிரதிநிதிகள், சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதிநிதிகள், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் மற்றும் டிரான்ஸ்பேரன்சி இண்டர்நேசனல் இலங்கைப் பிரதிநிதிகள் வரைபுக் குழுவில் உள்ளடங்கியிருந்தனர். வரைபுச் செயன்முறை 2018 ஜுன் மாதத்தில் பூர்த்திசெய்யப்பட்டது. சட்டவாக்கச் சட்டகத்தினை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்காக அதனை ளுவுயுசுவு ஜனாதிபதியிடம் கையளித்தது. இந்த ஆக்கத்தினை எழுதுகையில் கொள்கைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. அங்கீகாரம் கிடைத்த பின்னர் சட்ட வரைஞர் திணைக்களம் குற்றச்செயல்களினால் பெற்றுக்கொள்ளப்பட்டவை சட்டமூலத்தினை வரையும்.

இந்த வரைபினை வரைகையில், 2018 ஜனவரி மற்றும் ஜுன் மாதங்களுக்கிடையில் ஒவ்வொரு புதன்கிழமையும் வரைபுக் குழு கூடியது. இலங்கைக்குப் புதியதான சொத்து மீட்புக் கருத்தியல் தொடர்பான தெளிவுபடுத்தல்களைப் பெறுவதற்கான தேவை ஏற்பட்டபோது உலக வங்கி ளுவயுசு ளுவுயுசுவு (திருடப்பட்ட சொத்து மீட்பு) உதவியுடன் நிபுணர்களை அழைப்பதற்கான வாய்ப்பினை START கொண்டிருந்தது. இவ்வாறான கலந்துரையாடல்களில் ஒன்று இலங்கைக்குப் புதிய கருத்தியலான குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான சொத்து மீட்பு முறைமை பற்றியதாகும். இது உபபிரிவு 4.3 இல் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

கொள்கை உருவாக்கப்பட்டதற்கும் இந்த அறிக்கை தயாரிக்கப்படுவதற்கும் இடையிலான காலப்பகுதியில், START இன் முகாமைத்துவத்தில் மாற்றம் ஏற்பட்டது. வரைபு முயற்சிக்கு ஊக்கியாக இருந்த START இன் தலைவரும் செயலாளரும் அதே பதவிகளை இப்போது வகிக்கவில்லை. 2020 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலுக்கு முன்னர் இந்தச் சட்டத்தினை இயற்றுவதில் பெருமளவிற்கு அரசியல் ஆர்வம் இல்லாதது போல் தென்படுகின்ற அதேவேளை, இச்சட்டத்தினை இயற்றுவதில் START இன் புதிய முகாமைத்துவம் தொடர்ந்தும் கடப்பாடு கொண்டுள்ளது.

2021 ஆம் ஆண்டளவில் அமுல்படுத்தும் இலட்சிய இலக்குடன் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவினால் 2019 இல் தொடக்கிவைக்கப்பட்ட இலங்கையில் இலஞ்சத்தினை ஒழிப்பதற்கான தேசிய செயற்திட்டத்தினுள் இக்கொள்கை உள்ளடக்கப்பட்டுள்ளமையினைக் காணக்கூடியதாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# 4. சுட்டுவுர்க்குச் சுட்டுகுத்துீல் ஊளுஞ்ளு பீருதுர்னு ஏற்புர்டுகுளுீனு புகுப்புர்ய்வு

இந்தப் பிரிவானது 11 பிரதான பரப்புக்களின் கீழ் சட்டவாக்கச் சட்டகத்தின் விரிவான பகுப்பாய்வினை வழங்குகின்றது. கீழ்வரும் 20 உபபிரிவுகளின் கீழ் பிரிக்கப்பட்டுள்ள கொள்கையினூடான பிரச்சினைகளை இது ஒன்று சேர்க்கின்றது:[24]

- உத்தேச சட்டத்தின் நோக்கம்
- உத்தேச சட்டத்தின் நோக்கெல்லை
- பணம் தூய்தாக்கல் குற்றம்
- முறைப்பாடு செய்வதற்கான கடமை
- குற்றத்தீர்ப்பிற்குப் பின்னரான கைப்பற்றல் ∴ பறிமுதல்
- நீட்டிக்கப்பட்ட கைப்பற்றல்
- கைப்பற்றல் நடவடிக்கைகளின் நோக்கெல்லை
- குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான கைப்பற்றல் நடவடிக்கைகள்
- கைப்பற்றப்படாது பறிமுதல் செய்யப்பட்ட சொத்து
- குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினைத் தடுத்துக்காத்தல், பறிமுதல் செய்தல், நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்
- பறிமுதல் செய்யப்பட்டவற்றினை நியமித்து அவற்றினை நம்பிக்கை நிதியமொன்றுக்கு மாற்றல்
- இலங்கை குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை மீட்டல் மற்றும் முகாமைத்துவ அதிகாரசபை ("அதிகாரசபை") மற்றும் நிறுவன ரீதியான ஏற்பாடுகள்
- விசாரணை அதிகாரங்கள்
- விளக்கப்படாத செல்வப் பிரிவுகள்
- சட்டபூர்வமான தொழில்ரீதியான சிறப்புரிமை
- செயற்பாடுகளைப் பிரித்து வழங்குவதற்கான அதிகாரசபையின் அதிகாரங்கள்
- கூட்டு விசாரணை அணிகள்
- அதிகாரசபை மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் சொத்து மீட்பு
- அதிகாரசபையின் உறுப்பினர் விபரங்கள்
- ருஊேயுஊ இன் அமுல்படுத்தல்கள்
- வியாக்கியானப்படுத்தல்கள்

### 4.1. உத்தேச சட்டத்தின் நோக்கம் மற்றும் நோக்கெல்லை[25]

சட்டத்தின் நோக்கத்தினை இந்தப் பிரிவு அங்கீகரிக்கின்றது - இவ்வகையான ஏற்பாடுகள் உலகம் முழுவதிலும் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை சட்டங்களில் மிகப் பொதுவானவையாகும். நோக்கங்கள் பின்வருமாறு:

ய. குற்றச் செயலினரைத் செயலினை புரிந்த நபர்களினை தவறான முறையில் பெற்றுக்கொண்ட சொத்துக்களை அடையவிடாது தடுத்தல் (குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை)இ

டி. குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டவருக்கு நட்டஈடு வழங்கல்இ

உ. பயங்கரவாதம் மற்றும் நிதி மற்றும் பொருளாதாரக் குற்றச்செயல்கள் உள்ளிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைக் கீழறுத்தல்இ

ன. பொருளாதார ரீதியாகச் சாத்தியமான குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை மீட்பு முறைமை ஒன்றினை உருவாக்கல்இ

ந. அரசு, சமூகம் மற்றும் குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டவரின் நன்மைக்காக பறிமுதல் செய்யப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதியினைப் பேணிப் பாதுகாத்தல், மேலும்

க. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை மீட்பு முறைமையின் வகைப்பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையினை உறுதிப்படுத்தல் மற்றும் அதில் பொதுமக்களின் நம்பிக்கையினை உறுதிப்படுத்தல்.

சொத்து மீட்புச் செயன்முறையின் வகைப்பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவை கொள்கை ஆவணத்தின் முதலாவது கோட்பாட்டில் நிலைநாட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கைப்பற்றப்பட்ட சொத்துக்களைச் சமூகத்தினதும் பாதிக்கப்பட்டவர்களினதும் நன்மைக்காகப் பயன்படுத்த நாடும் கொள்கையினை நோக்கங்களின் கீழ் குறிப்பிட்டுள்ளமை முன்னேற்றகரமானதாகும்

---

24. இணைப்பு 01 இனை உசாவவும்: இலங்கையின் உத்தேச குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை சட்டத்தின் கொள்கை மற்றும் சட்டவாக்கச் சட்டகம்.

25. இணைப்பு 01 – பகுதி 1னை உசாவவும்1: உத்தேச சட்டத்தின் நோக்கம் மற்றும் இணைப்பு 01 – பகுதி ைை இனை உசாவவும்: உத்தேச சட்டத்தின் நோக்கெல்லை

- மீட்கப்பட்ட சொத்துக்களைச் சமூகத்தின் நன்மைக்காகப் பயன்படுத்துவது GFAR கோட்பாடுகளில் அங்கீகரிக்கப்பட்டுள்ள சிறந்த நடைமுறைக் கோட்பாடாகும்.[26] கோட்பாடு 5, பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "சாத்தியமானபோது, அடையாளம் காணப்பட்ட பாதிக்கப்பட்டவருக்குப் பக்கச்சார்பின்றி, ஊழல்மிகு அதிகாரிகளிடம் இருந்து மீட்கப்பட்ட திருடப்பட்ட சொத்துக்கள் உள்ளார்ந்த மோசடிமிகு நடத்தையினால் பாதிக்கப்பட்ட தேசத்தின் மக்களுக்கு நன்மை பயக்கவேண்டும்."[27]

மேற்குறிப்பிட்ட நோக்கங்களைத் தவிர, இச்சட்டத்தினை இயற்றுவதானது ருஊேயுஊ இல் உள்ளடங்கியுள்ள கடப்பாடுகளைத் திருப்திப்படுத்தும் என்பதுவும் மீளாய்வுப் பொறிமுறையின் கீழ் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்கள் பற்றிய ஐக்கிய நாடுகள் அலுவலகத்தினால் நடத்தப்பட்ட இலங்கை பற்றிய சகபாடி மீளாய்வில் இருந்து கண்டறிந்தவற்றினையும் திருப்திப்படுத்தும் என்பதுவும் பணம் தூய்தாக்கல் பற்றிய ஆசிய பசுபிக் குழுமத்தினால் (APG) நடத்தப்பட்ட பரஸ்பர மதிப்பீட்டின் பெறுபேற்றிற்கு இலங்கையினை இயைபுறச் செய்யும் என்பதுவும் கவனத்திற்கொள்ளப்படுகின்றது.[28] இந்த இரண்டு மதிப்பீடுகளிலும் திருடப்பட்ட சொத்துக்களை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதற்குப் பரிபூரணமான குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை சட்டம் இல்லாமல் இருப்பது கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளது.[29]

உத்தேச சட்டமானது பின்வரும் சந்தர்ப்பங்களை உள்ளடக்கும்:

- இலங்கையில் எந்த ஒரு நபரும் எந்த ஒரு குற்றத்தினையும் இழைக்கையில்.
- (i) ஓர் இலங்கைப் பிரசைஇ (ii) இரட்டைப் பிரசாவுரிமை கொண்ட இலங்கையர்இ (iii) இலங்கையில் வசிக்கும் அல்லது இலங்கையில் காணப்பட்ட நபர், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதாவது ஒரு குற்றத்தினை இழைத்து, அவ்வாறான குற்றச்செயலில் இருந்து பெறப்பட்டவை இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கண்டுபிடிக்கப்படல்.
- குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை இலங்கையில் கண்டுபிடிக்கப்படுகையில்.
- குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை இலங்கைக்குள் வந்திருக்கையில், அல்லது இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருக்கையில் அல்லது இலங்கை ஊடாகக் கடந்து சென்றிருக்கையில்.

குற்றச்செயல் ஒன்றினை இழைப்பதற்கு, குற்றச்செயலினால் பெறப்பட்டதை ஒளிப்பதற்கு இலங்கையின் நியாயாதிக்கம் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களையும் அல்லது இலங்கைப் பிரசையினால் அல்லது வேறு ஒருவரினால் சட்டவிரோதமான சொத்துக்களைத் தூய்தாக்குவதற்கு இலங்கை பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களையும் உள்ளடக்குவதே இந்த ஏற்பாட்டின் நோக்கமாக இருந்தது. அறிக்கையில் முன்னர் கலந்துரையாடப்பட்ட சட்டத்தில் நிலவும் இடைவெளிகளை இந்தப் பிரிவு அடையாளம் காண்கின்றது. அதாவது: உலகின் கடல்கடந்த இடங்களில் சொத்துக்கள் மறைத்துவைக்கப்பட்டுள்ள குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றின் சர்வதேசக் கூறுகள்.

மேலதிகமாக, கொள்கையின் பகுதி ஐஐஐ சட்டத்தினால் எடுத்தாளப்படும் செயல்விதிகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றது:

- இலங்கையின் உள்ளே அல்லது இலங்கைக்கு வெளியே அமைந்துள்ளபோதிலும் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றின் கொள்ளல், உரிமைநிலைப்படுத்தல், மறைத்தல், ஒருங்கிணைத்தல், பயன்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் உடைமையாக வைத்திருத்தல் பற்றிய விசாரணைஇ
- அவ்வாறு பெறப்பட்டவற்றினை அடையாளப்படுத்தல், தேடிச்செல்லல் மற்றும் கண்டுபிடித்தல்இ
- கைப்பற்றப்பட்ட ∴ பறிமுதல் செய்யப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை உள்ளடங்கலாக மற்றும் அவற்றின் பணப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளல் உள்ளடங்கலாக அவ்வாறான பெறப்பட்டவற்றினைப் பறிமுதல் செய்தல், முடக்கிவைத்தல் (தடுப்புக்காப்பு), நிர்வகித்தல் ∴ முகாமைத்துவம் செய்தல்இ
- இந்தச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள குற்றங்களை விசாரித்தல்,
- இந்தச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை மற்றும் தவறுகள் ஆகியவற்றிற்கான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல்,
- குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினைக் கைப்பற்றல் / பறிமுதல் செய்தல்இ
- குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை இல்லாதொழித்தல்இ
- குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கல்இ

26.ஐடினை மேல்குறிப்பிடப்பட்டுள்ள அடிக்குறிப்பு 16
27.GFAR பணித்துறை அறிவிப்புஇ < https://star.worldbank.org/sites/star/files/20171206_gfar_communique.pdf > Page5
28.UNCAC இன் இலங்கை பற்றிய மீளாய்வு அறிக்கை <https://www.unodc.org/documents/treaties/UNCAC/CountryVisitFinalReports/2018_09_03_Sri_Lanka_Final_Country_Report.pdf >' இணைப்பு 1 இன் பிரிவு 56.
29. பணம் தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதி நிதியிடலுக்கெதிரான நடவடிக்கைகள் இலங்கை பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கை, செப்டெம்பர் 2015, பக்கங்கள் 61 மற்றும் 118, 2019 ஒக்டோபர் 30 இல் அணுகப்பட்டது< http://www.apgml.org/mutual-evaluations/documents/default.aspx?s=title&pcPage=8;>

இலங்கை நாட்டு மீளாய்வு அறிக்கை 2016 – 2021 மீளாய்வுச் சுற்றுக்காக ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் உறுப்புரைகள் 5-14 மற்றும் 51 -159 ஆகியவற்றின் இலங்கையின் அமுல்படுத்தல்கள் பற்றிய பலோ மற்றும் புருனை தாருஸ்சலாம் நடத்திய மீளாய்வு, பக்கம் 109, 2019 ஒக்டோபர் 30 இல் அணுகப்பட்டது <https://www.unodc.org/documents/treaties/UNCAC/CountryVisitFinalReports/2018_09_03_Sri_Lanka_Final_Country_Report.pdf>

- உண்மையான மூன்றாந்தரப்பின் உரிமைகளை அங்கீகரித்தல்இ
- குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை தொடர்பில் பரஸ்பர சட்ட உதவி வழங்கல்இ
- இலங்கையில் நடைபெற்ற குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றிற்காக நேரடியான மீட்பினைத் தனிநபர்களும் வெளிநாட்டு அரசுகளும் கோருவதற்காக தற்போது அமுலிலுள்ள சிவில் சட்டப் பரிகாரத்தினை அங்கீகரித்தல்இ
- பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கையிடுவதற்கான மற்றும் பருவகாலப் பொது அறிக்கையிடலுக்கான ஏற்பாட்டினை வழங்கல்
- அவற்றின் இடைநேர்விளைவான வேறு ஏதாவது விடயங்கள்.

குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை என்பது பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது ('குற்றச்செயல்' எனும் சொற்பதம் 'குற்றம்' எனும் சொற்பதத்தினை ஒத்த கருத்துடையதாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது): "இலங்கையிலோ அல்லது வேறு எங்கேயோ எந்த ஒரு நபரினாலும் இழைக்கப்பட்ட குற்றத்துடன் தொடர்புடையதாக அல்லது குற்றத்தின் விளைவாக அடைந்துகொண்ட, பெற்றுக்கொண்ட, தக்கவைக்கப்பட்ட, இணைந்து கலக்கப்பட்ட, முழுவதுமாக அல்லது பகுதியாக அல்லது நேரடியாக அல்லது மறைமுகமாக மாற்றப்பட்ட ஏதுாவது சொத்து அல்லது அதன் பகுதி அல்லது ஏதுாவது வருமானம், சேவை, அனுகூலம், நன்மை அல்லது வெகுமதி அல்லது வேறு ஏதாவது பொருளாதார நலன்கள் என்பதுடன் குற்றமானது குற்றச்செயலின் நிமித்தகாரணத்தினையும் அதன் பெறுமதியினையும் உள்ளடக்கும்".[30] இந்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றங்கள் இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சிறைத்தண்டனை மூலம் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களாகும்.

இலங்கை பணம் தூய்தாக்கல் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாகவே பணம் தூய்தாக்கல் குற்றத்தினைக் கொள்கை வலியுறுத்துகின்றது.[31] இந்தக் குற்றத்தினை உள்ளடக்கும் நோக்கம் நிதி நடவடிக்கைச் செயலணியின் விதப்புரைகளுக்கு அமைவாக அதனைக் கொண்டுவருவதாகும் என்பது கவனத்திற்கொள்ளப்படுகின்றது.

## 4.2 குற்றத்தீர்ப்பிற்குப் பின்னரான கைப்பற்றல் / பறிமுதல் மற்றும் நீட்டிக்கப்பட்ட கைப்பற்றல்[32]

குற்றத்தினை நிகழ்த்தியவரின் குற்றத்தீர்ப்பிற்குப் பின்னர் திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்கான ஒரு பொறிமுறைக்கான ஏற்பாட்டினை வழங்குவதையே உத்தேச சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இது பொதுவாக ஆளளவிலான தனிநபர்சார் நடவடிக்கை எனக் குறிப்பிடப்படுவதுடன் குற்றத்தினை நிகழ்த்தியவருக்கு அவர் நிகழ்த்திய குற்றச்செயலுக்கான குற்றத்தீர்ப்பினைத் தேவைப்படுத்துகின்றது. நிரூபிப்பிற்கான குற்றவியல் பொறுப்பின் காரணமாக, இப்பொறிமுறை காலத்தினைப் பெரிதும் எடுக்கக்கூடியது என்பதுடன் குற்றச்செயலினால் தொலைக்கப்பட்ட பணத்தினை அறவிடுவதற்குச் சில சந்தர்ப்பங்களில் இப்பொறிமுறை போதியதாகவும் இருப்பதில்லை (உதா: குற்றத்தினை நிகழ்த்தியவரின் மரணம்). இப்பிரச்சினைகள் சிவில் பரிகாரப் பொறிமுறையின் கீழ் தீர்க்கப்பட்டுள்ளன (தயவுசெய்து உபபிரிவு 4.3 இனை உசாவவும்).

கொள்கைக்கு அமைய, குற்றச்செயலினால் பெறப்பட்டவற்றின் நன்மைகளை அல்லது பெறுமதியினை அறவிடுவதற்கு, குற்றத்தீர்ப்பிற்குப் பின்னரான கைப்பற்றல் நடவடிக்கைகள் நபரின் குற்றத்தீர்ப்பிற்குப் பின்னரே முன்னெடுக்கப்படவேண்டும். எவ்வாறாயினும், சாதாரண நிலைமைகளின் காரணத்தில் தங்கியுள்ளவாறு அல்லது குற்றம் சுமத்தப்பட்டுள்ளவர் அடையாளம் காணக்கூடிய சொத்துக்களைக் கொண்டிராதபோது, குற்றத்தினால் பாதிக்கப்பட்டவரின் இசைவுடன், சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிறுவனம் சொத்துக்களை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை நிறுத்துவதற்கான தற்றுணிபினைக் கொண்டுள்ளது. இது ஒரு நடைமுறை ரீதியான ஏற்பாடாகும். இது சாதாரண வழக்குகள் நீதி முறைமைக்குத் தடையினை ஏற்படுத்தவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றது.

நீட்டிக்கப்பட்ட கைப்பற்றல்கள் இலங்கைக்கு ஒரு புதிய செயன்முறையாகும்.[34] குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள நபரின் குற்றச்செயலுடன் தொடர்புபடாத சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கு இது அனுமதியளிக்கின்றது.[35] நீதிமன்றத்தின் முதற்தோற்றத் திருப்தியின் பேரில் ஏனைய சொத்துக்கள் சட்டத்திற்கு முரணான வழிகள்

30. உசாவுக இணைப்பு 01 – பிரிவு 57
31. உசாவுக இணைப்பு 01 – பிரிவு 9
32. உசாவுக இணைப்பு 01 – பகுதி ஏ ரூ ஏஐ: குற்றத்தீர்ப்பிற்குப் பின்னரான கைப்பற்றல்கள் ∴ பறிமுதல் மற்றும் நீட்டிக்கப்பட்ட கைப்பற்றல்
33. தியடோர். எஸ். கிரீன்பேக் லிண்டா எம். சாமுவேல் வின்கேட் கிராண்ட் கிரேஇ குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான சொத்துப் பறிமுதலுக்கான சிறந்த நடைமுறை வழிகாட்டிஇ பக்கம் 13 ஐஎ-சநஅ என்பதை "ஒரு விடயத்திற்கு எதிரானது" என மொழிபெயர்க்க முடியும். 'நபர் ஒருவருக்கு எதிரானது' என்பது ஒரு தரப்பிற்கு எதிராக முன்வைக்கப்படும் விடயங்களில் நீதிகாண்பதற்கான நீதிமன்றத்தின் அதிகாரத்தினைக் குறிப்பிடுகின்றது. சட்டத் தகவல்கள் நிறுவனம், கோனெல் பல்கலைக்கழகம்< https://www.law.cornell.edu/wex/in_personam> -2019 நவம்பர் 21 ஆம் திகதி அணுகப்பட்டது
34. இணைப்பு 01 இனை உசாவுக – பகுதி VI: நீட்டிக்கப்பட்ட கைப்பற்றல்கள்
35. fருத்தியல் பற்றிய சுருக்கமான விளக்கத்திற்காக, குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினைக் கைப்பற்றும் நோக்கத்திற்கான சர்வதேச ஒத்துழைப்புப் பற்றிய கையேட்டினை உசாவவும், பக் 84 <https://www.un.org/ruleoflaw/files/Confiscation_Manual_Ebook_E.pdf>

மூலம் அடையப்பட்டிருக்கலாம், குற்றம் சாட்டப்பட்டுள்ளவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள குற்றத்தினை அவர் நிகழ்த்துவதற்கு முன்சென்ற 7 வருடங்களின் போது குற்றவியல் நடவடிக்கையின் போது சொத்து அடையப்பட்டிருக்கலாம் என்கின்ற ஊகத்தினை நீதிமன்றம் மேற்கொள்ளலாம்.[36] பிரச்சினைக்குரிய சொத்து முறையான மூலங்கள் மூலம் அடையப்பட்டது என்பதனை நிகழ்தகவுச் சமனிலை மூலம் காட்டுவதற்கான சுதந்திரத்தினைக் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர் கொண்டுள்ளார் - இதனை அவர் நிறைவேற்றத் தவறுகையில், குற்றத்தீர்ப்புப் பெறப்படும்போது, குறிப்பிட்ட குற்றச்செயலுடன் தொடர்புபடாத சொத்தினை நீதிமன்றம் கைப்பற்றலாம்.

நபர் ஒருவர் நன்கு அறியப்பட்ட குற்றச்செயல் புரிபவருக்கான வாழ்க்கைப்பாங்கினைக் கொண்டிருந்தால், சொத்துக்களைக் கைப்பற்றுவதற்கு நீட்டிக்கப்பட்ட கைப்பற்றல் செயன்முறை வேறு பல நியாயாதிக்கங்களில் நடைபெறுகின்றது. இந்த நியாயாதிக்கங்களில் அதிகமானவற்றில் பயங்கரவாதம், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள், பணம் தூ ய்தாக்கல் அல்லது போதைப்பொருள் கடத்தல் போன்ற பாரதூரமான குற்றச்செயல்களுக்காகவே இக்கருத்தியல் பயன்படுத்தப்பட்டுவருகின்றது. மேலும் குற்றத்தை நிகழ்த்தியவருக்குச் சொந்தமான சொத்துக்களுக்கே இக்கருத்தியல் பிரயோகிக்கப்படும்.[37] இக்குறிப்பிட்ட பிரிவு பிரயோகிக்கப்படும் குற்றச்செயல்களைக் கொள்கையானது குறிப்பிட்டுக் கூறாத அதேவேளை, “குற்றச்செயல் புரிபவரின் நடவடிக்கை” என்பதுடன் இணைந்துள்ள அர்த்தத்தினைத் தீர்மானிப்பதற்குப் பிரயோகிக்கத்தக்க பரிசோதனை அமுலாக்கப்படவேண்டும் என்பதனைப் பிரிவு குறிப்பிடுகின்றது. இந்தச் செயன்முறையானது தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்கின்ற காரணத்தினால், இச்செயன்முறையானது பாரதூரமான குற்றங்களுக்கே வரையறுக்கப்பட்டுள்ளது என்பதனை வலியுறுத்தி இச்செயன்முறையினை அங்கீகரிக்கவேண்டுமாயின் பாதுகாப்பு ஏற்பாடுகள் அமுல் செய்யப்படவேண்டும் என்பதனை வுஜளூடு வலியுறுத்தியுள்ளது - இதனை நிறைவேற்றத் தவறுகையில், தனிநபர்களின் சொத்துக்களில் தாக்குதல் மேற்கொள்வதற்கான ஒரு கருவியாக மிக எளிமையான குற்றங்களைப் பயன்படுத்தமுடியும். இந்தக் கட்டளை மேன்முறையீடு செய்யக்கூடியதாக இருக்கவேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது. இந்தப் பரப்பானது அடிப்படை உரிமைகள் பரிசீலிப்பில் கணிசமான பின்விளைவுகளைக் கொண்டிருக்கலாம் என்பதுடன் வரைபுச் சட்டமூலத்தினை இறுதிப்படுத்த முன்னர் அது பற்றிய சிவில் சமூகக் கலந்துரையாடல்கள் சட்ட வரைஞர் திணைக்களத்தினால் வரையப்பட்டுள்ள “குற்றச்செயல் புரிபவரின் நடவடிக்கைக் காலப்பகுதி” பரிசோதனையினைக் கருத்திற் கொண்டு தீர்க்கவேண்டும்.

## 4.3 குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான கைப்பற்றல் நடவடிக்கைகள்[38]

‘குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான சொத்து மீட்பு’ எனக் குறிப்பிடப்படுகின்ற, ஒரு நபருக்கெதிரான நியாயாதிக்கத்தினை நீதிமன்றம் ஒன்று கொண்டிராதபோது அந்த நபரின் சொத்துக்கள் மீது அந்த நீதிமன்றத்துக்குள்ள அதிகாரத்தினை (in-rem[39] process) கொள்கை அங்கீகரிக்கின்றது. இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்படுவதற்காக, “குற்றவியல் குற்றச்சாட்டுக்கள் முன்னெடுக்கப்படுவதற்கான அல்லது குற்றத்தீர்ப்புப் பெறப்படுவதற்கான தேவைப்பாடு இல்லை.”[40] இது ஒரு சிவில் நடவடிக்கையாகும் என்பதுடன் நிகழ்தகவுச் சமனிலை நியமத்தின் அடிப்படையில் சொத்துக்களை மீட்பதற்கு உதவுகின்றது. இந்த நடவடிக்கைகளைக் குற்றவியல் நடவடிக்கைளுடன் ஒத்திசைவாக முன்னெடுக்க முடியும். குற்றவியல் பொறிமுறையினைப் பயன்படுத்தி சொத்துக்களை மீட்பதில் காணப்படும் சவால்களை முறியடிப்பதற்கு இந்தச் செயன்முறை பல நியாயாதிக்கங்களில் பயன்படுத்தப்பட்டுவருகின்றது – குறிப்பாக, குற்றவியல் சான்று நியமத்துடன் பொருந்துகின்ற சான்று இல்லாதபோது அல்லது குற்றத்தினை நிகழ்த்தியவரை அடையமுடியாத சந்தர்ப்பங்களில் (உதாரணமாக: இறந்தவர், குற்றவியல் நீதியில் இருந்து தப்பியோடியவர் அல்லது குற்றவியல் வழக்குத்தொடுப்பில் இருந்து சட்டக்காப்புக் கோருபவர்).[41]

---

36. இணைப்பு 01 இன் பிரிவு 13 இனை உசாவவும்
37. Jean-Pierre Brun Larissa Gray Clive Scott Kevin M. Stephenson, சொத்து மீட்புக் கைநூல் - நடைமுறைப்படுத்துனர்களுக்கான ஒரு வழிகாட்டி, பக்கம் 117
38. இணைப்பு 1 இன் பகுதி ஏஐஐஐ இனை உசாவவும்: குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான கைப்பற்றல்கள் நடவடிக்கைகள்
39. நபர் ஒருவரின் சொத்துக்கெதிராக நீதிமன்றம் கொண்டுள்ள அதிகாரத்தினை □விடயம் ஒன்றிற்கு எதிரானது□ என அர்த்தப்படுத்த முடியும்□. நபர் ஒருவரின் சொத்துக்கெதிராக நீதிமன்றம் கொண்டுள்ள நியாயாதிக்கம் உண்மையான அல்லது தனிப்பட்ட சொத்தின் மீதான நீதிமன்றத்தின் அதிகாரத்தினைக் குறிப்பிடுகின்றது, சட்டத் தகவல்கள் நிறுவனம், கோனெல் பல்கலைக்கழகம் < https://www.law.cornell.edu/wex/in_rem > 2019 ஒக்டோபர் 30 இல் அணுகப்பட்டது.
40. கருத்தியல் பற்றிய சுருக்கமான விளக்கத்திற்கு குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகளின் கைப்பற்றல் நோக்கங்களுக்கான சர்வதேச ஒத்துழைப்புப் பற்றிய கையேடு, பக்கம் 20, 2019 ஒக்டோபர் 30 இல் அணுகப்பட்டது <https://www.un.org/ruleoflaw/files/Confiscation_Manual_Ebook_E.pdf> பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் மற்றும் பல்பெருக்கமாக்கல் ஆகியவற்றினை எதிர்ப்பது பற்றிய சர்வதேச நியமங்கள், FATF பரிந்துரைகள், பக்கம் 122, 2019 ஒக்டோபர் 30 இல் அணுகப்பட்டது <http://www.fatf-gafi.org/media/fatf/documents/recommendations/pdfs/FATF%20Recommendations%202012.pdf>
41. கருத்தியல் பற்றிய சுருக்கமான விளக்கத்திற்கு குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகளின் கைப்பற்றல் நோக்கங்களுக்கான சர்வதேச ஒத்துழைப்புப் பற்றிய கையேடு, பக்கம் 20, 2019 ஒக்டோபர் 30 இல் அணுகப்பட்டது https://www.un.org/ruleoflaw/files/Confiscation_Manual_Ebook_E.pdf

கொள்கையின் கீழ், குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவருக்குக் குற்றத்தீர்ப்பு வழங்கப்படாதபோதும், சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனம் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை என நம்பப்படுகின்றவற்றினைக் கைப்பற்றும் நோக்கத்துடன் குற்றத்தீர்ப்பளிக்கப்படாமை அடிப்படையிலான சொத்து மீட்பு நடவடிக்கையினை ஆரம்பிக்கலாம். இந்த ஏற்பாட்டின் கீழ் எண்பித்தற் பொறுப்பு நிகழ்தகவுச் சமனிலையாகும் என்பதுடன் குற்றத்தினை நிகழ்த்தியமைக்கும் அடையாளம் காணப்பட்ட சொத்துக்கும் இடையிலான காரணகாரியத் தொடர்பினை அரசு நிரூபிக்கவேண்டிய தேவையில்லை. இது சொத்தின் கைப்பற்றலுக்கு உதவலாம் என்கின்ற அதேவேளை, குற்றவியல் நீதி முறைமையினுள் காணப்படும் தாமதங்களைப் புறந்தள்ளி வைப்பதன் மூலம், இச்செயன்முறை தவறாகப் பயன்படுத்தப்படும் சாத்தியத்தினைப் பற்றியே TISL கரிசனை கொண்டிருந்தது. கட்டாயநிலைக்கான, விகிதாசாரநிலைக்கான மற்றும் பொது அக்கறைக்கான வழிகாட்டல் கோட்பாடுகளை TISL ஆதரித்து வாதாடியமைக்கான காரணங்களுள் இதுவும் ஒன்றாகும் என்பதுடன் (தயவுசெய்து உபபிரிவு 4.10 இனை உசாவவும்) இது பரந்த சிவில் சமூகத்துடன் கலந்தாலோசிக்கப்படவேண்டும். எண்பித்தற் பொறுப்பினை மாற்றுவதற்கான மாற்று வழிகளையும் TISL வலியுறுத்தியுள்ளதுடன் இது குற்றவியல் நீதி முறைமைக்கு மிகவும் தேவைப்படும் மறுசீராக்கலுக்கான ஓர் உகந்த தீர்வாக நோக்கப்படலாகாது.

## 4.4 விளக்கப்படாத செல்வக் கட்டளை[42]

விளக்கப்படாத செல்வக் கட்டளை (ருறுழு) என்ற பெயரில் இங்கிலாந்து போன்ற நாடுகளில் பயன்படுத்தப்படும் சான்றினைச் சேகரிக்கும் ஒரு புதிய கருவிக்கான ஏற்பாட்டினைக் கொள்கை வழங்குகின்றது.[43] உத்தேசக் கொள்கையில், நியாயமான காரணங்களின் அடிப்படையில் 5 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சிறைத்தண்டனை மூலம் தண்டிக்கப்படக்கூடிய குற்றத்தினை நிகழ்த்திய அல்லது குற்றச்செயல்கள் மூலம் பெறப்பட்டவற்றினைக் கொடுக்கல் வாங்கல் செய்யும் எந்தவொரு நபரினையும் சொத்துக்கள் அடையப்பட்ட வழிகள் தொடர்பாக சத்தியப் பிரகடனப்படுத்தல்களை மேற்கொள்ளுமாறு வேண்டுவதற்காக அதிகாரசபை வலுப்பெற்றுள்ளது. “ஒரு நபருக்குச் சொந்தமாகவுள்ள சொத்துக்களை அவர் எந்த விதத்தில் பெற்றுக்கொண்டார் என்பது பற்றிய சத்தியப் பிரகடனத்தினை வழங்குமாறு எந்த ஒரு நபருக்கும் அறிவித்தல் ஒன்றினை வழங்குவதற்கான அதிகாரத்தினை உத்தேசச் சட்டம் அதிகாரசபைக்கு வழங்கும்”. விளக்கப்படாத செல்வக் கட்டளையுடன் இயைபுறாமையானது தண்டிக்கும் விளைவுகளைக் கொண்டுள்ளது.

இங்கிலாந்துடன் ஒப்பிடும் வகையில், “சந்தேகத்துக்குள்ளாகியுள்ள நபர் ஒருவர் அவருடைய தகுதிக்கு மேல் சந்தேகத்துக்கிடமான சொத்துக்கு உரிமையாளராக இருக்கும் சாத்தியம் உள்ளது” என்று நீதிபதி திருப்தியுற்றுப் பின்வரும் பரிசோதனைகள் அனைத்தும் திருப்தியாக்கப்பட்டால் மாத்திரமே உயர்நீதிமன்றம் விளக்கப்படாத சொத்துக் கட்டளையினை விநியோகிக்கலாம்:

1. பிரதிவாதி ஐரோப்பியப் பொருளாதாரப் பிரதேசத்திற்கு வெளியே அரசியல் தொடர்புடையவர் (PEP)˙ அல்லது பிரதிவாதி பாரதூரமான குற்றச்செயலில் ஈடுபட்டிருக்கின்றார் அல்லது ஈடுபட்டுவருகின்றார் எனச் சந்தேகிப்பதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன.
2. பிரதிவாதியின் அறியப்பட்ட வருமானம் சொத்தினைப் பெறுவதற்குப் போதுமானதாகும்.
3. சொத்தின் பெறுமதி £50,000” இனை விட அதிகமானதாகும்.[44]

UWOக்களை விநியோகிப்பதற்குக் கொள்கை பின்வரும் இலங்கைச் சட்ட அமுலாக்கல் நிறுவனங்களுக்கு அனுமதியளிக்கின்றது:

ய. பொலிஸ் (CID, FCID உள்ளடங்கலாக)
டி. CIABOC
உ. இலங்கைச் சுங்கம்
ன. இலங்கை மதுவரித் திணைக்களம்
ந. இலங்கை காடுகள் திணைக்களம்
க. காட்டு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
ப. பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
ா. இலங்கை குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் மீட்பு மற்றும் முகாமைத்துவ அதிகாரசபை

கட்டளையினைப் பின்வருவனவற்றிற்காக மாத்திரமே பயன்படுத்தமுடியும்:

- பாரதூரமான குற்றச்செயல்களை இழைத்தமைக்கான சாத்தியம் பற்றிய குற்றவியல் விசாரணையின் போது விசாரணைப் பொருட்களைச் சேகரித்தல் அல்லது
- குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான கைப்பற்றல் நடவடிக்கையினை ஆரம்பிப்பதற்கான சாத்தியமான அடிப்படையாக.

அவ்வாறான சத்தியப் பிரகடனத்தின் உள்ளடக்கங்கள் அந்தச் சத்தியக் கடதாசியினைத் தயாரித்தவருக்கு எதிரான தொடர்ச்சியான நீதிமுறை நடவடிக்கையில் சான்றாக அனுமதிக்கப்படமாட்டாது

42. இணைப்பு 1 இன் பகுதி ஓஐஐ இனை உசாவவும்: விளக்கப்படாத சொத்துக் கட்டளைகள்
43. குற்றவியல் நிதிகள் சட்டம் 2017இ அத்தியாயம் 1இ விளக்கப்படாத சொத்துக் கட்டளைகள்இ 2019 ஒக்டோபர் 30 இல் அணுகப்பட்டது <http://www.legislation.gov.uk/ukpga/2017/22/part/1/chapter/1/crossheading/unexplained-wealth-orders-england-and-wales-and-northern-ireland/enacted?view=interweave>
44. விளக்கப்படாத சொத்துக் கட்டளைகள்: சுருக்கமான வழிகாட்டி < https://www.transparency.org.uk/unexplained-wealth-orders-a-brief-guide/> 2019 ஒக்டோபர் 30 இல் அணுகப்பட்டது குற்றவியல் நிதிகள் சட்டம் 2017இ அத்தியாயம் 1இ விளக்கப்படாத சொத்துக் கட்டளைகள்இ 2019 ஒக்டோபர் 30 இல் அணுகப்பட்டது <http://www.legislation.gov.uk/ukpga/2017/22/part/1/chapter/1/crossheading/unexplained-wealth-orders-england-and-wales-and-northern-ireland/enacted?view=interweave>

பாரதூரமான குற்றச்செயல்கள் நிகழும் சந்தர்ப்பத்தின் போது மாத்திரமே விளக்கப்படாத சொத்துக்கள் கட்டளை அனுமதிக்கப்படலாம் என்பதனை உறுதிப்படுத்துவதற்கான வுஜளூடு இன் முன்மொழிவு – எந்தக் குற்றத்திற்கெதிராகவும் எந்த நபருக்கெதிராகவும் அனுமதிக்கப்பட்டிருக்கக்கூடிய விளக்கப்படாத செல்வக் கட்டளையானது சிறு குற்றங்களுக்காக வழங்கப்படலாகாது. இருப்பினும், அவ்வாறான அதிகாரங்கள் தவறாகப் பயன்படுத்தப்படலாம் என்பதற்கான சாத்தியங்கள் தொடர்பாகவே தொடர்ந்தும் கரிசனைகள் காணப்படுகின்றன. 5 வருடங்களுக்கு மேற்பட்ட தண்டனைக்குரிய குற்றம் இழைக்கப்பட்டுள்ளது என்பதனைத் தீர்மானிப்பதற்கான நியாயமான அடிப்படையினை எது கொண்டுள்ளது என்பதனைத் தீர்மானிப்பதில் சட்ட அமுலாக்கல் நிறுவனங்களைப் பரிசோதிப்பதற்குப் பரிசோதனைகள் நிறுவப்படவேண்டும்.

## 4.5 முறைப்பாடு செய்வதற்கான கடமை[45]

குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் உள்ளன என்பது பற்றிய அறிவினைக் கொண்டுள்ள குறிப்பிட்ட நபர்கள் அத்தகவல்களை உத்தேச சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள நிறுவனத்திற்கு வெளிக்கூறுவதற்கான கடமையினைக் கொண்டுள்ளனர். இந்தக் கடமையானது பணம் தூய்தாக்கல் சட்டம் மற்றும் நிதிக் கொடுக்கல்வாங்கல் சட்டம் ஆகியவற்றின் கீழ் முறைப்பாடு செய்வதற்கான கடமையின் வலியுறுத்தலாகும். குறிப்பிட்ட நபர்கள் புதிய சட்டத்தின் கீழ் வரையறை செய்யப்படுவர் என்பது கவனத்திற் கொள்ளப்படுகின்றது. மேலும் பணம் தூய்தாக்கல் சட்டம் மற்றும் நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் சட்டம் ஆகியவற்றின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள தனிநபர்களின் குழுவினை இது குறைந்தது கொண்டிருக்கும். மேலும் சேர்க்கப்படவேண்டிய தனிநபர்கள் அல்லது குழுக்கள் உள்ளடக்கத்திற்கான உறுதியான மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட தர்க்கரீதியான விளக்கத்துடன் மாத்திரமே சேர்க்கப்படவேண்டும்.

நபர் ஒருவர் குற்றவியல் நடவடிக்கை ஒன்றிற்குத் துணையாகச் சட்டத்தரணி ஒருவரைத் தொடர்புகொள்கையில், சட்டத்தரணி – கட்சிக்கார் தொடர்பாடலுக்குப் பொதுவாகக் கிடைக்கும் தொழில்ரீதியான சிறப்புரிமை கோரப்படமுடியாதது என்கின்ற பொதுச் சட்டத்தின் நிலைப்பாட்டினையும் இந்தக் கொள்கை அங்கீகரிக்கின்றது.[46]
உரிய முறையில் அமுல்படுத்தப்படுகையில், குற்றச்செயல்களைத் தொழில்ரீதியானவர்கள் வசதிப்படுத்துவதனைத் தடுப்பதில் இந்த நடவடிக்கைகள் முக்கிய காரணிகளாக அமையலாம்.

## 4.6 நடைபெற்றுவரும் விசாரணைகளைப் பாதுகாத்தல் - தகவலறியும் உரிமை எதிர் இரகசியம் பேணும் ஏற்பாடுகள்

நடைபெற்றுவரும் விசாரணைகள் தொடர்பான தரவுகளைப் பாதுகாப்பதற்காக இலங்கைச் சட்டவாக்கங்களில் காணப்படும் இரகசியம் பேணுவதற்கான ஏற்பாடுகள் இந்தச் சட்டத்தில் உள்ளடக்கப்படவேண்டும் என்பது அரச அதிகாரிகளிடம் இருந்தான பிரதான முன்மொழிவுகளில் ஒன்றாகும். சொத்து மீட்புப் பற்றிய உலகளாவிய மன்றின் அறிக்கைக்கு முன்னர் வெளியிடப்பட்ட சொத்து மீட்புத் தொடர்பான சிவில் சமூக நிழல் அறிக்கையில் வுஜளூடு கோடிட்டுக் காட்டியுள்ளதுபோல, இலங்கை கொண்டுள்ள பிரதான கரிசனைகளில் ஒன்று தொலைந்துபோன, பறிமுதல்செய்யப்பட்ட சொத்துக்களின் தொகை பற்றிய மற்றும் அவற்றின் புவியியல் அமைவிடம் பற்றிய தகவல்கள் இல்லாமையாகும்.[47] இந்தச் சட்டத்தில் இரகசியம் பேணல் ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கு எதிராக ஆதரித்து வாதாடிய வுஜளூடு, நடைபெற்றுவரும் விசாரணைகள் பற்றிய தகவல்களை நிறுத்துவதற்கான போதிய பாதுகாப்பினை வழங்குகின்ற தற்போது அமுலிலுள்ள தகவலறியும் சட்டச் சட்டகத்திற்கு இச்சட்டத்தினை உட்படுத்துமாறு உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுத்தது. இப்பாதுகாப்பின் அடிப்படையில், இறுதிக் கொள்கை ஆவணம் இரகசியம் பேணல் ஏற்பாடுகளை உள்ளடக்கவில்லை. உண்மையில், இச்சட்டத்தினை தகவலறியும் சட்டத்திற்கு உட்படுத்த முடியும் எனக் கொள்கை அங்கீகரிப்பதுடன் இந்தச் சட்டத்தின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள எந்த ஒரு சட்ட அமுலாக்கல் அதிகாரியும் எந்த ஒரு சட்டத்திற்கும் இயைபுற்று நடக்கும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த சந்தர்ப்பங்களில் எந்த ஒரு விசாரணையின் போதும் சேகரிக்கப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட எத்தகவலையும் எந்த ஒரு நபரிற்கும் வெளிக்கூறமாட்டார் என்பதையும் அங்கீகரிக்கின்றது”.[48]

45. இணைப்பு 01 இன் பகுதி ஐஏ இனை உசாவவும்: முறைப்பாடு செய்வதற்கான கடமை
46. இணைப்பு 1 இன் பிரிவு 44 இனை உசாவவும்
47.,லங்கை பற்றிய ஊஐளுழு புகுயுசு அறிக்கை< https://www.tisrilanka.org/wp-content/uploads/2017/12/Sri-Lanka-Asset-Recovery-CSO-Report-final.pdf>
48.இணைப்பு 1 இன் பிரிவு 40 இனை உசாவவும்

## 4.7 இலங்கை குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் மற்றும் முகாமைத்துவ அதிகாரசபை மற்றும் நிறுவன ஏற்பாடுகள்[49]

திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதுடன் தொடர்புடைய விடயங்களுக்கான அதிசிறந்த மையமாக இந்த நிறுவனம் உருவாகவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பின்வரும் நபர்களைக் கொண்ட சபையினால் அதிகாரசபை முகாமைத்துவம் செய்யப்படும்:

ய. சட்டமா அதிபர் அல்லது அவரால் நியமிக்கப்படுபவர்
டி. பொலிஸ்மா அதிபர் அல்லது அவரால் நியமிக்கப்படுபவர்
உ. இலஞ்சம் அல்லது ஊழல் சம்பந்தமான சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் அல்லது அவரால் நியமிக்கப்படுபவர்
ன. சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் தலைவரினால் நியமிக்கப்பட்டதன் பேரில் பின்வரும் நிறுவனங்களில் இருந்து ஒவ்வொருவராக அரசியலமைப்புச் சபையினால் நியமிக்கப்படுபவர்கள்:
   i. இலங்கைச் சுங்கம்
   ii. உண்ணாட்டரசிறைத் திணைக்களம்
   iii. பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு
   iv. இலங்கை நிதிப் புலனாய்வுப் பிரிவு
   v. நீதி அமைச்சு
   எை. நிதி அமைச்சு
   vii. வெளிவிவகார அமைச்சு

தலைவருக்கு மேலதிகமாக, பின்வரும் பரப்புக்களில் நிபுணத்துவம் கொண்ட நான்கு தனிநபர்களை அரசியலமைப்புச் சபை நியமிக்கலாம்:
ய. குற்றவியல் நீதிஇ
டி. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்இ
உ. பொருளியல், நிதி மற்றும் கணக்காய்வு, மற்றும்இ
ன. தொடர்புடைய சிவில் சமூகச் செயற்பாட்டியம்.

அதிகாரசபையானது பின்வருவனவற்றிற்கான பொறுப்புக்கள் உள்ளடங்கலாக பரந்த வீச்சிலான அதிகாரங்களைக் கொண்ட சட்ட அமுலாக்கல் அமைப்பாகும்:

- ஏனைய சட்ட அமுலாக்கல் முகவர்களுக்கிடையில் ஒருங்கிணைப்பு.
- குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகளின் பறிமுதல், மாற்றம், முகாமைத்துவம் மற்றும் கைப்பற்றல் பற்றிய தரவுத்தளம் ஒன்றினைப் பேணல்.
- குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான கைப்பற்றல் நடவடிக்கையினை ஆரம்பிப்பதற்காக நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.
- இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பான அமுலாக்கம் பற்றிய ஆய்வினை நடத்தல்.
- ஏனைய நியதிச்சட்ட அமைப்புக்கள் மற்றும் சட்ட அமுலாக்க முகவர்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினையும் ஏனைய செயற்பாட்டு ஏற்பாடுகளையும் மேற்கொள்ளல்.

பின்வரும் நிறுவனங்கள் உள்ளடங்கலாக ஏனைய சட்ட அமுலாக்கல் அதிகாரசபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பது அதிகாரசபையின் முக்கியமான அதிகாரங்களில் ஒன்றாகும்:
ய. பொலிஸ் (CID, FCID உள்ளடங்கலாக)
டி. CIABOC
உ. இலங்கைச் சுங்கம்
ன. இலங்கை மதுவரித் திணைக்களம்
ந. இலங்கை காடுகள் திணைக்களம்
க. காட்டுவன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்
ப. பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

மேலும் தேடிக்கண்டுபிடிப்பதற்கும் பறிமுதல் செய்வதற்கும் தனித்துவமான திறன்களைத் தேவைப்படுத்தும் சொத்துக்களைக் கையாளுகையில் அதற்குப் பங்களிப்பு வழங்கக்கூடிய புறநிபுணர்கள் உள்ளிட்ட கூட்டு விசாரணை அணிகளை உருவாக்குவதற்கான அதிகாரத்தினையும் இது கொண்டுள்ளது.

சொத்தினைப் பறிமுதல் செய்ததும், இலங்கை குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் மீட்டல் மற்றும் முகாமைத்துவ அதிகாரசபையானது குறிப்பிட்ட சொத்துக்களை சட்ட நடவடிக்கைகள் முடிவடையும் வரையில் முகாமைத்துவம் செய்வதற்கான பொறுப்பினைக் கொண்டிருக்கும். சொத்துக்களின் தற்காலிக நிர்வாகத்திற்கு மேலதிகமாக, இந்த அமைப்பானது குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் பற்றிய விசாரணைகளை நடத்துவதற்கும் நீதிமுறைக் கட்டளைகளின் அடிப்படையில் அவற்றினை அகற்றுவதற்கும் பொறுப்பினைக் கொண்டுள்ளது. தமது ஆணையினை நிறைவேற்றுகையில், ஏனைய நியதிச்சட்ட அமைப்புக்கள் மற்றும் சட்ட அமுலாக்க முகவர்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையினையும் ஏனைய செயற்பாட்டு ஏற்பாடுகளையும் மேற்கொள்வதற்கான அதிகாரத்தினையும் அதிகாரசபை கொண்டிருக்கும்.

49. இணைப்பு 1 இன் பிரிவு ஓஜஜஜ இனை உசாவவும்: இலங்கை குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் மற்றும் முகாமைத்துவம் அதிகாரசபை (‘அதிகாரசபை’) மற்றும் நிறுவன ஏற்பாடுகள்

உத்தேசச் சட்டத்தின் கீழ் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை அதிகாரமளிக்கப்பட்ட சட்ட அமுலாக்கல் நிறுவனம் ஒன்று பறிமுதல் செய்கையில், அவ்வாறான பறிமுதலினை 3 வேலை நாட்களினுள் அதிகாரசபைக்கு அறிவிக்கவேண்டும் என நிறுவனம் தேவைப்படுத்தப்படுகின்றது. நீதிமன்றத்தில் பறிமுதல் பற்றிய அறிக்கையினைத் தாக்கல் செய்வதற்கு அவற்றிற்கு 7 வேலை நாட்கள் வழங்கப்படுகின்றன. பறிமுதல்கள் சட்ட அதிகாரத்திற்கு அப்பால் மேற்கொள்ளப்படவில்லை என்பதனை உறுதிப்படுத்தவும் யாரின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டனவோ அவரின் உரிமைகளைப் பாதுகாக்க வகைப்பொறுப்புப் பொறிமுறை அமுலில் உள்ளது என்பதனை உறுதிப்படுத்தவும் பாதுகாப்பு ஏற்பாடுகளாகவே இந்த ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதிகாரசபையானது உயர்மட்ட சட்ட அமுலாக்கல் முகவர்களின் பிரதிநிதிகளைக் கொண்டுள்ள அதேவேளை, இந்த அரச செயற்படுனர்கள், கண்காணிப்பில் சிவில் சமூகம் பிரதான வகிபாத்திரத்தினை வகிக்கும் பரிணாமமடைந்துவரும் உலகளாவிய நடைமுறையினைப் பிரதிபலித்து, குழுவில் சிவில் சமூகப் பிரதிநிதித்துவத்தின் தேவையினை அங்கீகரித்திருப்பது ஊக்கமளிப்பதாக உள்ளது.

### 4.8 குற்றச்செயல்களினால் கைப்பற்றப்பட்டவற்றிற்கான நம்பிக்கை நிதியம் (நிதியம்)

சட்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து, பெறப்பட்டவைகள் கைப்பற்றப்பட்டிருந்தால், பாதிக்கப்பட்டவர்களின் இழப்பிற்காக அவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகளைச் சட்டம் வழங்குகின்றது. இதன் பின்னர், பறிமுதல் செய்யப்பட்டுள்ள சொத்தின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் ஏற்பட்ட உண்மையான செலவினை அல்லது பெறப்பட்டவற்றின் 10 சதவிகிதமானதை, இதில் எது கூடியதோ அதனை அதிகாரசபை பெற்றுக்கொள்ளும்.

மீட்கப்பட்ட நிதிகளின் முகாமைத்துவத்திற்கான பொறிமுறையினை நிறுவுவதில், அரசினால் பொதுவாக்கப்பட்டுள்ள திரட்டிய நிதியத்தில் சொத்துக்களை வைப்புச் செய்வதற்கான தேவையினைக் குழு கவனத்திற்கொண்டது. சுயாதீனமாகக் கண்காணிக்கப்படும் / கட்டுப்படுத்தப்படும் நிதியத்திற்காக TISL உறுதியாக ஆதரித்துவாதாடியது. வரையறுக்கப்பட்ட மேற்பார்வையுடன் வைப்புச் செய்யப்பட்ட பணங்கள் மீண்டும் திருடப்பட்ட உதாரணங்களை TISL கோடிட்டுக்காட்டியது.[50] தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கிரமமான மதிப்பீட்டுடன் பாராளுமன்றத்தின் கண்காணிப்புப் பொறிமுறைக்கு நிதியத்தினை உட்படுத்துவதன் முக்கியத்துவத்தினை TISL கவனத்திற்கொண்டது. மீட்கப்பட்ட சொத்துக்களின் உரிய முகாமைத்துவத்தினைக் கண்காணிப்பதற்காக சுயாதீனமான நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினைக் கொண்டிருப்பதற்கான முக்கியத்துவத்தினையும் TISL கவனத்திற்கொண்டது. நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினால் மேற்பார்வை செய்யப்படும் நம்பிக்கை நிதியம் ஒன்று கைப்பற்றப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றிற்காக இருக்கவேண்டும் எனக் குழு இணங்கியது.

அதன் பின்னர், எஞ்சிய நிதிகள் நிதியத்தினில் இருக்கவேண்டும். நிதியத்தில் ஏழு உறுப்பினர்கள் இருப்பர். "அவர்கள் நீதி, சட்ட அமுலாக்கம், பொது நிதி, நிதி முகாமைத்துவம், வியாபார முகாமைத்துவம், கணக்காய்வு போன்ற பரப்புக்களிலும் சம்பந்தப்பட்ட சிவில் சமூகச் செயற்பாடுகளிலும் நிபுணத்துவம் உடையவர்களாக இருப்பர். இந்த நபர்கள் அரசியலமைப்புச் சபையினால் நியமிக்கப்படுவர்." நிதியமானது வெளிப்படைத்தன்மை உடையதாக இருக்கவேண்டும் எனவும் அரச பரிசீலனைக்கு வெளிப்படையானதாக இருக்கவேண்டும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த நிதியமானது தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் கணக்காய்வு செய்யப்படவேண்டும் என்பதுடன் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பகிரங்கமாகக் கிடைக்கச்செய்யப்படவேண்டும் என்பதுடன் அது வருடாந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

செயன்முறையின் ஆரம்பக் கட்டத்திலேயே சொத்துக்களை முகாமைத்துவம் செய்வதன் அங்கமாக சிவில் சமூக நிறுவனங்களை ஆக்கும் முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டு கொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை ஊக்கம் தருவதாக அமைந்துள்ளது. திரும்ப வழங்கப்பட்ட சொத்துக்களின் முகாமைத்துவம் மற்றும் அவற்றின் அகற்றல் ஆகியவற்றில் சிவில் சமூக நிறுவனங்களின் ஈடுபாடு புகுயுசு கோட்பாடுகளில் சிறந்த கோட்பாடாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.[51]

50. நைஜீரியாவின் மீட்கப்பட்ட சொத்துக்களைக் கண்டுபிடித்தல்இ CiFAR, <https://cifar.eu/tracking-nigeria-assets/>
51. அடிக்குறிப்பு 22, கோட்பாடு 10 இனைப் பார்க்க

## 4.9 பறிமுதல் செய்யப்பட்டுள்ள மற்றும் கைப்பற்றப்பட்டுள்ள சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல்[52]

கைப்பற்றப்பட்டுள்ள சொத்துக்களுக்காக பின்வரும் நோக்கங்கள் உள்ளடக்கப்படவேண்டும் என குழுவிலுள்ள அரச பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர். (a-f, g TISL சமர்ப்பணங்களைத் தொடர்ந்து பின்னர் சேர்க்கப்பட்டன):

a. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை மீட்பதில் சட்ட அமுலாக்கலின் முயற்சியில் அதனை வலுப்படுத்தல்

b. நீதி நிர்வாகத்தினை வலுப்படுத்தல்.

c. குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகளையும் உரித்துக்களையும் மேம்படுத்திப் பாதுகாத்தல்.

d. குற்றச்செயல் தடுப்பு நடவடிக்கைகளை விருத்திசெய்து பேணுதற்காக.

e. இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதில் சம்பந்தப்பட்டுள்ள சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்குச் சட்டரீதியான ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கு.

f. 'தகவல் வழங்குபவர்களுக்கு வெகுமதி வழங்கும் நிதியம்' எனும் தலைப்பிலான நிதியம் ஒன்றினை வலுப்படுத்த.

g. நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகளின் இலக்குகளை அடைந்துகொள்வதற்கு.

உத்தேச சட்டமானது குற்றச்செயலினைத் தடுப்பதிலும் குற்றவியல் நீதி முறைமையினை வலுப்படுத்துவதிலும் அதிக நாட்டத்தினைக் கொண்டுள்ளது என்றும் யாரிடமிருந்து நிதிகள் திருடப்பட்டதோ அவ்வாறான பாதிக்கப்பட்ட இலங்கை மக்களின் நன்மைக்காக மீட்கப்பட்ட சொத்துக்கள் பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதில் குறைந்த அளவே கவனம் குவிக்கின்றது என்பதை வுஜளுடு கவனத்திற்கொண்டுள்ளது. சமூக அபிவிருத்தித் திட்டங்களுக்காக நிதிகளைப் பயன்படுத்தும் உலகிலுள்ள சிறந்த நடைமுறைகளை குழு ஏற்று நடைமுறைப்படுத்தவேண்டும் என வுஜளுடு வலியுறுத்தியது. சமூக இலக்குகளை அடைவதற்காக மீட்கப்பட்ட சொத்துக்களைப் பயன்படுத்தும் நன்கறியப்பட்ட உதாரணங்களில் ஒன்று டீழுவுயு பவுண்டேசன் மாதிரியாகும். இதில் நிதியானது கஜகஸ்தானின் சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்பட்டன.[53]

ஊழலினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவேண்டும் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு கோட்பாடாகும்.[54] இலஞ்சம் மற்றும் ஊழல் உள்ளிட்ட குற்றச்செயல்கள் அடையாளம் காணப்படக்கூடிய தனிநபர்களின் குழுக்கள் மற்றும் பரந்த சமூகம் ஆகியவற்றிற்குச் சேதத்தினை ஏற்படுத்தலாம். முன்னைய இரண்டு குழுக்களும் பாதிக்கப்பட்டுள்ளவர்களாக அடையாளம் காணப்படக்கூடியவர்கள் மற்றும் அவர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவேண்டும் என்பதனை அங்கீகரிக்கின்ற அதேவேளை, சமூக மட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட சேதத்தினைத் திருத்துவதும் முக்கியமானதாகும். இவ்வகையான சேதமானது சுகாதாரம், கல்வி மற்றும் பாதுகாப்பு போன்ற கூட்டு அடிப்படை உரிமைகளில் தாக்கத்தினை ஏற்படுத்தலாம். இவ்வகையான சேதத்தினை அளப்பது கடினமானது என்கின்ற காரணத்தினால் இது முக்கியமற்றது என்றும் சாத்தியமற்றது என்றும் பொதுவாகப் புறக்கணிக்கப்படுவது குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

சமூகத்திற்கு ஏற்பட்ட சேதத்தினை ஈடுசெய்யும் குறிப்பிட்ட வழிகளில் ஒன்று நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குப் பொறிமுறை ஒன்றினை அமுலில் கொண்டிருப்பதாகும்(ளுனுபுள). நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகள் எனும் சொற்பதம் குறிப்பிட்டுக் கூறும்படி பயன்படுத்தப்படாவிட்டாலும் மீட்கப்பட்ட சொத்துக்களைச் சர்வதேச ரீதியாக முகாமைத்துவம் செய்யும் போக்கு என்னவெனில் அவற்றினை மூல நாடுகளைச் சேர்ந்த சமுதாயங்களின் நலனோம்புகையினை அதிகரிக்கும் விதத்தில் கருத்திட்டங்களில் பயன்படுத்துவதாகும் என்பதனை வுஜளுடு கவனத்திற் கொண்டுள்ளது.

உதாரணமாக, இத்தாலியச் சட்டத்தின் கீழ், மீட்கப்பட்ட சொத்துக்களை சட்ட அமுலாக்கல் மற்றும் சிவில் பாதுகாப்பு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் ஆற்றலுக்கு அப்பால், அச்சொத்துக்களை சமூக நோக்கங்களை அடைவதற்காகப் பயன்படுத்தமுடியும்.[55] ஐரோப்பிய யூனியனின் உறுப்பு நாடுகள் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை பொது நலனிற்காகவும் சமூக நோக்கங்களுக்காகவும் பயன்படுத்துவதை ஐரோப்பிய யூனியன் பணிப்புரை 2014/42/EU ஊக்கப்படுத்துகின்றது.

இக்கோட்பாட்டின் அடிப்படையில், திரும்ப ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களைப் பயன்படுத்தக்கூடிய சாத்தியமான பரப்புக்களாக SDG இலக்குகளின் கீழ் முன்னுரிமை இலக்குகளை அடையாளம் காண்பதன் தேவையினை TISL வலியுறுத்தியது. எந்த நோக்கம் முன்னுரிமைக் கருதுகோளினைத் தேவைப்படுத்துகின்றது என்பதனைத் தீர்மானிப்பதற்கான தற்றுணிபு நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையினைச் சார்ந்ததாகும். இந்த முன்மொழிவு வரைபுக் குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேலேயுள்ள உபபிரிவு (g) இல்

52. இணைப்பு 01 இன் பகுதி ஐஏ இனைப் பார்க்க: கைப்பற்றப்படாது பறிமுதல் செய்யப்பட்ட சொத்து, பகுதி ஒஐ: கைப்பற்றப்பட்ட பெறப்பட்டவற்றினைப் பிரித்து அவற்றினை நம்பிக்கை நிதியம் ஒன்றுக்கு மாற்றல்

53. BOTA மன்றம் <https://www.irex.org/resource/bota-foundation-final-report> 2019 செப்டெம்பர் 10 இல் அணுகப்பட்டது

54. UNCAC றுப்புரை 32, உறுப்புரை 57 (3) (c), GFAR கோட்பாடுகள்

55. இத்தாலியச் சட்டம் 109∴1996

ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.
கொள்கையின் கீழ், நடவடிக்கைகள் எதிராக முன்னெடுக்கப்படாத பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்களை (குற்றத்தீர்ப்புக்குப் பின்னரான கைப்பற்றல், குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான மீட்பு அல்லது நீட்டிக்கப்பட்ட கைப்பற்றல் நடவடிக்கைகள்), அவ்வாறான பொருட்கள் தம்மிடம் மீள ஒப்படைக்கப்படவேண்டும் என்பதனை நீதிமன்றம் திருப்தியடையும் விதத்தில் நிரூபிக்கக்கூடிய நபரிடம் (நபர்களிடம்) நீதிமுறைக் கட்டளையின் மூலம் திரும்ப ஒப்படைக்கப்படவேண்டும். சொத்து உரிமையின் சாத்தியமான ஊடுருவலுக்கு எதிரான ஒரு பாதுகாப்பாகவே இது உள்ளடக்கப்பட்டுள்ளது. தணிப்புக்கான இந்த நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ள அதேவேளை, இலங்கை அரசியலமைப்பில் பொதியப்பட்டுள்ள இலங்கை அடிப்படை உரிமைகளுடன் இயைபுறுவதனை உறுதிப்படுத்துவதற்காக அதிகாரசபையின் இறுதி உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் பற்றிய பரந்த சிவில் சமூகத்துடனான கலந்தாலோசிப்புக்கள், குறிப்பாக வரைபுச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்படக்கூடிய பறிமுதலுக்கான அதிகாரத்தில் ஏதாவது நீட்டிப்புக்கள் போன்றவை உன்னிப்பாகப் பரிசீலிக்கப்படவேண்டும்.

## 4.10 சர்வதேச ஒத்துழைப்பு

வெளிநாட்டு சட்ட அமுலாக்கல் முகவர்கள் மற்றும் நிபுணர்களையும் உள்ளடக்கக்கூடிய கூட்டு விசாரணை அணிகளை அழைக்கக்கூடிய அதிகாரத்தினை அதிகாரசபை கொண்டுள்ளது என்பதைக் கொள்கை கவனத்திற்கொள்கின்றது.[56] குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினைப் பறிமுதல் செய்வதற்கும் கைப்பற்றுவதற்கும் அவற்றின் பெறுமதியினை மீளஒப்படைப்பதற்குத் வெளிநாட்டு நீதிமுறை மற்றும் சட்ட அமுலாக்கல் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதற்கான அதிகாரத்தினை அதிகாரசபை கொண்டிருக்கும். அதேபோன்று ஏனைய நாடுகளுக்குச் சொந்தமான குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் இலங்கையில் கண்டுபிடிக்கப்படுகையில் அதே வேண்டுகோள்களை வேறு நாடுகளில் இருந்து பெறுவதற்கான அதிகாரத்தினையும் அதிகாரசபை கொண்டிருக்கும். மேலும் நிதியத்தின் இசைவுடன் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றின் மாற்றம் அத்துடன் அல்லது பகிர்வு ஆகியவற்றுக்காக வெளிநாட்டு அரசுகளுடன் அல்லது நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கான அதிகாரத்தினையும் அதிகாரசபை கொண்டுள்ளது.[57]

திருடப்பட்ட சொத்துக்களைச் செயற்திறன்மிகு முறையில் மீட்பதில் மிக முக்கியமான சர்வதேச ஒத்துழைப்பிற்கான அடிப்படையினை இந்த ஏற்பாடுகள் அனைத்தும் வழங்குகின்றன. இவ்வாறான வேண்டுகோள்களின் உரிய காலத்திலான மற்றும் செயற்திறன்மிக்க பாய்ச்சல்கள் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை மீட்பதனை ஆரம்பிப்பதில் அவசியமானதாகும். சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவம் ருஊேயுஊஇ உறுப்புரை 55 இல் கோடிட்டுக்காட்டப்பட்டுள்ளது.[58]

## 4.11 அடிப்படை உரிமைகள் கரிசணைகள் மற்றும் சொத்து மீட்பில் பாதிக்கப்பட்டவரை மையப்படுத்திய அணுகுமுறை

வரைபுக் குழுவில் வுஜஉடு ஈடுபாட்டின் ஆதாரமாக உள்ள பிரதான கோட்பாடு, திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதில் பாதிக்கப்பட்டவரை மையப்படுத்திய அணுகுமுறையினைக் கைக்கொள்வதற்கான தேவையாகும். சொத்து மீட்புச் செயன்முறையின் சகல கட்டங்களிலும் இந்த அணுகுமுறை பின்பற்றப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்த, குற்றவியல் நீதியின் குறிக்கோள்களை அடைவதற்கு அப்பால் அத்தியாவசியம், விகிதாசாரத்தன்மை மற்றும் பொதுநலன் ஆகிய மூன்று வழிகாட்டல் கோட்பாடுகளை வுஜஉடு முன்மொழிந்துள்ளது.[59] மேலும், நீட்டிக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களும், அதாவது, இலங்கைப் பிரசைகளும் கருத்திற்கொள்ளப்பட்டு நம்பிக்கை நிதியத்தினைப் பயன்படுத்தி நட்டஈடு வழங்கப்படவேண்டும் என வுஜஉடு முன்மொழிகின்றது. (மீட்கப்பட்ட சொத்துக்களை முகாமைத்துவம் செய்வது என்பதன் கீழ் மேலேயுள்ளதைத் தயவுசெய்து உசாவவும்).

பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய சில ஏற்பாடுகள் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கக்கூடியவையாகும். உதாரணமாக, குற்றத்தீர்ப்பிற்குப் பின்னரான அடிப்படையில் கைப்பற்றல்களை அகற்றுகின்ற

56. இணைப்பு 01 இன் பிரிவு 46 இனை உசாவவும்
57. இணைப்பு 01 இன் பிரிவுகள் 47,48 மற்றும் 49 ஆகியவற்றினை உசாவவும்
58. இணைப்பு 01 இன் உறுப்புரை 55 இனை உசாவவும்
59. இணைப்பு 01 இன் பிரிவு 7 இனை உசாவவும்

சந்தர்ப்பங்களில் (உதா: அடையாளம் காணப்பட்ட குற்றச்செயல்களில் இருந்து பெறப்பட்டவைகளின் அல்லது அவற்றின் பெறுமதியின் அற்பத்தன்மையின் காரணமாக அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு அடையாளம் காணப்படக்கூடிய சொத்துக்கள் இல்லாதபோது), பாதிக்கப்பட்டவரின் ஒத்திசைவினை அதிகாரசபை பெறவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், சாத்தியமான கைப்பற்றல் பற்றிப் பாதிக்கப்பட்டவர் அறிந்துகொள்வதற்காக, அவ்வாறான கைப்பற்றல்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய அறிவித்தலை வழங்குவதற்கான கடப்பாட்டினை அதிகாரசபை சட்டபூர்வமாகக் கொண்டுள்ளது. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகளில் இருந்து பாதிக்கப்பட்டவர் நட்டஈட்டினைப் பெற்றுக்கொண்டாலும் சட்ட நடவடிக்கைகள் மூலம் நட்டஈட்டினைக் கோருவதற்கான உரிமையினைப் பாதிக்கப்பட்டவர் கொண்டுள்ளார்.

# 5. முடிவு

குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் சட்டவாக்கச் சட்டகத்தின் வரைபுச் செயன்முறை வுஜளூடு இற்கு ஒரு புதிய இயங்குதிறன்மிக்க பரப்பாகும் என்துடன் இந்தப் பகுப்பாய்வுமிக்க ஆக்கமானது முக்கியமான கருதுகோள்கள் பற்றித் தம்மை மதிப்பிட விரும்புவர்களுக்கும் 2018 இல் நடைபெற்ற கொள்கைக் கலந்துரையாடல்களின் தன்மை மற்றும் உள்ளடக்கத்தினைப் புரிந்துகொள்ள விரும்புகின்றவர்களுக்கும் பயன்மிக்க கருவியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறைந்தது சில சிவில் சமூகப் பங்கேற்புடன் கொள்கையினை வரைவது கொள்கை உருவாக்கத்தில் சிவில் சமூக நிறுவனங்களின் ஈடுபாடு மூலமாக அரச கொள்கை உறுதியாக இருப்பதற்கான வெளிப்பாடாகும். முன்மொழிவுகளின் சில அம்சங்கள் தொடர்பாகச் சில இணக்கமின்மைகள் இருக்கின்ற அதேவேளை, பல காரணிகளும் மாற்றுக் கருத்துக்களும் வழங்கப்பட்டுக் கலந்துரையாடப்பட்டுள்ளன என்பது உறுதிப்படுத்துகின்றது. சொத்துக்களை மீட்டலுக்கான பாதிக்கப்பட்டவரை மையப்படுத்திய மற்றும் வெளிப்படைத்தன்மைமிக்க அணுகுமுறைக்குப் பதிலாக சட்ட அமுலாக்கல் கோணத்தினை நோக்கிக் கலந்துரையாடல் திரும்பியபோது சில சந்தர்ப்பங்களில் TISL நடுநிலைமைக் குரலாக இருந்துள்ளது. எவ்வாறாயினும், இந்தச் சட்டத்தினால் அமுல்படுத்தப்படும் கருத்தியல்களில் சில (உதா: நீட்டிக்கப்பட்ட கைப்பற்றல்கள், குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான சொத்து மீட்பு), மனித உரிமைகள் பரப்புக்களில் பணியாற்றும் தொழில்ரீதியானவர்கள் உள்ளிட்ட பரந்த சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் பங்கீடுபாட்டாளர்களுடனான உண்மையான கலந்துரையாடல்களின் பின்னர் உரிய முறையில் உருவாக்கப்படாவிட்டால், தவறாகப் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு உண்டு. எனவே, சட்டத்தினைத் தவறாகப் பயன்படுத்தும் சாத்தியத்தினை மேலும் குறைப்பதற்காகச் சட்டத்தின் உண்மையான ஏற்பாடுகளின் வரைபுச் செயன்முறையில் அவ்வாறான நிறுவனங்களும் தனிநபர்களும் கலந்தாலோசிக்கப்படுவதனை TISL வலியுறுத்துகின்றது. மேலும் இந்தச் சட்டம் செயற்திறன்மிகு முறையில் அமுல்படுத்தப்படுவதற்கு பரந்த குற்றவியல் நீதி முறைமை மறுசீராக்கல் இன்றியமையாததாக இருக்கும்.

வெளிப்படைத்தன்மை, வகைப்பொறுப்பு மற்றும் பொறுப்புவாய்ந்த முறையில் சொத்துக்களைத் திரும்ப ஒப்படைத்தல் ஆகியவற்றினை உறுதிப்படுத்துவதற்காக, இந்தக் கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு வரையப்படும் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் பற்றிய சட்டத்தினுள் ஒருங்கிணைக்கப்படவுள்ளவற்றில் பின்வருவன சில முக்கியமான கூறுகளாகும் என்பதை ளூடு கவனத்திற்கொள்கின்றது:

- சட்டத்தினைத் தகவலறியும் உரிமைச் சட்டகத்திற்கு உட்படுத்தல்
- அதிகாரசபையிலும் நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையிலும் சிவில் சமூகப் பிரசன்னத்தினை உறுதிப்படுத்தல்
- நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதில் மீட்கப்பட்ட சொத்துக்களைப் பயன்படுத்தல்
- நிதியத்தின் கணக்குகள் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் கணக்காய்வு செய்யப்பட்டு பகிரங்கமாகக் கிடைக்கச் செய்யப்படல் வேண்டும் என்பதுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
- நிதியத்தின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் வெளிப்படைத்தன்மை உடையதாகவும் பொதுமக்களின் பரிசோதனைக்குப் பகிரங்கமாகக் கிடைக்கக்கூடியதாகவும் உள்ளது என்பதை உறுதிப்படுத்தல்.
- இன்றியமையாத நிலை, விகிதாசாரத் தன்மை மற்றும் பொதுநலன் ஆகியவற்றின் கோட்பாடுகள் உத்தேச சட்டத்தினை அமுல்படுத்தல் மற்றும் வியாக்கியானப்படுத்தலில் வழிகாட்டல் கோட்பாடுகளாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தல்

குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை எதிர்காலச் சட்டமூலத்தினை இயற்றுவதற்கான அரசியல் ஆர்வம் எதிர்காலத்தில் தூண்டப்படாது என்றாலும் இச்சட்டமூலம் முன்னெடுத்துச் செல்லப்பட்டால், இந்த ஆய்வானது அப்போது சட்டவாக்குனர்களுக்கும் கொள்கை வகுப்போருக்கும் தகவல்களை வழங்கும் என TISL எதிர்பார்க்கின்றது. இது சட்டவிரோத நிதிப் பாய்ச்சல்களில் சர்வதேச மற்றும் உள்நாட்டுக் கடப்பாடுகளுக்கு இலங்கை இயைபுறுகின்றது என்பதை உறுதிப்படுத்தும்.

# இணைப்பு 1

## இலங்கையின் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் உத்தேச சட்டத்தின் கொள்கை மற்றும் சட்டவாக்கச் சட்டகம்

### பகுதி I: உத்தேச சட்டத்தின் நோக்கம்

1. உத்தேச (கொள்கைக் குறிக்கோள்கள்) சட்டத்தின் நோக்கம் பின்வருமாறு இருக்கும்:
a. தவறாகப் பெறப்பட்ட சொத்துக்களைக் (குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள்) குற்றச்செயல் புரிந்தவர்கள் அடைவதைத் தடுத்தல்இ
b. குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டினை வழங்கல்,
c. பயங்கரவாதம், நிதி மற்றும் பொருளாதாரக் குற்றச்செயல்கள் உள்ளிட்ட ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்களைக் கீழறுத்தல்இ
d. பொருளாதார ரீதியாகச் சாத்தியமான, குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் மீட்பு முறைமையினை உருவாக்கல்இ
e. அரசு, சமூகம் மற்றும் குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களின் நன்மைக்காகப் பறிமுதல் செய்யப்பட்ட அல்லது கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதியினைப் பாதுகாத்தல், மற்றும்
f. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் மீட்பு முறைமையின் வகைப்பொறுப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையினையும் அதில் பொதுமக்களின் நம்பிக்கையினையும் உறுதிப்படுத்தல்.

2. உத்தேசச் சட்டத்தினை ஏற்று நடைமுறைப்படுத்தலானது, இலங்கை 1 தொடர்பான ஊழலுக்கெதிரான ஐக்கிய நாடுகள் சமவாயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் போதைப்பொருள் மற்றும் குற்றச்செயல்கள் அலுவலகத்தினால் நடத்தப்பட்ட சகநாடுகள் மீளாய்வு மற்றும் பணம் தூய்தாக்கல் 2 பற்றிய ஆசிய பசுபிக் குழுவினால் இலங்கை பற்றி நடத்தப்பட்ட பரஸ்பர மதிப்பீட்டின் பெறுபேறுகள் ஆகியவை 'திருடப்பட்ட சொத்துக்கள்' பற்றி வழங்கியுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றும்.

### பகுதி II: உத்தேச சட்டத்தின் நோக்கெல்லை

3. இந்தச் சட்டம் பின்வரும் சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கப்படும்:
a. இலங்கையில் எந்த ஒரு நபரும் எந்த ஒரு குற்றத்தினையும் இழைக்கையில்.
b. (஖) ஓர் இலங்கைப் பிரசைஇ (஖ை) இரட்டைப் பிரசாவுரிமை கொண்ட இலங்கையர்இ (஖ைை) இலங்கையில் வசிக்கும் அல்லது இலங்கையில் காணப்பட்ட நபர், இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே ஏதாவது ஒரு குற்றத்தினை இழைத்து, அவ்வாறான குற்றச்செயலில் இருந்து பெறப்பட்டவை இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே கண்டுபிடிக்கப்படல்.
c. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை இலங்கையில் கண்டுபிடிக்கப்படுகையில்.
d. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் இலங்கையினுள் கொண்டுவரப்படல், இலங்கையில் இருந்து வெளியே எடுத்துச் செல்லப்படல் அல்லது இலங்கையின் ஊடாகக் கடத்தப்படல்.

4. உத்தேச சட்டமானது பின்வருவனவற்றிற்கான செயற்திறன்மிக்க மற்றும் துரிதமான செயல்விதிகளுக்கான ஏற்பாட்டினை வழங்கும்:
a. இலங்கையின் உள்ளே அல்லது இலங்கைக்கு வெளியே அமைந்துள்ளபோதிலும் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றின் கொள்ளல், உரிமைநிலைப்படுத்தல், மறைத்தல், ஒருங்கிணைத்தல், பயன்படுத்தல், கட்டுப்படுத்தல் மற்றும் உடைமையாக வைத்திருத்தல் பற்றிய விசாரணைஇ
b. அவ்வாறு பெறப்பட்டவற்றினை அடையாளப்படுத்தல், தேடிச்செல்லல் மற்றும் கண்டுபிடித்தல்இ
c. கைப்பற்றப்பட்ட ∴ பறிமுதல் செய்யப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை உள்ளடங்கலாக மற்றும் அவற்றின் பணப் பெறுமதியினைப் பெற்றுக்கொள்ளல் உள்ளடங்கலாக அவ்வாறான பெறப்பட்டவற்றினைப் பறிமுதல் செய்தல், முடக்கிவைத்தல் (தடுப்புக்காப்பு), நிர்வகித்தல் / முகாமைத்துவம் செய்தல்இ
d. இந்தச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள குற்றங்களை விசாரித்தல்,
e. இந்தச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை மற்றும் குற்றங்கள் ஆகியவற்றிற்கான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்தல்
f. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினைக் கைப்பற்றல் / பறிமுதல் செய்தல்
g. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை இல்லாதொழித்தல்இ
h. குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கல்இ
i. உண்மையான மூன்றாந்தரப்பின் உரிமைகளை அங்கீகரித்தல்இ
j. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை தொடர்பில் பரஸ்பர சட்ட உதவி வழங்கல்இ

k. இலங்கையில் நடைபெற்ற குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றிற்காக நேரடியான மீட்பினைத் தனிநபர்களும் வெளிநாட்டு அரசுகளும் கோருவதற்காக தற்போது அமுலிலுள்ள சிவில் சட்டப் பரிகாரத்தினை அங்கீகரித்தல்இ
l. பாராளுமன்றத்திற்கு வருடாந்த அறிக்கையிடுவதற்கான மற்றும் பருவகாலப் பொது அறிக்கையிடலுக்கான ஏற்பாட்டினை வழங்கல்
m. அவற்றின் இடைநேர்விளைவான வேறு ஏதாவது விடயங்கள்.

5. உத்தேச சட்டமானது:
ை. ஏனையவற்றின் மத்தியில், இயற்கையான நபர்களுக்குச் சொந்தமான அல்லது பெருநிறுவனங்களுக்குச் சொந்தமான குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கும்.
ைை. உத்தேச சட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக நியதிச்சட்ட அமைப்பொன்றினை நிறுவுவதற்கு ஏற்பாடுகளை வழங்கி அவ்வாறான நியதிச்சட்ட அதிகாரசபைக்கு இலங்கையின் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் மீட்பு மற்றும முகாமைத்துவ அதிகாரசபை எனப் பெயரிடும் (இதன் பின்னர் ‘அதிகாரசபை’ எனக் குறிப்பிடப்படும்.)

6. தமது உரித்தாண்மைக் காலப்பகுதியின் போது அல்லது சட்டபூர்வமான உரித்துக் காலப்பகுதியின்போது குற்றச்செயலுக்கு உட்பட்ட சொத்துக்களுக்குச் சொந்தமான அல்லது சொத்துகளை வைத்திருப்பதற்கு சட்டபூர்வமான உரித்துடைய நபர்கள், அவசியமான விசாரணைகள் மற்றும் நீதிமுறை விசாரணைகளைத் தொடர்ந்து அவ்வாறான விசாரணைகளின் போது அவ்வாறான உரித்தாண்மை அல்லது உரித்தினைக் கோரும் அவ்வாறான உரிமையாளர் அல்லது நபரினால் உரித்தாண்மை அல்லது உரித்து நிரூபிக்கப்படுகையில், அவ்வாறான சொத்துத் தொடர்பாக இங்கே உள்ளடங்கியுள்ள கைப்பற்றல் அல்லது பறிமுதல் தொடர்பான திட்டத்திற்கு உட்படாமல் அவ்வாறான சொத்தினை உடைமை மற்றும் கட்டுப்பாட்டினைத் துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்கான உரித்தினைக் கொண்டிருப்பர். எவ்வாறாயினும், அவ்வாறான விசாரணைகள் மற்றும் நீதிமுறை விசாரணைகள் காலம் எடுக்குமாக இருந்தால், நீதிமுறை விசாரணையினைத் தொடர்ந்து, விசாரணையின் பூர்த்தி நிலுவையாக இருக்கையில், அவ்வாறான சொத்துக்கு அவ்வாறான கோரிக்கை விடுப்பவரினால் வழங்கப்படும் பிணையின் பேரில், அவ்வாறான சொத்தின் உடைமைக்கான உரித்தினைக் கோரிக்கையாளர் பெறுவார்.

7. உத்தேசச் சட்டத்தின் ஏற்பாடுகளின் அமுலாக்கல் மற்றும் வியாக்கியானப்படுத்தலில் பின்வருபவை வழிகாட்டல் கோட்பாடுகளாக இருக்கும்:
(a) குற்றவியல் நீதியின் குறிக்கோள்களை அடைதல்
(b) தவிர்க்க முடியாத நிலை
(c) விகிதாசாரத் தன்மை
(d) பொதுநலன்

8. (a) பிரயோகிக்கத்தக்கவிடத்து, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டம், இலஞ்சச் சட்டம் மற்றும் குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவைச் சட்டம் ஆகியவற்றில் உள்ளடங்கியுள்ள பணம் தூய்தாக்கலினால் பெறப்பட்டவற்றினைப் பறிமுதல் செய்தல், முடக்கிவைத்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் கைப்பற்றல் தொடர்பான ஏற்பாடுகள் நீக்கப்பட்டு அவை உத்தேச சட்டத்தின் ஏற்பாடுகளினால் பதிலீடு செய்யப்படும்.
(b) சுங்கக் கட்டளைச் சட்டம், மதுவரிக் கட்டளைச் சட்டம், வங்கிச் சேவைச் சட்டம் மற்றும் உண்ணாட்டரசிறைச் சட்டம் போன்ற வேறு எந்தச் சட்டத்தினதும் அவ்வாறான ஏற்பாடுகளைத் திருத்தும் அல்லது நீக்கும் விளைவினை உத்தேசச் சட்டம் கொண்டிருக்காது.
(c) பொலிஸ் கட்டளைச் சட்டம், குற்றவியல் நடவடிக்கைமுறைக் கோவைச் சட்டம்இ இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழச் சட்டம்இ சுங்கக் கட்டளைச் சட்டம் போன்ற ஏனைய நியதிச் சட்டங்களினால் வலுப்படுத்தப்பட்ட ஏனைய அமுலாக்கல் அதிகாரிகள் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகளைப் பறிமுதல் செய்வதற்காக, முடக்குவதற்காக முகாமைத்துவம் செய்வதற்காக மற்றும் கைப்பற்றுவதற்காக உத்தேச சட்டத்தின் ஏற்பாடுகளைப் பயன்படுத்துவதற்கான அதிகாரத்தினைக் கொண்டிருப்பர். எவ்வாறாயினும் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் உத்தேச சட்டத்தின் அடிப்படையில் பறிமுதல் செய்யப்படடால், கைப்பற்றப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை முகாமைத்துவம் செய்வது தொடர்பில் அதனைத் தொடர்ந்து வரும் நடவடிக்கைகள் மேலும் அவ்வாறு பெறப்பட்டவற்றினைக் கைப்பற்றுதல் ஆகியவை இந்தச் சட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

## பகுதி III: பணம் தூய்தாக்கல் குற்றம்

9. சொத்து ஒன்று குற்றச்செயல்களினால் பெறப்பட்டது அல்லது அதனைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது என அறிந்துகொண்டு அல்லது அவ்வாறு நம்புவதற்குக் காரணங்கள் உள்ளபோது, அக்குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை உடைமையாக வைத்திருப்பது, கட்டுப்படுத்துவது, மாற்றுவது, முதலீடு செய்வது, பெற்றுக்கொள்வது, அன்பளிப்பாக வழங்குவது, ஏற்பாடு செய்வது, உருமாற்றுவது, அதில் நன்மையளிக்கும்

கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பது அல்லது உரித்தாண்மையினைக் கொண்டிருப்பது, மறைத்துவைப்பது அல்லது விற்றுத்தீர்ப்பது அல்லது வேறு ஏதாவது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவது ஒரு குற்றமாகும். இக்குற்றமானது பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணம் தூய்தாக்கலுக்கான அதே தண்டனையினைக் கொண்டிருக்கும்.

## பகுதி IV: முறைப்பாடு செய்வதற்கான கடமை

10. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை இருப்பது பற்றி அறிந்துள்ள அல்லது அவ்வாறான குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றில் இருந்து பெற்றுக்கொண்ட சொத்து இருப்பது பற்றி அறிந்துள்ள குறிப்பிட்ட ஒரு நபர் அவ்வாறான தகவலினை அதிகாரசபைக்கு அறியத்தருதல் அவரின் கடமையாகும். இக்கடமையினை மீறுதல் ஒரு குற்றமாகக் கருதப்படும்

## பகுதி V: குற்றத்தீர்ப்புக்குப் பின்னரான கைப்பற்றல் / பறிமுதல்

11. குற்றச்செயலினைப் புரிந்தமைக்கான சட்ட நடவடிக்கை மற்றும் அதனைத் தொடர்ந்த குற்றத்தீர்ப்பினைத் தொடர்ந்து குற்றச்செயலினால் பெறப்பட்டவற்றின் நன்மையின் அல்லது பெறுமதியின் கைப்பற்றல் அல்லது பறிமுதலுக்கான ஏற்பாட்டினை உத்தேசச் சட்டம் வழங்கும்.

12. குற்றமொன்றினை இழைத்த நபரொருவருக்குக் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து குற்றத்தினை இழைத்தமையுடன் தொடர்புடைய வழக்கு விசாரணையுடன் (குற்றம் சாட்டப்பட்டவர் எதற்காகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளாரோ அக்குற்றச்செயலினால் பெறப்பட்டவை தொடர்பானது) தொடர்புடைய கைப்பற்றல் நடவடிக்கையினை ஆரம்பிப்பது கட்டாயமானதாகும். அவ்வாறான நடவடிக்கைகள் அதிகாரசபையின் விண்ணப்பத்தின் பேரில் (அடையாளம் காணப்பட்ட குற்றச்செயலினால் பெறப்பட்டவற்றின் அற்பமான அளவு அல்லது அதன் பெறுமதியின் அடிப்படையில் அல்லது குற்றம் சாட்டப்பட்டவரிடம் அடையாளம் காணப்படக்கூடிய சொத்து இல்லாதபோது) குற்றச்செயலினால் பாதிக்கப்பட்ட சம்பந்தப்பட்டவரின் (யாராவது இருப்பின்) இசைவினைப் பெற்ற பின்னரும் சம்பந்தப்பட்ட சட்ட அமுலாக்கல் முகவரின் இசைவினைப் பெற்ற பின்னரும் நீதிமன்றத்தினால் நீக்கப்படலாம். கைப்பற்றலுக்கான கட்டளை மேன்முறையீடு செய்யப்படக்கூடியதாகும்.

## பகுதி VI: நீட்டிக்கப்பட்ட கைப்பற்றல்

13. குற்றம் ஒன்றிற்காக நபர் ஒருவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட பின்னர், அவ்வாறான குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட நபரின் ஏனைய சொத்தினைக் கைப்பற்றுவதற்கான சட்டமா அதிபரின் விண்ணப்பத்தின் அடிப்படையில் நீதிமுறை விசாரணையினை நடத்துவதற்கான ஏற்பாட்டினை உத்தேசச் சட்டம் வழங்கும் (அவருக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டுள்ள குற்றச்செயலினால் பெறப்பட்டவற்றின் கைப்பற்றலுக்கு மேலதிகமாக, முன்சென்ற பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள). அவ்வாறான சொத்து சட்டவிரோதமான முறையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கலாம் எனும் சட்டமா அதிபரின் நீதிமன்ற முதற்தோற்றத் திருப்தியின் பேரில், குற்றம் சாட்டப்பட்டுள்ளவர் குற்றத்தீர்ப்பினைப் பெற்றுள்ள குற்றத்தினை இழைப்பதற்கு முன்சென்ற 7 வருடங்களுள் அவ்வாறான சொத்து பெற்றுக்கொள்ளப்பட்டது என நீதிமன்றம் ஊகிக்கலாம். நீட்டிக்கப்பட்ட கைப்பற்றலுக்கான அவ்வாறான நடவடிக்கைகளின் போது, அவ்வாறு நீதிமன்றம் ஊகிக்க முடியாது என்ற காரணத்தினால் அவ்வாறான சொத்தினைக் கைப்பற்ற முடியாது என நிகழ்தகவுச் சமனிலையின் அடிப்படையில் காட்டுவதற்கான உரிமையினைக் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்டவர் கொண்டுள்ளார். அவ்வாறான கட்டளையும் மேன்முறையீட்டுக்கு உட்பட்டதாகும்.

## பகுதி VII: கைப்பற்றல் நடவடிக்கையின் நோக்கெல்லை

14. ஊஊஈய்8 இன் பிரிவு 136(1)(அ)(தனியார் பிராதுகள்) தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட வழக்குகள் தொடர்பாகவும் கைப்பற்றல் நடவடிக்கைகள் இடம்பெறலாம். அவ்வாறான நடவடிக்கைகளில், குற்றத்தீர்ப்புக்குப் பின்னரான கைப்பற்றல் நடவடிக்கைகள் குற்றவியல் நடவடிக்கைகளை முன்னெடுத்த முறைப்பாட்டாளரினால் கையாளப்படலாம்.

## பகுதி VIII: குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான கைப்பற்றல் நடவடிக்கைகள்

15. உத்தேச சட்டமானது, குற்றச்செயல்களினால் பெறப்பட்ட சொத்துக்களின் குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான கைப்பற்றல் அல்லது பறிமுதலுக்கான (சிலவேளைகளில் பொருளாகக் கைப்பற்றல் எனவும் அழைக்கப்படும்) செயற்திறன்மிக்க மற்றும் துரிதமான நீதிமுறைச் செயல்விதிகளுக்கான ஏற்பாட்டினை உத்தேசச் சட்டம் வழங்கும். இவ்வாறான நடவடிக்கைகள் அதிகாரசபையினாலும் அதன் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்களினாலும் (பொலிஸ், இலங்கைச் சுங்கம், இலங்கை மதுவரித் திணைக்களம், இலங்கை வனத் திணைக்களம் போன்ற சட்ட அமுலாக்கல் அதிகாரங்கள்) மாத்திரம் முன்னெடுக்கப்படலாம் என்பதுடன் குற்றம் ஒன்றினை இழைத்தமைக்காக எந்த ஒரு நபரினதும் வழக்குத்தொடுப்பு அல்லது குற்றத்தீர்ப்பின்

மீது நிபந்தனையாக அமையமாட்டாது. குற்றம் ஒன்றினை இழைத்தமைக்காக நபர் ஒருவர் மீது வழக்குத் தொடுக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலும் கூட, குற்றம் சாட்டப்பட்டுள்ளவருக்குக் குற்றத்தீர்ப்பு வழங்கப்படாமல் இருந்தாலும், குற்றச்செயலினால் பெறப்பட்டவற்றின் பெறுமதி அல்லது நன்மை என் நம்பப்படுபவற்றினைக் கைப்பற்றுவதற்காகக் குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான நடவடிக்கையினை ஆரம்பிப்பது சாத்தியமானதாகும். கைப்பற்றலுக்கான அவ்வாறான கட்டளை மேன்முறையீடு செய்யத்தக்கதாகும்.

16. சட்டவிரோதமாகப் பெறப்பட்டது என நிகழ்தகவுச் சமனிலையின் படி காட்டப்படக்கூடிய எந்தவொரு சொத்தும் அல்லது எந்தவொரு சொத்திலுமுள்ள நலன்மிகு அக்கறையும் 'குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான கைப்பற்றல் நடவடிக்கைக்கு' உட்படக்கூடியதாகும் என உத்தேச சட்டம் அங்கீகரிக்கின்றது' (சந்தேகத்தினைத் தவிர்ப்பதற்கு, குறிப்பிட்ட குற்றத்தினை இழைத்தமைக்கும் அடையாளம் காணப்பட்ட சொத்துக்கும் இடையிலான காரணத் தொடர்பினை அரசு நிரூபிக்கவேண்டும் என இந்தப் பொறுப்பு தேவைப்படுத்தவில்லை என அங்கீகரிக்கப்படுகின்றது.)

## பகுதி IX: கைப்பற்றப்படாத பறிமுதல் செய்யப்பட்ட சொத்து

17. சொத்தின் பறிமுதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய குற்றவியல் விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடுப்புக்கள் (ஏதாவது இருப்பின்) பூர்த்தியானதைத் தொடர்ந்து, அவ்வாறான சொத்தின் கைப்பற்றலைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக, இதில் உள்ளடங்கியுள்ள மூன்று பொறிமுறைகளில் ஒன்று தொடர்பாக நியாயமான காலப்பகுதியினுள் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிட்டால், (அதாவது: குற்றத்தீர்ப்புக்குப் பின்னரான கைப்பற்றல், நீட்டிக்கப்பட்ட கைப்பற்றல் மற்றும் குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான கைப்பற்றல்), யாரின் பாதுகாப்பில் இருந்து அவ்வாறான சொத்து பறிமுதல் செய்யப்பட்டதோ அவரினால் மேற்கொள்ளப்படும் விண்ணப்பத்தின் பேரில் அவ்வாறான சொத்து, நீதிமுறை விசாரணையின் பின்னர் நீதிமுறைக் கட்டளை தொடர்பில், அவ்வாறான நபருக்கு அல்லது அவ்வாறான சொத்து அவ்வாறான மூன்றாந் தரப்புக்குத் திருப்பி வழங்கப்படவேண்டும் என நீதிமன்றத்தினைத் திருப்திப்படுத்தக்கூடிய வேறு யாராவது ஒரு நபருக்குத் திருப்பி வழங்கப்படவேண்டும்.

பகுதி ஓ: குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினைத் தடுத்துக்காத்தல், பறிமுதல் செய்தல், நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் மற்றும் பாதுகாத்தல்

18. உத்தேச சட்டமானது குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றின் தடுப்புக்காப்பு, பறிமுதல், தற்காலிக நிர்வாகம் / முகாமைத்துவம் (கைப்பற்றல் / பறிமுதல் நிலுவையாக இருக்கையில்) மற்றும் பாதுகாத்தலுக்கான செயற்திறன்மிக்க மற்றும் துரித சட்ட அமுலாக்கல் மற்றும் நீதி முறைச் செயல்விதிகளுக்கான ஏற்பாட்டினை வழங்கும்.

19. உத்தேச சட்டமானது பின்வருவனவற்றிற்கான ஏற்பாடுகளையும் வழங்கும்:

ய. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் பறிமுதல் செய்யப்படக்கூடிய விதம்இ

டி. சொத்தினைப் பறிமுதல் செய்வதற்காக அதிகாரமளிக்கப்பட்டுள்ள சட்ட அமுலாக்கல் ஆளணியினர்இ

உ. நீதிமுறை நடவடிக்கைகளின் போதும் அவை நிலுவையில் இருக்கும்போதும், பறிமுதல் செய்யப்பட்ட சொத்துக்கள் உரிய கவனத்துடன் நிர்வகிக்கப்பட்டு / முகாமைத்துவம் செய்யப்படுவது உள்ளடங்கலாகப் பறிமுதல் செய்யப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் முகாமைத்துவம் செய்யப்பட்டு / நிர்வகிக்கப்படுதல் (புறநிபுணத்துவம் பயன்படுத்தப்படல் உள்ளடங்கலாக)இ

ன. பழுதடையக்கூடிய பொருட்கள் போன்ற குற்றச்செயல்களினால் பெறப்பட்ட குறிப்பிடப்பட்டவற்றின் கைப்பற்றலுக்கு முன்னரான விற்பனை / அகற்றல்இ

ந. கைப்பற்றப்படாத அவ்வாறான சொத்துக்களை விடுவித்தல், மற்றும்

க. சொத்தினைப் பறிமுதல் செய்த காரணத்தினால் அல்லது அதனுடன் இணைந்ததாக ஏற்பட்ட சாத்தியமான இழப்பிற்காக விடுக்கப்படும் கோரிக்கைக்குத் தீர்ப்பு வழங்கப்படும் விதம்.

20. உத்தேசச் சட்டம் மூன்றாந் தரப்புக் கோரிக்கையாளர்களின் உண்மையான அக்கறைகளைப் பாதுகாப்பதற்காகப் போதிய பாதுகாப்புக்களை உள்ளடக்கும்.

## பகுதி XI: கைப்பற்றப்பட்டவற்றினை நியமித்தலும் அவற்றினை ஒரு நம்பிக்கை நிதியத்திற்கு மாற்றலும்

21. குற்றத்தீர்ப்பினைத் தொடர்ந்த கைப்பற்றலினால், நீட்டிக்கப்பட்ட கைப்பற்றலினால் மற்றும் குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான கைப்பற்றல் நடவடிக்கைகளினால், வெளிநாட்டு நீதிமுறை ∴ சட்ட அமுலாக்கல் அதிகாரங்களினால் கைப்பற்றப்பட்டதை ∴ பறிமுதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இலங்கைக்கு மாற்றப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை உள்ளடங்கலாக, கைப்பற்றப்பட்டவை அல்லது அவற்றின் பெறுமதி, வேறு எந்தச் சட்டத்தில் உள்ளவற்றிற்கும் முரணானவை எவ்வாறாக இருப்பினும், நீதிமன்றத்திற்கும்

கோரிக்கை விடுப்பவர்களுக்கும், இருப்பின், அதிகாரசபையினால் விடுக்கப்பட்ட விண்ணப்பங்களைத் தொடர்ந்து, குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு (அரசாங்கம் உள்ளடங்கலாக) இழப்பீட்டினை வழங்குவதற்காக அவ்வாறான நீதிமன்றத்தினால் பிரிக்கப்படலாம். கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் ஏற்பட்ட செலவிற்கான மீள்கொடுப்பனவினை அல்லது கைப்பற்றப்பட்ட சொத்தின் ஆதாயத்தின் 10 சதவிகிதம் வரையில், இதில் எது கூடியதோ அதனைப், பெறுவதற்கான உரித்தினை அதிகாரசபை கொண்டிருக்கும். அதன் பின்னர், ஏதாவது எஞ்சியிருந்தால், அவை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும் மற்றும் பாராளுமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் வரும் நம்பிக்கை நிதியத்திற்கு (கைப்பற்றப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றுக்கான நம்பிக்கை நிதியம்) ஒப்படைக்கப்பட்டு மாற்றப்படலாம்.

22. முன்பு கூறப்பட்டன்சென்ற பந்திக்கு அமைவாக, தமது கோரிக்கைகளைப் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதனை வசதிப்படுத்துவதற்காக, இலங்கையிலுள்ள நீதிமன்றத்தினால் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து வெளிநாடு ஒன்றினால் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை திருப்பியனுப்பப்பட்டதைத் தொடர்ந்து, கைப்பற்றல் தொடர்பான தகவல்களும் அவ்வாறு பெற்றுக்கொண்டவற்றுக்கு இட்டுச்சென்ற அடையாளம் காணப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றுக்கும் இழைக்கப்பட்ட குற்றத்திற்கும் இடையிலான சாத்தியமான காரணத் தொடர்பும் உள்ளடங்கிய அறிவித்தலை அதிகாரசபை வெளியிட்டு குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டவர்கள் அவ்வாறான கைப்பற்றல் பற்றி அல்லது இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ள குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை பற்றி அறிந்துகொள்வதை இயலுமாக்கும். பாதிக்கப்பட்டவர்கள் விரும்பினால் நீதிமன்றத்திற்குக் கோரிக்கைகளைச் சமர்ப்பிக்கலாம்

23. கைப்பற்றப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றில் இருந்து இழப்பீட்டினைப் பெற்ற குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டவர் குற்றச்செயலுக்கு உட்பட்ட சம்பந்தப்பட்ட அசல் சொத்தின் இழப்புத் தொடர்பாக சிவில் நடவடிக்கைகளில் இருந்து இழப்பீட்டினையும் நட்டஈட்டினையும் கோருவதில் இருந்தும் தடுக்கப்படமாட்டார்.

24. பின்வரும் நோக்கங்களுக்காக நம்பிக்கை நிதியம் அதன் நிதிகளைப் பயன்படுத்தும்:
ய. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை மீட்பதற்கான அதன் முயற்சியில் சட்ட அமுலாக்கலை வலுப்படுத்தல்.
டி. நீதி நிர்வாகத்தினை வலுப்படுத்தல்.
உ. குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளின் உரிமைகளையும் உரித்துக்களையும் மேம்படுத்திப் பாதுகாத்தல்.
ன. குற்றச்செயல் தடுப்பு நடவடிக்கைகளை உருவாக்கிப் பேணல்.
ந. இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதுடன் தொடர்புடைய சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்குச் சட்டபூர்வமான ஊக்குவிப்புக்களை வழங்கல்.
க. 'தகவலாளர் வெகுமதி நிதியம்' எனப் பெயரிடப்படவுள்ள நிதியம் ஒன்றினை வலுப்படுத்தல்.
ப. நீடுறுதியான அபிவிருத்தி இலக்குகளின் இலக்குகளை அடைந்துகொள்ளல்.

25. நம்பிக்கை நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் ஏழு பேராக இருப்பர் என்பதுடன் நீதி நிர்வாகம், சட்ட அமுலாக்கம், பொது நிதி, நிதி முகாமைத்துவம், வியாபார முகாமைத்துவம், சம்பந்தப்பட்ட சிவில் சமுகச் செயற்பாடு மற்றும் கணக்காய்வு ஆகியவற்றில் நிபுணத்துவமுடைய நபர்களை நிதியம் கொண்டிருக்கும். தவிசாளர் உள்ளிட்ட நம்பிக்கை நிதியத்தின் இந்த நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் அரசியலமைப்புச் சபையினால் நியமிக்கப்படுவர்.

26. நம்பிக்கை நிதியத்தின் முகாமைத்துவமும் நிர்வாகமும் வெளிப்படைத்தன்மைமிக்கதாக இருக்கவேண்டும் என்பதுடன் பொதுமக்களின் பரிசோதனைக்காகக் கிடைக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

27. நம்பிக்கை நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் பகிரங்கமாகக் கிடைக்கச்செய்யப்பட வேண்டும் என்பதுடன் வருடாந்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

## பகுதி XII: இலங்கை குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் மீட்பு மற்றும் முகாமைத்துவ அதிகாரசபை ("அதிகாரசபை") மற்றும் நியதிச் சட்ட ஏற்பாடுகள்

28. இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்காகவும் குறிப்பாக (அ) குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் பற்றிய விசாரணையினை நடத்துவதற்காகவும் (ஆ) தடுத்துவைத்தல், பறிமுதல் செய்தல், தற்காலிக நிர்வாகம், மாற்றம் மற்றும் (இ) நீதிமுறைக் கட்டளையினால் பெறப்பட்ட அதிகாரத்தின் அடிப்படையில் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை அகற்றல் உள்ளடங்கலானவற்றினை நிறைவேற்றுவதற்காகவும் உத்தேச சட்டத்தினால் ஒரு நியதிச்சட்ட அமைப்பு ('இலங்கை குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் மீட்பு மற்றும் முகாமைத்துவ அதிகாரசபை' நிறுவப்படும்

29. அதிகாரசபை அதன் சொந்தப் பெயரின் கீழ் வழக்குத் தொடுப்பதற்கான மற்றும் அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கான உரித்தினைக் கொண்டுள்ளது.

30. (அ) குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் தொடர்பான சட்ட அமுலாக்கல் பற்றிய விடயங்களை ஒருங்கிணைக்கவும் (ஆ) குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகளைப் பறிமுதல் செய்வதற்கும் மாற்றுவதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் அதிகாரசபை அதிகாரத்தினைக் கொண்டிருக்கும்.

31. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை அடையாளம் காணல், தடுத்துவைத்தல், பறிமுதல் செய்தல் மற்றும் விசாரணை செய்தல் தொடர்பாக அதிகாரசபை சட்ட அமுலாக்கல் முகவர் ஒன்று கொண்டுள்ளது போன்ற அதே அதிகாரங்களை அதிகாரசபை கொண்டிருக்கும். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள சட்ட அமுலாக்கல் முகவர்கள் தற்போது கொண்டுள்ள அதிகாரங்களை அதிகாரசபை கட்டுப்படுத்தாது. மேலும் அதிகாரசபை பின்வருவனவற்றிற்கான ஆணையினைக் கொண்டிருக்கும்:
ய. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் தொடர்பில் அதிசிறப்பு வாய்ந்த மையமாக இருக்கும் என்பதுடன் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகளை அடையாளம் காணல், தடுத்துவைத்தல், விசாரித்தல், பறிமுதல்செய்தல், நிர்வகித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் பற்றிய அறிவு மற்றும் சிறந்த நடைமுறைகளை மாற்றுவதில் ஈடுபடுவதில் சிறப்புவாய்ந்த மையமாக இருக்கும்.
டி. ஏனைய சட்ட அமுலாக்ககல் முகவர்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பு.
உ. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகளின் பறிமுதல், மாற்றம், முகாமைத்துவம் மற்றும் கைப்பற்றல் தொடர்பாக ஒரு தரவுத்தளத்தினைப் பேணல்.
ன. குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான கைப்பற்றல் நடவடிக்கையினை ஆரம்பிப்பதற்கு நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்தல்.
ந. இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பான அமுலாக்கல் அம்சங்கள் பற்றிய ஆய்வினை நடத்தல்.
க. ஏனைய நியதிச் சட்ட அமைப்புக்கள் மற்றும் சட்ட அமுலாக்க முகவர்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை மற்றும் ஏனைய செயற்பாட்டு ஏற்பாடுகளை ஏற்படுத்தல்.

32. அதிகாரசபையினால் பொதுவாக அல்லது சம்பவ அடிப்படையில் அதிகாரமளிக்கப்படாவிட்டால், குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினைக் கைப்பற்றுவதற்கான அல்லது பறிமுதல் செய்வதற்கான இறுதி நீதிமுறைக் கட்டளை நிலுவையாக இருக்கையில் பறிமுதல் செய்யப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை நிர்வகித்து முகாமைத்துவம் செய்வதற்கான சட்ட அதிகாரத்தினைக் கொண்டுள்ள அரச அதிகாரமளிக்கப்பட்ட ஒரே முகவராக அதிகாரசபை இருக்கும்.

33. குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான கைப்பற்றல் நடவடிக்கையினை ஆரம்பிக்க முன்னர் (பதிவுசெய்யப்படவேண்டிய காரணங்களினால்) சம்பந்தப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றின் பறிமுதலுக்குக் காரணமான சம்பந்தப்பட்ட சட்ட அமுலாக்கல் முகவரினை அதிகாரசபை கலந்தாலோசிக்கும்.

34. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை அடையாளம் காணல், தடுத்துவைத்தல், விசாரணைசெய்தல், பறிமுதல் செய்தல் மற்றும் சொத்துக்களின் பிரகடனப்படுத்தலைக் கோரும் கட்டளைகளை விநியோகித்தல் (விளக்கப்படாத செல்வக் கட்டளை) தொடர்பாக இதில் உள்ளடங்கியுள்ள அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் நிறைவேற்ற அரசின் பின்வரும் சட்ட அமுலாக்கல் முகவர்கள் அதிகாரமளிக்கப்படுவர்:
ய. பொலிஸ் (CID மற்றும் FCID)
டி. ஊஐயுடீழுஊ
உ. சுங்கம்
ன. மதுவரித் திணைக்களம்
ந. காடுகள் திணைக்களம்
க. காட்டு சீவராசிகள் திணைக்களம்
ப. பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு

35. முன்சென்ற பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட அமுலாக்கல் அதிகாரசபைகள் குற்றத்தீர்ப்பிற்குப் பின்னரான கைப்பற்றல் மற்றும் குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையில் அவ்வாறான முகவரினால் பறிமுதல் செய்யப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினைக் கைப்பற்றல் ஆகியவற்றுக்காக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வதற்கு உரித்தினைக் கொண்டிருக்கும் (அதிகாரசபைக்கு அறிவித்தல் வழங்கிய பின்னர் சட்டமா அதிபரின் உதவியுடன்). எவ்வாறாயினும் இடைக்காலத்தின் போது அவ்வாறான குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைகள் அதிகாரசபையினால் முகாமைத்துவம் செய்யப்படும் ∴ நிர்வகிக்கப்படும்.

36. இந்தச் சட்டத்தினால் செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள சட்ட அமுலாக்கல் முகவரினால் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை பறிமுதல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவ்வாறான பறிமுதல்

நடைபெற்ற 3 வேலை நாட்களினுள் அவ்வாறான தகவலை அதிகாரசபைக்கு அறியத்தரவேண்டும். அதுவே மத்திய தரவுத்தளமாக இயங்கும் என்பதுடன் அவ்வாறான குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை முகாமைத்துவம் ∴ நிர்வாகம் செய்வதனை ஆரம்பிப்பதற்காக அதிகாரசபையினை வசதிப்படுத்தும். அது 7 வேலை நாட்களினுள் அவ்வாறான பறிமுதல் பற்றித் தகைமை வாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றத்தில் அறிக்கை ஒன்றினைத் தாக்கல் செய்யும்.

37. சட்டத்தினை வேண்டுமென்றே புறக்கணித்து, அல்லது தீய எண்ணத்துடன் அல்லது இணை நோக்கத்துடன் அல்லது புறக்கணிப்புடன் மேற்கொள்ளப்பட்ட ஏதாவது நடவடிக்கைகள் அல்லது செயற்படாமைகள் போன்றவற்றிற்கு அதிகாரசபை பொறுப்பினைக் கொண்டிருக்கும்.

38. சட்டத்திற்கு இயைபுற்று, நீதிமுறைக் கட்டளைக்கு இயைபுற்று அல்லது நல்லெண்ணத்துடன் எந்த ஓர் அதிகாரியோ அல்லது வேறு ஊழியரோ, ஆலோசகரோ அல்லது மதியுரைஞரோ மேற்கொண்ட நடவடிக்கைக்காக அவர் பொறுப்பாக மாட்டார்.

## பகுதி XIII: விசாரணை அதிகாரங்கள்

39. உத்தேச சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள அதிகாரசபை மற்றும் ஏனைய சட்ட அமுலாக்கல் அதிகாரசபைகள் உத்தேச சட்டத்தின் அடிப்படையில் பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருக்கலாம்:

a. உத்தேச சட்டத்தின் அடிப்படையில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள சட்ட அமுலாக்கல் அதிகாரி, நீதவான் கட்டளையினைப் பெற்ற பின்னர் பின்வரும் அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கு உரித்தினைக் கொண்டிருப்பார்:

i. வளவொன்றின் பாதுகாவலர் இணக்கம் வழங்காவிட்டால் அவ்வாறான வளவில் தேடுதலை மேற்கொள்ளல்.

ii. நீதிமுறைக் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதிக்காக, வளவொன்றின் பாதுகாவலருக்கு அவ்வளவில் மேற்கொள்ளப்படவுள்ள தேடுதல் நடவடிக்கை பற்றிக் குறிப்பிடாமல் அவ்வாறான வளவில் அவ்வாறான தேடுதல் நடவடிக்கையினை மேற்கொள்ளல்.

iii. அந்தரங்கம் மற்றும் இரகசியத்தன்மை ஆகியவற்றுக்கு உரிய கரிசணையினை வழங்கி நேரடியாக நடைபெறும் தொலைத்தொடர்பாடல்களை இடைமறித்தல்.

iv. கட்டுப்படுத்தப்பட்ட விநியோகங்களை நடத்தல்.

v. பயணக் கட்டுப்பாடுகளை விதித்தல்.

vi. தரப்புகளுக்கிடையிலான தொடர்பாடல்களைப் பதிவுசெய்தல்.

vii. சொத்து, நிதிகள் அல்லது வேறு ஏதாவது நலன்களின் மாற்றத்தினைத் தடைசெய்தல் / மீள அடைதல்

viii. வங்கிக் கணக்குகளை முடக்கல்

ix. நபர்களின் அந்தரங்கத்தில் பாதிப்பினை ஏற்படுத்தும் விதத்தில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

b. உத்தேச சட்டத்தின் அடிப்படையில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள சட்ட அமுலாக்கல் அதிகாரிகள் பின்வரும் அதிகாரங்களை நேரடியாகப் பிரயோகிப்பதற்கான உரித்தினைக் கொண்டிருப்பர்:

i. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் குற்றத்தினை இழைத்ததாகச் சந்தேகிக்கப்படும் அல்லது குற்றத்துடன் சம்பந்தப்பட்டுள்ள எந்த நபரினையும் கைதுசெய்வதற்குக் காரணமாதல்.

ii. கைதுசெய்கையில் எந்த நபரிலும் தேடுதல் நடத்துதல்.

iii. நபர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை உள்ளடக்கிய சத்தியக் கடதாசி ஒன்றினை வழங்குமாறு அந்த நபரினை வேண்டுதல். இயைபுறாமை மற்றும் தவறான தகவல்களை வழங்குகின்றமை குற்றமாகும். அவ்வாறான சத்தியக் கடதாசியின் உள்ளடக்கங்கள் சத்தியக் கடதாசியினைத் தயாரித்தவருக்கு எதிரான சட்ட நீதிமுறை நடவடிக்கையில் சான்றாக அமையமாட்டாது. இந்த ஏற்பாட்டின் அடிப்படையில் தவறான தகவல்களைக் கொண்ட சத்தியக் கடதாசியினை வழங்கிய குற்றச்சாட்டினை நிரூபிக்கும் நோக்கத்தினைத் தவிர.

iv. உண்ணாட்டரசிறைச் சட்டம் அல்லது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைப் பிரகடனப்படுத்தும் சட்டம் ஆகியவற்றில் உள்ளவை எவ்வாறாக இருப்பினும் ஒவ்வொரு விபரத்தினையும் கொண்ட வங்கிப் பதிவுகளையும் வருமான வரிப் பதிவுகளையும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனத்தினையும் கோருதல்.

v. தொலைத்தொடர்புப் பதிவுகளுக்காக அழைப்பு விடுத்தல்.

vi. எந்த ஒரு நியதிச்சட்ட அதிகாரசபையிடமிருந்தும் அல்லது பதிவு பேணும் வேறு அமைப்பிடமிருந்தும் ஏதாவது பதிவுகளைக் கோரல்.

vii. நேர்காணலுக்காக எந்தவொரு நபருக்கும் அழைப்புவிடுத்தல்.

viii. எந்தவொரு நபரினையும் நேர்கண்டு வாக்குமூலத்தினைப் பதிவுசெய்தல்.

ix. விசாரணைகளின் நோக்கத்திற்குத் தேவையான வேறு ஏதாவது விடயங்கள்.

x. கணினி மற்றும் வேறு தன்னியக்கமாக்கப்பட்ட முறைமைகளுக்கான அணுகல்

xi. பொதுக் கண்காணிப்பினை நடத்தல்.

40. இந்தச் சட்டத்தின் அதிகாரம் பெற்றுள்ள சட்ட அமுலாக்கல் அதிகாரி எவரும் (அ) நீதிமுறைக் கட்டளைக்கு அமைவாகச் செயற்பட்டாலேயன்றி அல்லது (ஆ)எந்தவொரு சட்டத்திற்கும் அமைவாகச் செயற்பட்டாலேயன்றி அல்லது (இ) இந்தச் சட்டத்தின் குறிக்கோள்களுக்குச் செயலூலூக்கம் வழங்குவதற்காகச் செயற்பட்டாலேயன்றி, எந்தவொரு விசாரணையின் போதும் சேகரிக்கப்பட்ட அல்லது பெற்றுக்கொள்ளப்பட்ட எத்தகவலையும் எந்த ஒரு நபருக்கும் வெளிக்கூறக்ககூடாது. அவ்வாறு வெளிக்கூறுவதானது தண்டனைக்குரிய குற்றமாகும்.

## பகுதி XIV: விளக்கப்படாத செல்வக் கட்டளைகள்

41. இந்தச் சட்டத்திற்கு அமைவாக அதிகாரம் பெற்றுள்ள சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு விளக்கப்பட முடியாததாகத் தென்படும் சொத்துக்களை உடைமையாகக் கொண்டுள்ளதாகக் கண்டறியப்படும் நபர்களுக்கு அவ்வாறான சொத்துக்களைப் பெற்றுக்கொண்ட விதம் தொடர்பாகச் சத்தியப் பிரகடனத்தினை வழங்குமாறு கட்டளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை உத்தேச சட்டம் வழங்கும்.
ய. இயைபுறாமைக்கான மற்றும் பொய்யான பிரகடனங்களை வழங்கியமைக்கான விளைவுகளுக்கான ஏற்பாட்டினையும் சட்டம் வழங்கும்.
டி. 5 வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சிறைத்தண்டனையினைப் (பாரதூரமான குற்றவியல் குற்றங்கள்) பெறக்கூடிய குற்றத்தினை நபர் ஒருவர் இழைத்துள்ளார் அல்லது இழைப்பதில் தொடர்புகொண்டிருந்தார் அல்லது குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினைக் கொடுக்கல் வாங்கல் செய்கின்றார் என அந்த நபருக்கு எதிராக நியாயமான காரணங்கள் இருக்கையில் அவரிடம் அவரது சொத்துக்கள் தொடர்பாக சத்தியப் பிரகடனம் (குறித்துரைக்கப்பட்ட விதத்திற்கு அமைவாக) மேற்கொள்ளுமாறு கோருவதற்கான அதிகாரத்தினை உத்தேச சட்டம் அதிகாரசபைக்கு வழங்கும்.
உ. எந்தவொரு நபருக்கும் சொந்தமான சொத்தினை அவர் பெற்றுக்கொண்ட விதம் தொடர்பாகச் சத்தியப் பிரகடனத்தினை மேற்கொள்ளுமாறு கோரும் அறிவித்தலை அவருக்கு வழங்குவதற்கான அதிகாரத்தினை உத்தேச சட்டம் அதிகாரசபைக்கு வழங்கும்.
ன. பிரதிவாதியிடம் குறிப்பிட்ட சொத்துக்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட விதம் தொடர்பாக அல்லது கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட விதம் தொடர்பாகச் சான்றினை வழங்குமாறு அதிகாரசபை கோரிக்கை விடுக்கமுடியும்.

42. இந்தச் சட்டத்திற்கு அமைவாக அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரசபை அல்லது யாராகிலும் சட்ட அமுலாக்கல் அதிகாரி பிரகடனத்தில் உள்ளடங்கியுள்ளவை பொய்யானவை அல்லது அதிலுள்ள உள்ளடக்கங்கள் உண்மையற்றவை அல்லது சாத்தியமற்றவையாக இருப்பதற்கான காரணத்தினைக் கொண்டுள்ளன எனக் கண்டறிந்தால், முன்சென்ற பகுதிக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட பிரகடனத்தின் உண்மையினை ஏற்றுக்கொள்வதற்குக் கடப்பாடு கொண்டிருக்கமாட்டார்.

43. அவ்வாறான பிரகடனத்தில் உள்ளடங்கியுள்ள தகவல்கள் பின்வரும் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படலாம்.:
ய. பாரதூரமான குற்றச்செயலினை இழைத்த சாத்தியம் தொடர்பாக நடத்தப்படும் குற்றவியல் விசாரணையில் ‘விசாரணை ஆவணமாக’
டி. குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான கைப்பற்றல் நடவடிக்கையினை ஆரம்பிப்பதற்கான சாத்தியமான அடிப்படையாக, அல்லது
உ. அவ்வாறான சத்தியக் கடதாசியின் உள்ளடக்கங்கள் சத்தியக் கடதாசியினைத் தயாரித்தவருக்கு எதிரான சட்ட நீதிமுறை நடவடிக்கையில் ‘சான்றாக’ அமையமாட்டாது. இந்த ஏற்பாட்டின் அடிப்படையில் தவறான தகவல்களைக் கொண்ட சத்தியக் கடதாசியினை வழங்கிய குற்றச்சாட்டினை நிரூபிக்கும் நோக்கத்தினைத் தவிர.

## பகுதி XV: சட்டபூர்வமான தொழில்ரீதியான சிறப்புரிமை

44. சந்தேகங்களைத் தவிர்ப்பதற்காக, சட்டத்தரணியுடன் தொடர்பாடும் நபரின் தொடர்பாடல் குற்றவியல் நடவடிக்கையினைத் தொடர்வதற்கானதாக இருக்கையில் சிறப்புரிமைகள் கோரப்படமுடியாது என்கின்ற பொதுச் சட்டத்தின் நிலைப்பாட்டினை உத்தேச சட்டம் கோடிட்டுக் காட்டும்.

## பகுதி XVI: செயற்பாடுகளைப் பிரித்து வழங்குவதற்கான அதிகாரசபையின் அதிகாரம்

45. சட்ட அமுலாக்கல் முகவர்கள் பிரித்து வழங்கப்படும் செயற்பாடுகளை அதிகாரசபையின் வழிகாட்டல் மற்றும் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்வதற்காக அதிகாரசபையானது அதன் செயற்பாடுகளில் சிலவற்றினை பின்வருவன உள்ளிட்ட முகவர்களுக்குப் பொதுவான அடிப்படையில் அல்லது சம்பவ அடிப்படையில் பிரித்து வழங்குவதற்கான மேலும் பதிவுசெய்யப்படவேண்டிய காரணங்களுக்காக அவ்வாறு பிரித்து வழங்கப்பட்ட அதிகாரத்தினை வாபஸ் பெறுவதற்கும் அதிகாரத்தினைக் கொண்டிருக்கும்:
ய. பொலிஸ் (ஊஐனு மற்றும் குஊஐனு)
டி. ஊஐயுடீமுஊ

உ. சுங்கம்
ன. மதுவரித் திணைக்களம்
ந. காடுகள் திணைக்களம்
க. காட்டு சீவராசிகள் திணைக்களம்
ப. பிணையங்கள் மற்றும் பரிவர்த்தணை ஆணைக்குழு
கூட்டு விசாரணை அணிகள்

46. தன் சார்பில் செயற்படுவதற்காக அதிகாரசபையினால் நியமிக்கப்படும் வெளிநாட்டுச் சட்ட அமுலாக்கல் முகவர்கள் மற்றும் நிபுணர்கள் உள்ளிட்ட கூட்டு விசாரணை அணிகளைக் கொண்டிருப்பதற்கான அதிகாரத்தினை அதிகாரசபை கொண்டிருக்கும்.

## பகுதி XVII: அதிகாரசபை மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் சொத்து மீட்பு

47. கைப்பற்றப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவைக்கான நம்பிக்கை நிதியத்தின் இணக்கத்துடன் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை அல்லது அவற்றின் பெறுமதியினை மாற்றல் ∴ அல்லது பகிர்தலுக்காக அதிகாரசபை போன்ற வெளிநாட்டு அரசுகள் மற்றும் நிறுவனங்களுடன் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரசபை அதிகாரம் பெற்றிருக்கும்.

48. இலங்கையில் இழைக்கப்பட்ட குற்றச்செயலுடன் தொடர்புடைய வெளிநாட்டில் அமைந்துள்ள குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றின் பெறுமதியினைப் பறிமுதல் செய்வதற்காகவும் கைப்பற்றுவதற்காகவும் திரும்பப் பெற்றுக்கொள்வதற்காகவும் அவ்வாறான வெளிநாடுகளில் உள்ள நீதிமுறை மற்றும் சட்ட அமுலாக்கல் அதிகாரசபையிடம் விண்ணப்பம் மேற்கொள்வதற்கான அதிகாரத்தினை அதிகாரசபை கொண்டிருக்கும்.
தனது அதிகாரத்தின் கீழ் வரும் எவ்விசாரணை தொடர்பாகவும் வேறு நியாயாதிக்கங்களில் இருந்து எந்த ஆவணத்தினையும் அணுகுவதற்கும் பெறுவதற்கும் அதிகாரசபை அதிகாரம் கொண்டிருக்கும்.

49. வெளிநாட்டில் இழைக்கப்பட்ட குற்றச்செயல் தொடர்பாக இலங்கையில் அமைந்துள்ள குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினைப் பறிமுதல் செய்தல், கைப்பற்றல் மற்றும் திரும்பப் பெறல் தொடர்பான வேண்டுகோள்களை அல்லது குற்றத்தீர்ப்பளிக்காமை அடிப்படையிலான தண்டனை வேண்டுகோள்களை வேறு அரசுகளிடம் இருந்து (அவற்றுடன் இலங்கை பரஸ்பரல அல்லது பல்தரப்பு உடன்படிக்கையினைக் கொண்டுள்ள) பெறுவதற்கான அதிகாரத்தினை அதிகாரசபை கொண்டிருக்கும்.

## பகுதி XVIII: அதிகாரசபையின் உறுப்பினர்கள்

50. அதிகாரசபையின் தலைவர் அரசியலமைப்புச் சபையினால் நியமிக்கப்படுவார். தலைவரின் பதவிக் காலம் 5 வருடங்களாக இருக்கும்.

51. அதிகாரசபை முகாமைத்துவ சபையினைக் கொண்டிருக்கும். அதுவே அதிகாரசபையின் முதன்மையான தீர்மானம் வகுத்தல் அமைப்பாக இருக்கும். முகாமைத்துவ சபை பின்வருவனவற்றினைக் கொண்டிருக்கும்:
ய. சட்டமா அதிபர் அல்லது அவரால் நியமிக்கப்படுபவர்
டி. பொலிஸ்மா அதிபர் அல்லது அவரால் நியமிக்கப்படுபவர்
உ. இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் அல்லது அவரால் நியமிக்கப்படுபவர்
ன. நிறுவனத்தின் சம்பந்தப்பட்ட தலைவரின் நியமனத்தின் பேரில் பின்வரும் நிறுவனங்களில் இருந்து அரசியலமைப்புச் சபையினால் நியமிக்கப்படும் ஒவ்வொரு சிரேஷ்ட அதிகாரி:
i. இலங்கைச் சுங்கம்
ை. உண்ணாட்டரசிறைத் திணைக்களம்
iii. பிணையங்கள் மற்றும் பரிவர்த்தணை ஆணைக்குழு
iv. இலங்கை நிதிப் புலனாய்வுப் பிரிவு
v. நீதி அமைச்சு
vi. நிதி அமைச்சு
vii. வெளிநாட்டலுவல்கள் அமைச்சு

52. தலைவருக்கு மேலதிகமாக, பின்வரும் துறைகளில் நிபுணத்துவத்தினைக் கொண்ட நான்கு தனிநபர்களையும் அரசியலமைப்புச் சபை நியமிக்கும்:
ய. குற்றவியல் நீதி,
டி. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம்இ
உ. பொருளியல், நிதி மற்றும் கணக்காய்வு, மற்றும்
ன. சம்பந்தப்பட்ட சிவில் சமூகச் செயற்பாடு.

53. அதிகாரசபை பிரதம நிறைவேற்று அதிகாரி ஒருவரைக் கொண்டிருக்கும். இவர் முகாமைத்துவ சபையினால் நியமிக்கப்படுவார்.

54. அதிகாரசபை இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்துவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரிகளைக் கொண்டிருக்கும். இவர்கள் பொலிஸ் அதிகாரங்களைக் கொண்டிருப்பர்.

55. அதிகாரசபையின் நிதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படும்.

## பகுதி XIX: ருஊேயுஊ இன் அமுல்படுத்தல்

56. உத்தேச சட்டமானது, ஏனையவற்றின் மத்தியில், சமவாயத்தின் அத்தியாயம் ஐந்து தொடர்பாக ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சமவாயத்தில் (ருஊேயுஊ) உள்ளடங்கியுள்ள விதிகளுக்கு நியதிச் சட்டச் செயலூ க்கத்தினை வழங்கும்.

## பகுதி XX: வியாக்கியானப்படுத்தல

57. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை – 'குற்றச்செயல்களினால் பெறப்பட்டவை' எனும் சொற்பதம் "இலங்கையிலோ அல்லது வேறு எங்கேயோ எந்த ஒரு நபரினாலும் இழைக்கப்பட்ட குற்றத்துடன் தொடர்புடையதாக அல்லது குற்றத்தின் விளைவாக அடைந்துகொண்ட, பெற்றுக்கொண்ட, தக்கவைக்கப்பட்ட, இணைந்து கலக்கப்பட்ட, முழுவதுமாக அல்லது பகுதியாக அல்லது நேரடியாக அல்லது மறைமுகமாக மாற்றப்பட்ட ஏதாதுாவது சொத்து அல்லது அதன் பகுதி அல்லது ஏதாதுாவது வருமானம், சேவை, அனுகூலம், நன்மை அல்லது வெகுமதி அல்லது வேறு ஏதாவது பொருளாதார நலன்கள் என்பதுடன் குற்றமானது குற்றச்செயலின் நிமித்தகாரணத்தினையும் அதன் பெறுமதியினையும் உள்ளடக்கும்". இந்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள குற்றங்கள் இரண்டு வருடங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சிறைத்தண்டனை மூலம் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களாகும். குற்றம் எனும் சொற்பதம் தண்டனைச் சட்டக்கோவையில் காணப்படும் அதே அர்த்தத்தினையே கொண்டிருக்கும்.

# இணைப்பு 2

## ஊழல் சம்பவங்களில் கைப்பற்றப்பட்ட திருடப்பட்ட சொத்துக்களின் உடைமையகற்றல் மற்றும் மாற்றலுக்கான GFAR கோட்பாடுகள்

UNAC யில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கைப்பற்றப்பட்ட திருடப்பட்ட சொத்துக்களை மீள ஒப்படைத்தல் மற்றும் அவற்றின் உரிமைமாற்றத்திற்கான தமது கடப்பாட்டினை இணை ஓம்புநர்களும் நான்கு கவனக் குவிப்பு நாடுகளும் GFAR இல் மீள உறுதிப்படுத்தின. வெற்றிகரமாகச் சொத்துக்களை மீட்டு அவற்றின் உரிமையினை மாற்றுவதில் தொழில்நுட்ப உதவியின் முக்கியத்துவத்தினை அவர்கள் கோடிட்டுக் காட்டினர். மீள ஒப்படைத்த முன்னைய அனுபவங்கள் பற்றியும் அதிலிருந்து கிடைக்கும் பாடங்கள் பற்றியும் அவர்கள் ஆழமாகச் சிந்தித்தனர். UNODC யின் தலைமையின் கீழ் ஏற்கனவே நடைபெறும் பணியினைப் பற்றி அறிந்துகொண்டு மேலும் சொத்துக்களை மீள ஒப்படைப்பது தொடர்பாகச் சர்வதேச சமுதாயம் சிறந்த நடைமுறையினை உருவாக்குவதற்கான அடிசபாபா செயற்பாட்டு நிகழ்ச்சி நிரலை மனதிற்கொண்டு வெற்றிகரமான சொத்துக்களின் மீள் ஒப்படைத்தலை மேம்படுத்தக்கூடிய கோட்பாடுகளுக்கான பின்வரும் கருதுகோள்களைப் பங்குபற்றுனர்கள் வழங்கினர். இந்தக் கோட்பாடுகள் ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றுக்கான அணுகுமுறைகளையும் பொறிமுறைகளையும் வழங்குவதுடன் சம்பந்தப்பட்டுள்ள செயன்முறைகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் வகைப்பொறுப்பினை வலுப்படுத்துவதற்கான அணுகுமுறைகளையும் பொறிமுறைகளையும் வழங்குகின்றது. இந்தக் கோட்பாடுகளில் உள்ள எவையும் தேசிய இறைமை அல்லது சட்டத்தின் உள்நாட்டுக் கோட்பாடுகள் ஆகியவற்றில் பாதிப்பினை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. ஊழல் சம்பவங்களில் கைப்பற்றப்பட்ட திருடப்பட்ட சொத்துக்களின் உரிமை அகற்றல் மற்றும் மாற்றம் செய்வதற்கான புகுயுசு கோட்பாடுகள்

**கோட்பாடு 1** : பங்காண்மை. திருடப்பட்ட சொத்துக்களை வெற்றிகரமாகத் திரும்ப ஒப்படைப்பதானது மாற்றம் செய்யும் நாட்டிற்கும் பெறுகின்ற நாட்டிற்கும் இடையில் காணப்படும் உறுதியான பங்காண்மையில் அடிப்படையில் தங்கியுள்ளது என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒன்றாகும். இவ்வாறான பங்காண்மையானது நம்பிக்கையினையும் விசுவாசத்தினையும் மேம்படுத்துகின்றது.

**கோட்பாடு** 2: பரஸ்பர அக்கறைகள். மாற்றம் செய்யும் நாடும் பெற்றுக்கொள்ளும் நாடும் வெற்றிகரமான பலாபலனில் பகிரப்பட்ட அக்கறைகளைக் கொண்டுள்ளன என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எனவே பரஸ்பரம் இணங்கப்படும் மாற்றத்திற்கான ஏற்பாட்டினை நிலைநாட்ட நாடுகள் ஒன்றுசேர்ந்து பணியாற்றவேண்டும்.

**கோட்பாடு 3**: முன்கூட்டிய கலந்துரையாடல். செயன்முறை முழுவதும் தொடர்ச்சியான கலந்துரையாடல் இடம்பெறுவதற்காகச் செயன்முறையின் ஆரம்பச் சந்தர்ப்பத்தின்போது மாற்றும் நாட்டிற்கும் பெற்றுக்கொள்ளும் நாட்டிற்கும் இடையில் கலந்துரையாடலைத் தொடங்குவது மிகவும் விரும்பத்தக்கதாகும்.

**கோட்பாடு** 4: வெளிப்படைத்தன்மை மற்றும் வகைப்பொறுப்பு. மீட்கப்பட்ட சொத்துக்களை மீள ஒப்படைத்தல் மற்றும் அவற்றின் உரிமை மாற்றம் ஆகியவற்றில் மாற்றம் செய்யும் நாடுகளும் பெற்றுக்கொள்ளும் நாடுகளும் வெளிப்படைத்தன்மையினையும் வகைப்பொறுப்பினையும் உத்தரவாதப்படுத்தும். மீள ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களின் மாற்றம் மற்றும் நிர்வாகம் தொடர்பான தகவல்கள் பகிரங்கமாக்கப்படவேண்டும் என்பதுடன் அவை மாற்றம் செய்யும் நாடு மற்றும் பெற்றுக்கொள்ளும் நாடு ஆகியவற்றில் மக்களுக்குக் கிடைக்கச்செய்யப்படவேண்டும். குறிப்பிட்டுக் கூறப்படாத அல்லது வருநிகழ்வான கட்டண ஏற்பாடுகள் விரும்பப்படவில்லை.

**கோட்பாடு 5**: பயனாளிகள். சாத்தியமானபோது, அடையாளம் காணப்பட்ட பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதகம் இன்றி, ஊழல்மிக்க அதிகாரிகளிடம் இருந்து மீட்கப்பட்ட திருடப்பட்ட சொத்துக்கள் உள்ளார்ந்த ஊழல் நடத்தையினால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டு மக்களுக்குப் பயனளிக்கவேண்டும்.

**கோட்பாடு 6**: ஊழலுக்கெதிராக இருத்தலையும் அபிவிருத்தியினைவும் வலுப்படுத்தல். சாத்தியமானபோது, கைப்பற்றப்பட்ட சொத்துக்களின் முடிவுப் பயன்பாட்டின்போது, ஊழலை எதிர்த்தலுக்கான ருNஊயுஊ கோட்பாடுகளை நிறைவேற்றும் நடவடிக்கைகளை ஊக்கப்படுத்தவும் ஊழலினால் ஏற்பட்ட சேதத்தினைச் சீரமைப்பதிலும் அபிவிருத்தி இலக்குகளை அடைவதிலும் கவனம் செலுத்தப்படவேண்டும்.

**கோட்பாடு 7**: சம்பவத்திற்கெனத் தனித்துவமாக நடத்துதல். கைப்பற்றப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றின் உரிமை மாற்றம் செய்தல் சம்பவத்துக்கெனத் தனித்துவமான முறையில் கருத்திற்கொள்ளப்படவேண்டும்.

**கோட்பாடு 8**: ருஊஊயுஊ உறுப்புரை 57(5) இன் கீழ் உடன்படிக்கை ஒன்றினைப் பயன்படுத்துவதனைக் கருத்திற்கொள்ளல். சம்பவத்துக்கெனத் தனித்துவமான உடன்படிக்கைகள் அல்லது ஏற்பாடுகள், மாற்றம் செய்யும் நாடு மற்றும் பெற்றுக்கொள்ளும் நாடு ஆகிய இரண்டு நாடுகளும் இணங்கும்போது, மீள ஒப்படைக்கப்பட்ட சொத்துக்களின் வெளிப்படைத்தன்மைமிக்க மற்றும் செயற்திறன்மிக்க பயன்பாடு, நிர்வாகம் மற்றும் கண்காணிப்பு ஆகியவற்றினை உறுதிப்படுத்த உதவுவதற்காக உள்ளடக்கப்படவேண்டும். மாற்றம் செய்யும் பொறிமுறை(கள்), சாத்தியமானபோது, அமுலிலுள்ள அரசியல் மற்றும் நிறுவன ரீதியான சட்டகத்தினைப் பயன்படுத்தவேண்டும் என்பதுடன் ஒத்திசைவினை உறுதிப்படுத்தவும் இரட்டிப்பினைத் தவிர்க்கவும் வினைத்திறனினை அதிகரிக்கவும் நாட்டின் அபிவிருத்தி உபாயமார்க்கத்திற்கு அமைவானதாகவும் இருக்கவேண்டும்.

**கோட்பாடு 9**: குற்றம் செய்தவர்களுக்கு நலன் கிடைப்பதனைத் தடுத்தல். கைப்பற்றப்பட்ட குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றின் உரிமை மாற்றம் குற்றத்தினை (குற்றங்களை) நிகழ்த்துவதில் சம்பந்தப்பட்டுள்ள நபர்களுக்கு நன்மையளிக்கக்கூடாது என்பதனை உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

**கோட்பாடு 10**: அரசசார்பற்ற பங்கீடுபாட்டாளர்களை உள்ளடக்கல். சசுட்டத்திற்குப் பொருத்தமானதாகவும் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டதாகவும் இருக்கும் வரை சிவில் சமூகம், அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமுதாய மட்ட நிறுவனங்கள் போன்ற அரச துறைக்கு வெளியே உள்ள தனிநபர்களும் குழுக்களும் சொத்துக்களை மீள ஒப்படைத்தல் செயன்முறையில் பங்குபற்றுவதற்கு ஊக்கப்படுத்தப்படவேண்டும். தீங்கிற்கு எவ்வாறு பரிகாரம் செய்யப்படலாம் என்பதை அடையாளம் காண உதவுதன் மூலமும் மீள ஒப்படைத்தல் மற்றும் உரிமை மாற்றம் பற்றிய தீர்மானத்திற்கு உதவுதல் மூலமும் மீட்கப்பட்ட சொத்துக்களின் மாற்றம், உரிமை மாற்றம் மற்றும் நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை மற்றும் வகைப்பொறுப்பினைப் போசிப்பதன் மூலமும் உள்ளடங்கலாக.

வாஷிங்டன், டிசம்பர் 2017. 1. அபிவிருத்திக்காக நிதியிடல் மாநாடு, ஜூலை 2015, பந்தி 25

# இஐணுப்பு 3

## சொத்து மீட்புத் தொடர்பான ருஊேயுஊ அத்தியாயம் - அத்தியாயம் 5

**உறுப்புரை 51. பொதுவான ஏற்பாடுகள்.**
இந்த அத்தியாயத்தினை அடியொட்டியதான சொத்துக்களை மீள ஒப்படைத்தலானது இந்தச் சமவாயத்தின் அடிப்படைக் கோட்பாடாகும். இது தொடர்பில் அரச தரப்புக்கள் ஒன்று மற்றொன்றிற்கு பரந்த ஒத்துழைப்பினையும் உதவியினையும் வழங்கவேண்டும்.

**உறுப்புரை 52. குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை மாற்றுவதைத் தடுத்தலும் தடுத்துவைத்தலும்.**
1. இந்தச் சமவாயத்தின் உறுப்புரை 14 இற்குப் பாரபட்சமின்றி, தேவையானவாறாக, ஒவ்வொரு அரச தரப்பும் அதன் உள்நாட்டுச் சட்டத்திற்கு அமைவாக, வாடிக்கையாளர்களை அடையாளம் காண்பதற்காகவும் உயர் பெறுமதியினைக் கொண்டுள்ள கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள நிதிகளின் அடையாளத்தினைத் தீர்மானிப்பதற்கு நியாயமான நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் பிரபலமானவர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது அவர்களுடன் நெருக்கமான தொடர்புடையவர்களினால் நம்பி ஒப்படைக்கப்படுகின்ற அல்லது நம்பி ஒப்படைக்கப்பட்டுள்ள தனிநபர்களினால் பேணப்படுகின்ற அல்லது அவர்களின் சார்பில் பேணப்படுகின்ற கணக்குகளின் மேம்படுத்தப்பட்ட பரிசீலனையினை மேற்கொள்வதற்காகவும் அதன் உள்ளூர் நியாயாதிக்கத்தினுள் வரும் நிதி நிறுவனங்களின் உதவியினைக் கோருவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கலாம். இவ்வாறான மேம்படுத்தப்பட்ட பரிசீலனைகள் தகைமைவாய்ந்த அதிகாரசபைகளுக்கு அறிவிக்கப்படுவதற்காக சந்தேகத்துக்கிடமான கொடுக்கல் வாங்கல்களைக் கண்டுபிடிப்பதற்காக நியாயமான முறையில் வடிவமைக்கப்படும் என்பதுடன் நிதி நிறுவனங்கள் எவ்விதமான சட்டபூர்வமான வாடிக்கையாளருடனும் வியாபாரத்தினை மேற்கொள்வதைக் குறைப்பதற்கான அல்லது தடுப்பதற்கான ஒன்றாக இதனைக் கருதலாகாது.
2. இந்த உறுப்புரையின் பந்தி 1 இல் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் அமுல்படுத்தலை வசதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு அரச தரப்பும் அதன் உள்நாட்டுச் சட்டத்திற்கு அமைவாகவும் சம்பந்தப்பட்ட பிராந்திய, பிராந்தியங்களுக்கிடையிலான மற்றும் பல்தரப்பு நிறுவனங்களினால் பணம் தூய்தாக்கலுக்கு எதிராக எடுக்கபட்ட நடவடிக்கையினால் அகத்தூண்டுதல் பெற்றும் (அ) தனது நியாயாதிக்கத்தினுள் வரும் நிதி நிறுவனத்தினால் யாரின் கணக்குகள் மேம்படுத்தப்பட்ட முறையில் பரீட்சிக்கப்படவுள்ளனவோ அவ்வாறான தனிநபரின் அல்லது அரச அல்லது தனியார் நிறுவனத்தின் வகை பற்றியும் குறிப்பிட்ட அவதானம் செலுத்தப்படவேண்டிய கணக்குகள் மற்றும் கொடுக்கல் வாங்கலின் வகை பற்றியும் அவ்வாறான கணக்குகள் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய பொருத்தமான கணக்குத் திறத்தல், பேணுதுல் மற்றும் பதிவுபேணல் நடவடிக்கை பற்றியும் அவதான அறிவித்தலை விநியோகிக்கலாம். (ஆ). பொருத்தமானபோது, நிதி நிறுவனங்களினால் கண்டுபிடிக்கக்கூடியவர்களுக்கு மேலதிகமாக, யாருடைய கணக்குகளுக்கு அவ்வாறான நிதி நிறுவனங்கள் மேம்படுத்தப்பட்ட பரிசீலனையினை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றதோ அவ்வாறான குறிப்பிட்ட தனிநபர்கள் அல்லது அரச அல்லது தனியார் நிறுவனங்களின் அடையாளத்தினை தனது நியாயாதிக்கத்தினுள் வரும் நிதி நிறுவனங்களுக்கு மற்றுமொரு அரச தரப்பின் வேண்டுகோளின் பேரில் அல்லது தனது சொந்த முன்னெடுப்பின் பேரில் அறியத்தரலாம். 3. இந்த உறுப்புரையின் பந்தி 2 (அ) வின் சூழமைவில், ஒவ்வொரு அரச தரப்பும் அதன் நிதி நிறுவனங்கள் போதியளவான 43 பதிவுகளைக் குறிப்பிட்ட காலப்பகுதியின் போது இந்த உறுப்புரையின் பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களின் கணக்குகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகப் பேணுகின்றன என்பதை உறுதிப்படுத்த நடவடிக்கைகளை அமுல்படுத்தவேண்டும். இப்பதிவுகள் குறைந்தது வாடிக்கையாளரின் அடையாளம் மற்றும் நலன்பெறும் உரிமையாளர் தொடர்பான தகவல்களை உள்ளடக்கவேண்டும்.
4. இந்தச் சமவாயத்திற்கு அமைவாக, குற்றங்களினால் பெறப்பட்டவற்றின் மாற்றத்தினைத் தடுத்து தடைசெய்யும் நோக்கத்துடன் ஒவ்வொரு அரச தரப்பும் அதன் ஒழுங்குபடுத்தல் மற்றும் மேற்பார்வை அமைப்புக்களின் உதவியுடன் பௌதிக இருப்பினைக் கொண்டிராத மேலும் ஒழுங்கமைக்கப்பட்ட நிதிக் குழுமத்துடன் இணைக்கப்படாத வங்கி நிறுவப்படுவதைத் தடுப்பதற்கு பொருத்தமான மற்றும் செயற்திறன்மிக்க நடவடிக்கைகளை அமுல்படுத்தவேண்டும். மேலும், அவ்வாறான நிறுவனங்களுடன் இணை வங்கிச் சேவைத் தொடர்புகளை உருவாக்குவதற்கு அல்லது அதனைத் தொடர்வதற்கு மறுப்புத் தெரிவிக்குமாறு தமது நிதி நிறுவனங்களைக் கோருவதை அரசுகள் தரப்புக்கள் கருத்திற்கொள்ளலாம் என்பதுடன் பௌதிக வளங்கள் இல்லாத மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட நிதிக் குழுமத்துடன் இணைக்கப்படாத வங்கியினால் தமது கணக்குகள் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதியளிக்கும் வெளிநாட்டு நிதி நிறுவனங்களுடன் தொடர்புகளை உருவாக்குவதில் இருந்தும் பாதுகாத்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுப்பதையும் கருத்திற்கொள்ளலாம்.

5. உள்நாட்டுச் சட்டத்திற்கு அமைவாக ஒவ்வொரு அரச தரப்பும் பொருத்தமான அரச அதிகாரிகளுக்காக செயற்திறன்மிக்க நிதி வெளிக்கூறல் முறைமையினை நிறுவுவதைக் கருத்திற்கொள்ளலாம் என்பதுடன் இயைபுறாமைக்கு எதிராகப் பொருத்தமான தடைகளுக்கான ஏற்பாட்டினை வழங்கலாம். ஒவ்வொரு அரச தரப்பும், தேவையாக உள்ளவாறாக, இந்தச் சமவாயத்திற்கு அமைவாக நிறுவப்பட்ட தகைமை வாய்ந்த அதிகாரசபைகள் குற்றச்செயல்களினால் பெறப்பட்டவற்றினை விசாரித்து, கோரிக்கை விடுத்து மீட்பதற்குத் தேவையான தகவல்களை ஏனைய அரசுகள் தரப்புக்களிலுள்ள தகைமை வாய்ந்த அதிகாரசபைகளுடன் பகிர்ந்துகொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதை அனுமதிப்பதைக் கருத்திற்கொள்ளலாம்.
6. வெளிநாட்டில் உள்ள நிதிக் கணக்கொன்றில் அக்கறை கொண்டுள்ள அல்லது கையொப்பம் கொண்டுள்ள அல்லது வேறு அதிகாரம் கொண்டுள்ள பொருத்தமான அரசாங்க அதிகாரிகளிடம் அந்தத் தொடர்பினை பொருத்தமான அதிகாரிகளிடம் அறிக்கையிடுமாறும் அவ்வாறான கணக்குகள் தொடர்பான பொருத்தமான பதிவுகளைப் பேணுமாறும் உள்நாட்டுச் சட்டத்திற்கு அமைவாக வேண்டுவதற்காக ஒவ்வொரு அரச தரப்பும் அவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பதனைக் கருத்திற்கொள்ளலாம். அவ்வாறான நடவடிக்கைகள் இயைபுறாமைக்கான பொருத்தமான தடைகளுக்கான ஏற்பாடுகளையும் வழங்கலாம்.

**உறுப்புரை 53. சொத்துக்களை நேரடியாக மீட்பதற்கான நடவடிக்கைகள். ஒவ்வொரு அரச தரப்பும்,** உள்நாட்டுச் சட்டத்திற்கு அமைவாக: (அ) இந்தச் சமவாயத்திற்கு அமைவாக நிலைநாட்டப்பட்ட குற்றமொன்றினை இழைத்தமையினால் பெற்றுக்கொண்ட சொத்துக்கான உரித்தினை அல்லது உரித்தாண்மையினை நிலைநாட்டுவதற்காக இன்னுமொரு சிவில் தரப்பு அதன் நீதிமன்றத்தில் சிவில் நடவடிக்கையினை மேற்கொள்வதற்காக அனுமதி வழங்குவதற்குத் தேவையாயன அவ்வாறான நடவடிக்கைகளை எடுத்தல். (ஆ) இந்தச் சமவாயத்திற்கு அமைவாக நிலைநாட்டப்பட்ட குற்றங்களை இழைத்தவர்களுக்கு அவ்வாறான குற்றத்தினால் பாதிக்கப்பட்ட ஏனைய அரச தரப்புக்கு நட்டஈட்டினை அல்லது சேதத்தினைச் செலுத்துமாறு கட்டளையிடுவதற்கு அதன் நீதிமன்றத்தினை அனுமதிப்பதற்குத் தேவையான அவ்வாறான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் 44 (இ) கைப்பற்றல் தொடர்பாகத் தீர்மானம் எடுக்கவேண்டியிருக்கையில், இந்தச் சமவாயத்திற்கு அமைவாக நிலைநாட்டப்பட்ட குற்றத்தினை இழைத்தமையின் மூலம் பெறப்பட்ட சொத்தின் சட்டபூர்வமான உரிமையாளர் எனக் கோரும் மற்றைய அரச தரப்பின் கோரிக்கையினை அங்கீகரிப்பதற்கு, அதன் நீதிமன்றங்கள் அல்லது தகைமைவாய்ந்த அதிகாரசபைகளை அனுமதிப்பதற்குத் தேவையான அவ்வாறான நடவடிக்கைகளை எடுத்தல்.

**உறுப்புரை 54. கைப்பற்றலில் சர்வதேச ஒத்துழைப்பின் மூலமாகச் சொத்துக்களை மீட்பதற்கான** பொறிமுறைகள் 1. இந்தச் சமவாயத்திற்கு அமைவாக நிலைநாட்டப்பட்ட குற்றத்தினை இழைத்தமை மூலமாக அல்லது இழைத்தமையுடன் சம்பந்தப்பட்டதாக பெறப்பட்ட சொத்துத் தொடர்பான இந்தச் சமவாயத்தின் உறுப்புரை 55 இனை அடியொட்டியதாக பரஸ்பர சட்ட உதவியினை வழங்குவதற்காக ஒவ்வொரு அரச தரப்பும் அதன் உள்நாட்டுச் சட்டத்திற்கு அமைவாக: (அ) மற்றொரு அரச தரப்பின் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கைப்பற்றல் கட்டளைக்குச் செயலூக்கம் வழங்குவதற்காக அதன் தகைமைவாய்ந்த அதிகாரசபையினை அனுமதிப்பதற்குத் தேவையான அவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கும் (ஆ) பணம் தூய்தாக்கல் குற்றம் அல்லது  அவ்வாறான வேறு குற்றத்திற்கு அதன் நியாயாதிக்கத்தினுள் நீதித்தீர்ப்பு வழங்கியதன் மூலம் அல்லது அதன் உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வேறு செயல்விதிகளினால் நீதித்தீர்ப்பு வழங்கியதன் மூலம் வெளிநாட்டு மூலத்தினைக் கொண்ட அவ்வாறான சொத்தினைக் கைப்பற்றுவதற்காக, அவை நியாயாதிக்கத்தினைக் கொண்டுள்ளபோது, அனுமதியளிப்பதற்கு அவசியமான அவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கும் மற்றும் (இ) குற்றத்தினை இழைத்தவருக்கு எதிராக அவரின் இறப்பு, தப்பியோடியமை அல்லது சமூகமளிக்காமை ஆகிய காரணங்களினால் அல்லது வேறு பொருத்தமான சம்பவங்களின் காரணத்தினால் வழக்குத் தொடுக்க முடியாத சம்பவங்களில் குற்றவியல் குற்றத்தீர்ப்பு இல்லாது அவ்வாறான சொத்தினைக் கைப்பற்றுவதை அனுமதிப்பதற்குத் தேவையான அவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பதனைக் கருத்திற்கொள்ளல். 2. இந்தச் சமவாயத்தின் உறுப்புரை 55 இன் பந்தி 2 இனை அடியொட்டியதாக விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் அதன் உள்நாட்டுச் சட்டத்திற்கு அமைவாகப் பரஸ்பர சட்ட உதவியினை வழங்கும்: (ய) சொத்தினைக் கைப்பற்றுவதற்குப் போதிய காரணங்கள் உள்ளன என வேண்டுகோள் விடுத்த அரச தரப்பு நம்புவதற்கு ஒரு நியாயமான அடிப்படையினை வழங்குகின்ற வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பின் நீதிமன்றத்தினால் அல்லது தகைமை வாய்ந்த அதிகாரசபையினால் முடக்கிவைத்தல் அல்லது பறிமுதல் கட்டளை விநியோகிக்கப்பட்டதன் பேரில் முடக்கிவைப்பதற்கு அல்லது பறிமுதல் செய்வதற்கு அதன் தகைமைவாய்ந்த அதிகாரசபையினை அனுமதிப்பதற்குத் தேவையான அவ்வாறான நடவடிக்கைகளை எடுத்து இறுதியில் இந்த உறுப்புரையின் பந்தி 1 (அ) இன் நோக்கத்திற்காக சொத்தானது கைப்பற்றல் கட்டளைக்கு உட்படும் (டி) சொத்தினைக் கைப்பற்றுவதற்குப் போதிய காரணங்கள் உள்ளன என வேண்டுகோள் விடுத்த அரச தரப்பு நம்புவதற்கு ஒரு நியாயமான அடிப்படையினை வழங்குகின்ற வேண்டுகோளின் பேரில் அதன் தகைமைவாய்ந்த அதிகாரசபையினால் முடக்கிவைப்பதற்கு அல்லது பறிமுதல் செய்வதற்கு அனுமதிப்பதற்குத் தேவையான அவ்வாறான நடவடிக்கைகளை எடுத்து இறுதியில் இந்த உறுப்புரையின் பந்தி 1 (அ), மற்றும் 45 இன் நோக்கங்களிற்காகச் சொத்தானது கைப்பற்றல் கட்டளைக்கு உட்படும் (இ) வெளிநாட்டுக் கைது அல்லது

அவ்வாறான சொத்தின் பெறுகையுடன் தொடர்புடைய குற்றவியல் குற்றச்சாட்டு ஆகியவற்றின் அடிப்படை போன்ற, கைப்பற்றலுக்காகச் சொத்தினைப் பாதுகாப்பதற்காக தகைமைவாய்ந்த அதன் அதிகாரசபையினை அனுமதிப்பதற்காக மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதனைக் கருத்திற்கொள்ளும்.

## உறுப்புரை 55. கைப்பற்றல் நோக்கங்களுக்காகச் சர்வதேச ஒத்துழைப்பு

1. இந்தச் சமவாயத்திற்கு அமைவாக நிலைநாட்டப்பட்ட குற்றம் மீது நியாயாதிக்கத்தினைக் கொண்டுள்ள மற்றுமொரு அரச தரப்பிடம் இருந்து இந்தச் சமவாயத்தின் உறுப்புரை 31, பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள இந்தப் பிராந்தியத்தில் அமைந்துள்ள குற்றச்செயல்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்து, உபகரணம் அல்லது வேறு கருவியினைக் கைப்பற்றுவதற்கான வேண்டுகோள் ஒன்றினைப் பெற்றுள்ள அரச தரப்பு ஒன்று, சாத்தியமான அளவு அதன் உள்நாட்டுச் சட்ட முறைமையினுள்: (அ) கைப்பற்றல் கட்டளையினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்திற்காக வேண்டுகோளினை அதன் தகைமைவாய்ந்த அதிகாரசபைகளுக்குச் சமர்ப்பிக்கும், அவ்வாறான கட்டளை வழங்கப்பட்டால், அதற்குச் செயலூக்கமளிக்கும் அல்லது (ஆ) வேண்டுகோள் விடுக்கப்பட்ட அளவிற்குச் செயலூக்கமளிப்பதற்காக, உறுப்புரை 31, பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்செயல்களினால் பெறப்பட்ட சொத்து, உபகரணம் அல்லது வேறு கருவி ஆகியவற்றுடன் தொடர்புபடும் வரையில், இந்தச் சமவாயத்தின் உறுப்புரை 31, பந்தி 1 மற்றும் பந்தி 54, பந்தி 1(அ) இற்கு அமைவாக, வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பின் பிராந்தியத்தினில் உள்ள நீதிமன்றத்தினால் விநியோகிக்கப்பட்ட கைப்பற்றல் கட்டளையினை அதன் தகைமைவாய்ந்த் அதிகாரசபைகளுக்குச் சமர்ப்பிக்கும். 2. இந்தச் சமவாயத்திற்கு அமைவாக நிலைநாட்டப்பட்ட குற்றம் மீது நியாயாதிக்கத்தினைக் கொண்டுள்ள மற்றுமொரு அரச தரப்பினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளினைத் தொடர்ந்து, வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பினால் அல்லது இந்த உறுப்புரையின் பந்தி 1 இன் கீழான வேண்டுகோளினைத் தொடர்ந்து, வேண்டுகோள் விடுக்கப்பட்ட அரச தரப்பினால் இறுதியான கைப்பற்றல் கட்டளையிடப்படும் நோக்கத்திற்காக இந்தச் சமவாயத்தின் உறுப்புரை 31, பந்தி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்செயல்களினால் பெறப்பட்ட சொத்து, உபகரணம் மற்றும் வேறு கருவிகளை அடையாளம் கண்டு, தேடிப்பிடித்து, முடக்குவதற்கு அல்லது பறிமுதல் செய்வதற்கு வேண்டுகோள் விடுத்த அரச தரப்பு நடவடிக்கைகளை எடுக்கும். 3. இந்தச் சமவாயத்தின் உறுப்புரை 46 இன் ஏற்பாடுகள், தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு இந்த உறுப்புரைக்குப் பிரயோகிக்கத்தக்கவையாகும். உறுப்புரை 46, பந்தி 15 இல் குறித்துரைக்கப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக, இந்த உறுப்புரையினை அடியொத்ததாக மேற்கொள்ப்பட்ட வேண்டுகோள்கள் பின்வருவனவற்றினைக் கொண்டிருக்கும்: (அ) வேண்டுகோளானது உறுப்புரையின் பந்தி 1 (அ) தொடர்பானதாக இருக்கையில், கைப்பற்றப்படவுள்ள சொத்தின் விபரங்கள், சாத்தியமான அளவிற்கு, அமைவிடத்தினை உள்ளடக்கியதாக, பொருத்தமானவிடத்து, சொத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதியினையும் உள்ளடக்கியதாக இருக்கும் என்பதுடன் வேண்டுகோள் விடுக்கப்பட்ட அரச தரப்பின் உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் அது கட்டளையினைக் கோருவதனை இயலுமாக்குவதற்குப் போதுமான வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பு தங்கியுள்ள உண்மைகளின் கூற்றினை உள்ளடக்கும். (ஆ) இந்த உறுப்புரையின் பந்தி 1 (ஆ) தொடர்பான வேண்டுகோளைப் பொறுத்த அளவில், வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பினால் விநியோகிக்கப்பட்டதும் வேண்டுகோளின் அடிப்படையாக உள்ளதுமான கைப்பற்றல் கட்டளையின் சட்டரீதியாக அனுமதிக்கத்தக்க பிரதி, கட்டளையின் நிறைவேற்றம் வேண்டப்படும் அளவிற்கு உண்மைகள் மற்றும் தகவல்களின் கூற்று, உண்மையான மூன்றாந் தரப்புக்களுக்குப் போதிய அறிவித்தலை வழங்குவதற்காகவும் உரிய செயன்முறையினை உறுதிப்படுத்துவதற்காகவும் வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் குறித்துரைக்கும் ஒரு கூற்று மற்றும் கைப்பற்றல் கட்டளை இறுதியானது எனும் கூற்று (இ) இந்த உறுப்புரையின் பந்தி 2 தொடர்பான வேண்டுகோளைப் பொறுத்த அளவில், வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்புத் தங்கியுள்ள உண்மைகளின் கூற்று மற்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விபரிப்பு, கிடைக்கக்கூடியதாக இருக்கையில், வேண்டுகோள் அடிப்படையாகக் கொண்டிருந்த கட்டளையின் சட்டபூர்வமாக அனுமதிக்கக்கூடிய பிரதி 4. இந்த உறுப்புரையின் பந்திகள் 1 மற்றும் 2 இல் ஏற்பாடு வழங்கப்பட்டுள்ள தீர்மானங்கள் அல்லது நடவடிக்கைகள் வேண்டுகோள் விடுத்த அரச தரப்பின் உள்நாட்டுச் சட்டம் மற்றும் செயல்விதிசார்ந்த சட்டம் அல்லது வேண்டுகோள் விடுக்கப்படும் அரச தரப்புத் தொடர்பாக அது கடப்படத்தப்பட்டிருக்கக்கூடிய ஏதாவது இருதரப்பு அல்லது பல்தரப்பு உடன்படிக்கை அல்லது ஏற்பாடு ஆகியவற்றிற்கு அமைவாகவும் அவற்றிற்கு உட்பட்டும் அந்த அரச தரப்புக்களினால் எடுக்கப்படலாம் 5. ஒஹ்வொரு அரச தரப்பும் இந்த உறுப்புரைக்குச் செயலூக்கமளிக்கும் அதன் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரதிகளையும் அவ்வாறான சட்டங்களுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் மேற்கொள்ளப்பட்ட பிற்பட்ட மாற்றங்களையும் அல்லது அதன் விபரிப்புக்களையும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கலாம். 6. சம்பந்தப்பட்ட அரச தரப்பு, சம்பந்தப்பட்ட உடன்டிக்கை இருக்கின்றமைக்கு வரையறுக்கப்பட்டதாக, இந்த உறுப்புரையின் பந்திகள் 1 மற்றும் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ளத் தெரிவுசெய்தால், அந்த அரச தரப்பு இந்தச் சமவாயத்தினை உடன்படிக்கைக்கு அவசியமான மற்றும் போதியதான உடன்படிக்கை அடிப்படையாகக் கருதும் 7. வேண்டுகோள் விடுக்கப்பட்ட அரச தரப்புக்குப் போதிய மற்றும் உரிய காலத்திலான சான்றுகள் கிடைக்காவிட்டால் அல்லது சொத்தானது அற்பமான பெறுமதியினைக் கொண்டிருந்தால் இந்த உடன்படிக்கையின் கீழ் ஒத்துழைப்பு மறுக்கப்படலாம் அல்லது தற்காலிக ஏற்பாடுகள் அகற்றப்படலாம். 8. இந்த உறுப்புரையினை அடியொட்டி ஏதாவது தற்காலிக ஏற்பாட்டினை அகற்றுவதற்கு முன்னர், வேண்டுகோள் விடுக்கப்பட்ட அரச

தரப்பு, சாத்தியமான சகல சந்தர்ப்பங்களிலும், நடவடிக்கைகளைத் தொடர்வதற்குச் சாதகமான காரணங்களை வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பு சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பினை வழங்க வேண்டும்.9. இந்த உறுப்புரையின் ஏற்பாடுகளை உண்மையான மூன்றாந் தரப்பின் உரிமைகளைப் பாதிக்கின்றவையாக அர்த்தப்படுத்தக் கூடாது.

## உறுப்புரை 56. விசேட ஒத்துழைப்பு

அதன் உள்நாட்டுச் சட்டத்திற்குப் பாரபட்சமின்றி, ஒவ்வொரு அரச தரப்பும், இந்தச் சமவாயத்திற்கு அமைவாக நிலைநாட்டப்பட்ட குற்றங்களினால் பெறப்பட்டவைகள் பற்றிய தகவல்களை அதன் சொந்த விசாரணைகள், சட்ட நடவடிக்கைகள் அல்லது நீதிமுறை நடவடிக்கைகள் ஆகியவற்றிற்குப் பாதிப்பு ஏற்படாமல் மற்றைய அரச தரப்பின் முன்வேண்டுகோள் இன்றி, அவ்வாறான தகவல்களின் வெளிக்கூறலானது அத்தகவலைப் பெறும் அரச தரப்பு மேற்கொள்ளும் விசாரணைகள், சட்ட நடவடிக்கைகள் அல்லது நீதிமுறை நடவடிக்கைகள் ஆகியவற்றிற்கு உதவலாம் அல்லது சமவாயத்தின் அத்தியாயத்தின் கீழ் அந்த அரச தரப்பின் வேண்டுகோளுக்கு இட்டுச் செல்லலாம் என நினைத்தால், அத்தகவல்களை அனுப்பிவைப்பதற்கு அனுமதியளிப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

## உறுப்புரை 57. சொத்துக்களை மீள ஒப்படைத்தலும் அகற்றலும்

1. இந்தச் சமவாயத்தின் உறுப்புரை 31 அல்லது 51 இனை அடியொட்டியதாக அரச தரப்பொன்றினால் கைப்பற்றப்பட்ட சொத்தானது, இந்தச் சமயவாயத்தின் ஏற்பாடுகளின்படியும் அந்த அரச தரப்பின் உள்நாட்டுச் சட்டத்திற்கு அமைவாகவும் அகற்றப்படலாம். இவ்வாறு அகற்றுவதில் அச்சொத்தினை அதன் முன்னைய சட்டமுறைப்படியான உரிமையாளரிடம் மீள ஒப்படைப்பதும் அடங்குகின்றது. 2. ஓஒவ்வொரு அரச தரப்பும் அதன் உள்நாட்டுச் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு அமைவாக, உண்மையான மூன்றாந் தரப்பின் உரிமைகளைக் கருத்திற்கொண்டு, இந்தச் சமவாயத்திற்கு அமைவாக, மற்றுமொரு அரச தரப்பினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பேரில் செயற்படுகையில், அதன் தகைமை வாய்ந்த அதிகாரசபைகள் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை மீள ஒப்படைப்பதனை இயலுமாக்குவதற்காக, அவ்வாறான சட்டவாக்க ஏற்பாடுகளையும் வேறு ஏற்பாடுகளையும் ஏற்று நடைமுறைப்படுத்த முடியும். 3. இந்தச் சமவாயத்தின் உறுப்புரைகள் 46 மற்றும் 55 இற்கு அமைவாகவும் பந்திகள் 1 மற்றும் 2 இற்கு அமைவாகவும் வேண்டுகோள் விடுக்கப்பட்ட அரச தரப்பு: (அ) இந்தச் சமவாயத்தின் உறுப்புரைகள் 17 மற்றும் 23 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அரச நிதியினைக் கையாடல் சம்பவத்தில் அல்லது கையாடப்பட்ட அரச நிதியின் பணத்தினைத் தூய்தாக்கம் செய்கையில், உறுப்புரை 55 இற்கு அமைவாகக் கைப்பற்றல் நிறைவேற்றப்பட்டபோது, மேலும் வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பின் இறுதித் தீர்ப்பின் அடிப்படையிலும், வேண்டுகோள் விடுக்கப்பட்ட அரச தரப்பினால் விட்டுவிடப்படக்கூடிய ஒரு வேண்டுகோள், கைப்பற்றப்பட்ட சொத்தினை வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பிடம் மீள ஒப்படைக்கலாம் (ஆ) சமவாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதாவது குற்றத்தினால் பெறப்பட்டவை தொடர்பான சம்பவங்களில், உறுப்புரை 55 இற்கு அமைவாகக் கைப்பற்றல் நிறைவேற்றப்பட்டபோது, மேலும் வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பின் இறுதித் தீர்ப்பின் அடிப்படையிலும், வேண்டுகோள் விடுக்கப்பட்ட அரச தரப்பினால் விட்டுவிடப்படக்கூடிய ஒரு வேண்டுகோள், வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பு அவ்வாறு கைப்பற்றப்பட்ட சொத்தின் முன்னைய உரித்தாண்மையினை நியாயமாக நிலைநாட்டுகையில் அல்லது வேண்டுகோள் விடுக்கப்பட்ட அரச தரப்பு வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்புக்கு ஏற்பட்ட சேதத்தினைக் கைப்பற்றப்பட்ட சொத்தினை மீள ஒப்படைப்பதற்கான அடிப்படையாக அங்கீகரிக்கையில், கைப்பற்றப்பட்ட சொத்தினை வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பிடம் மீள ஒப்படைக்கலாம் (இ) ஏனைய அனைத்துச் சம்பவங்களிலும், கைப்பற்றப்பட்ட சொத்தினை வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்பிடம் மீள ஒப்படைப்பதற்கும், அவ்வாறான சொத்தினை அதன் முன்னைய சட்டமுறைப்படியான உரிமையாளர்களிடம் மீள ஒப்படைப்பதற்கும் அல்லது குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கும் முன்னுரிமைக் கருதுகோள்கள் வழங்கவும். 4. பொருத்தமானபோது, அரச தரப்புக்கள் வேறுவிதமாகத் தீர்மானிக்காவிட்டால், இந்த உறுப்புரையினை அடியொட்டியதாகக் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை மீள ஒப்படைப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு இட்டுச்சென்ற விசாரணைகளினால், சட்ட நடவடிக்கைகளினால் அல்லது நீதிமுறை நடவடிக்கைகளினால் ஏற்பட்ட நியாயமான செலவினை வேண்டுகோள் விடுக்கும் அரச தரப்புக் கழிக்கலாம். 5. பொருத்தமானபோது, கைப்பற்றப்பட்ட சொத்தின் இறுதி அகற்றலுக்காக, சம்பவங்களின் தனித்தனியான அடிப்படையில், முடிவான உடன்படிக்கைகளில் அல்லது பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய உடன்படிக்கைகளில் விசேட கவனம் செலுத்தலாம்.

## உறுப்புரை 58. நிதிப் புலனாய்வுப் பிரிவு.

இந்தச் சமவாயத்திற்கு அமைவாக நிலைநாட்டப்பட்ட குற்றங்களினால் பெறப்பட்டவற்றினை மாற்றுவதனைத் தடுப்பதற்கும் எதிர்ப்பதற்கும் மேலும் அவ்வாறு பெறப்பட்டவற்றினை மீட்பதற்கான வழிவகைகளை மேம்படுத்துவதற்கும் அரசுகள் தரப்புக்கள் ஒன்று மற்றொன்றுடன் ஒத்துழைக்கலாம். இதனை நிறைவேற்றுவதற்காக, சந்தேகத்துக்குரிய நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய முறைப்பாட்டினைப் பெற்றுக்கொள்ளவும் பகுப்பாய்வு செய்யவும் அதனை தகைமை வாய்ந்த அதிகாரசபைகளுக்குத் தெரியப்படுத்தவும் பொறுப்புவாய்ந்த நிதிப் புலனாய்வுப் பிரிவு ஒன்றினை நிறுவுவதைக் கருத்திற்கொள்ளலாம். உறுப்புரை 59. இருதரப்பு மற்றும் பல்தரப்பு உடன்படிக்கைகள் மற்றும் ஏற்பாடுகள். சுமவாயத்தின் இந்த அத்தியாயத்தினை அடியொட்டியதாகப் பொறுப்பேற்கப்பட்ட சர்வதேச ஒத்துழைப்பின் செயற்திறனினை அதிகரிப்பதற்கு அரசுகள் தரப்புக்கள் முடிவான இருதரப்பு அல்லது பல்தரப்பு உடன்படிக்கைகள் அல்லது ஏற்பாடுகளைக் கருத்திற்கொள்ளலாம்.

Transparency International Sri Lanka
5/1
Elibank Road
Colombo 05
Sri Lanka

Phone: +94 0114369781
Fax: +94 011 2 501 707

tisl@tisrilanka.org
www.tisrilanka.org

facebook.com/tisrilanka
twitter.com/tisrilanka

ISBN 978-955-1281-95-3
9 789551 281953